KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

# நன்னெறிக் கல்வி

# PENDIDIKAN MORAL

ஆண்டு
TAHUN
6

தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி

SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH
KSSR
(SEMAKAN 2017)
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

PENDIDIKAN MORAL TAHUN 6 SJKT நன்னெறிக் கல்வி ஆண்டு 6



RM16.50

ISBN 978-967-2811-09-1
9 789672 811091
ET116001

# RUKUN NEGARA

**Bahawasanya Negara Kita Malaysia**
mendukung cita-cita hendak;

Mencapai perpaduan yang lebih erat dalam kalangan
seluruh masyarakatnya;

Memelihara satu cara hidup demokrasi;

Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;

Menjamin satu cara yang liberal terhadap
tradisi-tradisi kebudayaannya yang kaya dan pelbagai corak;

Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia,
berikrar akan menumpukan
seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut
berdasarkan prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

(Sumber: Jabatan Penerangan, Kementerian Komunikasi dan Multimedia Malaysia)

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# நன்னெறிக் கல்வி

# PENDIDIKAN MORAL

ஆண்டு TAHUN 6

தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி

SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL


ஆசிரியர்கள் / PENULIS

ப. செல்வமணி / P. SELVAMANI

மு. அமுதசூரியா / M. AMUTHASURIYA

பதிப்பாசிரியர் / EDITOR

பெ. வேணுமதி / P. VENUMATHI

வடிவமைப்பாளர்கள் / PEREKA GRAFIK

சி. விசாலாட்சி / S. VISALATCHY

வெ. ஸ்ரீ விஜய விக்ரமன் / V. SRI VIJAYA VIKRAMAN

ஓவியர்கள் / ILUSTRATOR

சசுக்கி பின் ஸாக்காரியா / SAZUKI BIN ZAKARIA

முகமது பௌசி பின் முகமது புவாட் / MOHD FAUZI BIN MOHD FOAT



PENERBITAN JAYA BAKTI SDN. BHD.

2021

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

NO SIRI BUKU : 0037

KPM 2021 ISBN 978-967-2811-09-1

Cetakan Pertama 2021
©Kementerian Pendidikan Malaysia

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pendidikan Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

Diterbitkan untuk
Kementerian Pendidikan Malaysia oleh:
Penerbitan Jaya Bakti Sdn. Bhd.
No. 30, Wisma Jaya Bakti,
Jalan Cenderuh 2,
Batu 4, Jalan Ipoh,
51200 Kuala Lumpur.
Telefon: 03-62519399 (5 Talian)
Faksimili: 03-62519585
E-mel: infokuil@gmail.com

Reka Letak dan Atur Huruf:
Penerbitan Jaya Bakti Sdn. Bhd.
Muka Taip Teks: TSCu_Inaikathir
TSCu_Inaimathi
Saiz Muka Taip Teks: 13/9 poin

Dicetak oleh:
Vinlin Press Sdn. Bhd.
No.56, Jalan Meranti Permai,
Batu 15, Jalan Puchong,
47100 Puchong,
Selangor Darul Ehsan.

# PENGHARGAAN

Penerbitan pakej buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada pihak berikut :

* Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
* Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
* Bahagian Sumber dan Teknologi Pendidikan dan Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
* Perpustakaan Negara.
* SJKT Ldg. Sungai Choh, Rawang.
* Encik Thana Seelan A/L Thirumany
* Encik L. Sinniah

# உள்ளடக்கம்


முன்னுரை ........ v
படவுருக்களின் விளக்கம் ........ vi

## தொகுதி 1 இறை நம்பிக்கை

1. தேசியக் கோட்பாட்டில் இறை நம்பிக்கை ........ 1
2. இறைவனைப் போற்றுவோம் ........ 2
3. நம்பிக்கையில் இறைமை ........ 4
4. நாட்டின் வளப்பத்தைக் காப்பதில் சமயத்தின் பங்கு ........ 6
5. நாட்டின் வளப்பத்தில் இறைமை ........ 7
6. பொம்மை உருவக நாடகம் ........ 8
7. இறையாண்மையின் முக்கியத்துவம் ........ 9

மதிப்பீடு ........ 10

## தொகுதி 2 நன்மனம்

1. நன்மனம் அறிவோம் ........ 11
2. தொடரும் நன்மனச் சேவைகள் ........ 12
3. நாட்டிற்காக நன்மனம் துளிரட்டும் ........ 14
4. உதவுவோம் வாரீர் ........ 15
5. தேசத்தில் நன்மனம் ........ 16
6. நாட்டிற்காக உதவுவோம் ........ 17
7. சாதனையில் நன்மனம் ........ 18
8. பூச்செடி உருவாக்குவோம் வாரீர் ........ 19
9. நான் ஏன் பிறந்தேன்? ........ 20
10. நாட்டிற்காக நிவாரண நிதி ........ 21

மதிப்பீடு ........ 22

## தொகுதி 3 கடமையுணர்வு

1. சிறந்த குடிமகன் ........ 23
2. தேசியத்தில் கடமையுணர்வு ........ 24
3. பசுமைத் திட்டத்தில் கடமையுணர்வு ........ 25
4. நாட்டின் திட்டத்தில் கடமையுணர்வு ........ 26
5. என் நாடு; என் கடமை ........ 27
6. சாலை சட்டத்திட்டங்களைக் கடைப்பிடிப்பதில் எனது கடமை ........ 28
7. கடமை கொண்ட நெஞ்சம் ........ 30
8. குடிமகனின் கடமையுணர்வு ........ 31

மதிப்பீடு ........ 32

## தொகுதி 4 நன்றி நவில்தல்

1. மலேசிய திருநாடு ........ 33
2. என் தேசம் மலேசியா ........ 34
3. நாட்டின் தனித்தன்மை அறிவோம் ........ 35
4. மதித்து வாழ்வோம் ........ 36
5. நடனத்தில் தனித்தன்மை ........ 37
6. நாமும் அறிவோம் ........ 38
7. எங்கள் நாடு! இல்லை ஈடு! ........ 39
8. நம் நாட்டின் அரசமைப்பு ........ 40
9. நாட்டின் தனித்தன்மை! நாட்டின் மேன்மை ........ 41
10. தொங்காடி உருவாக்குவோம் ........ 42
11. நீ என்ன செய்வாய் ........ 43

மதிப்பீடு ........ 44

## தொகுதி 5 உயர்வெண்ணம்

1. பண்பின் உயர்வெண்ணம் ........ 45
2. விமான நிலையத்தில் உயர்வெண்ணம் ........ 46
3. உயர்வெண்ணத்தால் உயர்வோம் ........ 47
4. சேவைகள் பெறுவதில் உயர்வெண்ணம் ........ 48
5. பண்பில் உயர்வெண்ணம் ........ 49
6. உயர்வெண்ணத்தில் மனவுணர்வு ........ 50
7. உரையாடலில் உயர்வெண்ணம் ........ 51
8. உயர்வெண்ணத்தில் விடாமுயற்சி ........ 52
9. பேச்சுப் போட்டியில் உயர்வெண்ணம் ........ 53

மதிப்பீடு ........ 54

## தொகுதி 6 மரியாதை

1. மரியாதை துளிரட்டும் ........ 55
2. நாட்டின் அடையாளங்களை மதிப்போம் ........ 56
3. இனம் வேறு ஆனாலும் கொடி ஒன்றுதான் ........ 58
4. நாட்டின் அடையாளங்களில் பசுமை ........ 59
5. நன்றி மலேசியா ........ 60
6. உணர்வோம் வாரீர் ........ 61
7. வீரத்தின் அடையாளம் புலி ........ 62
8. தேசியப் பண் நாட்டின் அடையாளம் ........ 63
9. அடையாளத்தின் கடிகாரம் ........ 64
10. தேசிய சின்னத்தில் தனித்தன்மை ........ 65

மதிப்பீடு ........ 66

## தொகுதி 7 அன்புடைமை

1. நாட்டின் இயற்கை வளங்களை நேசிப்போம் ........ 67
2. அன்பு உள்ளம் ........ 68
3. நாட்டை அன்பால் நிரப்புவோம் ........ 69
4. பொது இடங்களை நேசிப்போம் ........ 70
5. என் எதிர்கால ஆசை ........ 71
6. அஞ்சல் அட்டையில் நாட்டின் மீது அன்பு ........ 72
7. சுற்றுச்சூழலில் அன்பு ........ 73
8. நாட்டின் சுற்றுச்சூழல் மேன்மை ........ 74
9. நாட்டின் தலைவர்கள் மீது அன்பு ........ 75

மதிப்பீடு ........ 76



KPM

## தொகுதி 8 நடுவுநிலைமை


1. நீதியை நிலைநாட்டுவோம் ........ 77
2. நம் நாட்டின் நீதியுடைமை ........ 78
3. நீதியுடைமை காப்போம் ........ 79
4. நாட்டில் நீதியுடைமை மேலோங்கட்டும் ........ 80
5. சார்பின்றிச் செயல்படுவோம் ........ 81
6. நீதியுடைமையில் நிர்வாகம் ........ 82
7. ஜீவகாருணியம் ........ 83
8. தேர்தல் செயல்முறைகள் ........ 84
9. வாருங்கள் உருவாக்குவோம் ........ 85
10. பொருள்கள் வாங்குவதில் நீதியுடைமை ........ 86
11. சேவையில் நடுவுநிலைமை ........ 87

மதிப்பீடு ........ 88


## தொகுதி 9 துணிவு


1. துணிவுடன் செயல்படு ........ 89
2. நாட்டின் அமைதியில் துணிவு ........ 90
3. நாட்டின் தன்மானத்தைக் காப்பதில் துணிவு ........ 92
4. நாட்டின் நற்பெயரைப் பாதுகாத்தல் ........ 93
5. என்ன செய்வாய்? ........ 94
6. மனதில் துணிவு வேண்டும் ........ 95
7. துணிந்து வாழக் கற்றுக்கொள் ........ 96
8. தட்டிக்கேட்பதில் துணிவு ........ 97

மதிப்பீடு ........ 98


## தொகுதி 10 நேர்மை


1. நேர்மையைப் போற்றுவோம் ........ 99
2. கடமையில் நேர்மை ........ 100
3. பல்லின மக்களிடையே நேர்மை ........ 101
4. மக்கள் நேர்மையானவர்களா? ........ 102
5. உதவி பெறுவதில் நேர்மை ........ 103
6. வருமானத்தில் நேர்மை ........ 104
7. நேர்மையின் முக்கியத்துவம் ........ 105
8. நேர்மை உண்டியல் செய்வோம் வாரீர்! ........ 106
9. சிந்தித்து செயல்படுவோம் ........ 107
9. கதைச் சங்கிலி ........ 108
10. நேர்மையைப் பாராட்டுவோம் ........ 109

மதிப்பீடு ........ 110


## தொகுதி 11 ஊக்கமுடைமை


1. ஊக்கத்தின் வெகுமதி ........ 111
2. ஊக்கத்தால் உயர்ந்தோர் ........ 112
3. பண்பின் ஊக்கமுடைமை ........ 114
4. பொருளாதாரத்தில் ஊக்கமுடைமை ........ 115
5. ஊக்கத்தின் மேன்மை ........ 116
6. போட்டியில் ஊக்கமுடைமை ........ 117
7. முயற்சி! பயிற்சி! வெற்றி! ........ 118
8. முயற்சியில் ஊக்கம் ........ 119

மதிப்பீடு ........ 120


## தொகுதி 12 ஒத்துழைப்பு


1. ஒன்றிணைவோம் வாரீர் ........ 121
2. நாட்டில் ஒத்துழைப்பு துளிரட்டும் ........ 122
3. ஒத்துழைப்பின் மேன்மை ........ 123
4. பண்பாட்டில் ஒத்துழைப்பு ........ 124
5. ஒத்துழைப்பை அமல்படுத்துவோம் ........ 125
6. ஒத்துழைப்புடன் திளைத்திருப்போம் ........ 126
7. ஒத்துழைப்பு நல்குவோம் ........ 128
8. ஒற்றுமையே வலிமையாம் ........ 129
9. கைக்கோர்ப்போம் வாரீர் ........ 130
10. ஒன்றிணைந்து செயல்படுவோம் ........ 131

மதிப்பீடு ........ 132


## தொகுதி 13 மிதமான மனப்பான்மை


1. சிக்கனம் சீரளிக்கும் ........ 133
2. சேவையில் மிதம் ........ 134
3. பொது இடங்களில் மிதம் ........ 135
4. நவீன வாழ்க்கை முறையில் மிதமான பண்பு ........ 137
5. உணவகத்தில் மிதமான மனப்பான்மை ........ 138
6. ஓடிச் சென்று அறிவோம் ........ 139
7. மிதமான வாழ்வே சிறந்தது ........ 140
8. மிதமான பயனீட்டாளர் ........ 141

மதிப்பீடு ........ 142


## தொகுதி 14 விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை


1. விட்டுக்கொடுத்து வாழ்வோம் ........ 143
2. விட்டுக்கொடுக்கும் மக்கள் ........ 144
3. சாலையில் விட்டுக்கொடுப்போம் ........ 145
4. விட்டுக்கொடுப்பதில் மேன்மை ........ 146
5. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஓங்கட்டும் ........ 147
6. நடைமுறையில் விட்டுக்கொடுப்போம் ........ 148
7. விட்டுக்கொடுப்பதில் பெருந்தன்மை ........ 149
8. ஒற்றுமை கோபுரம் ........ 150
9. துரிதமாக யோசிப்போம் ........ 151
10. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஓங்கட்டும் ........ 152

மதிப்பீடு ........ 153

# முன்னுரை

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு (குறள் 392)

வள்ளுவப் பெருமான் எண், எழுத்து ஆகிய இருவகைக் கலைகளையும் நம்முடைய கண்களுக்கு ஒப்பிடுகிறார். ஒரு மனிதனுக்கு நன்னடத்தையும் ஒழுக்கமும் மிக அவசியமாகும். இத்தகைய சிறப்புடைய பண்புகளை எழுத்தின்வழி மாணவரிடத்தில் புகுத்த உதவும் ஊடகமே நன்னெறிக் கல்வி பாடநூலாகும்.

'நன்னெறிக் கல்வி' எனும் ஆறாம் ஆண்டிற்கான இப்பாடநூல், மலேசியக் கல்வி அமைச்சின் ஆரம்பப்பள்ளிகளுக்கான சீராய்வு கலைத்திட்டத்தின் (KSSR Semakan) அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. தேசியக் கல்வித் தத்துவத்தின்படி, இப்பாடத்தின் உள்ளடக்கம், அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல், சமூகம் போன்ற கூறுகளை ஒன்றிணைத்து மாணவர்கள் நன்னெறிப் பண்புகள் நிறைந்தவராக வாழ துணைபுரிகிறது.

இப்பாடநூல் 'நானும் என் நாடும்' எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடப்பகுதியும் ஒவ்வொரு நெறியினை உணர்த்துவனவாக அமைந்துள்ளது. அவையாவன: இறைநம்பிக்கை, நன்மனம், கடமையுணர்வு, நன்றி நவில்தல், உயர்வெண்ணம், மரியாதை, அன்புடைமை, நடுவுநிலைமை, துணிவு, நேர்மை, ஊக்கமுடைமை, ஒத்துழைப்பு, மிதமான மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஆகிய பதினான்கு நெறிகளாகும்.

மேலும், இந்நெறிகள் ஒவ்வொன்றும் சிறுசிறு தலைப்புகளைக் கொண்டுள்ளன. இந்நூலிலுள்ள ஒவ்வொரு பக்கத்திலும் 21ஆம் நூற்றாண்டு பயிற்றியல், விரவி வரும் கூறுகள், ஆசிரியர்களுக்கான குறிப்புகள், கற்றல் தர எண்கள், நடவடிக்கைகள், உயர்நிலைச் சிந்தனைத்திறன் கேள்விகள், 'அறிந்து கொள்க' மற்றும் 'தகவல் துளி' போன்ற பகுதியில் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய கூடுதல் தகவல்கள் எனப் பலதரப்பட்ட கூறுகள் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து, மாணவர்களின் ஆர்வத்தையும் ஈடுபாட்டினையும் மேம்படுத்தும் நோக்கில் QR நோக்குக் குறியீடுகளும் இணைக்கப்பட்டுள்ளன.

நமது மாணவச் செல்வங்கள் ஒழுக்கச் சீலர்களாக விளங்க வேண்டும் எனும் நல்ல நோக்கத்தில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலானது, நல்ல மாணவச் சமுதாயத்தை உருவாக்கும் எனப் பெரிதும் நம்புகிறோம்.

நன்றி,
**நூலாசிரியர்கள்**

# இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள படவுருக்கள்




ஒவ்வொரு தொகுதியிலும் அறிமுகப் பக்கங்களின் படவுரு பாடப்பகுதியின் தலைப்பைச் சித்தரிக்கின்றது.




இப்படவுரு பாடப்பகுதியை அறிமுகம் செய்கிறது




இப்படவுரு ஒவ்வொரு பாடப்பகுதியின் கருத்துப்படிவத்தைச் சித்தரிக்கின்றது.




இப்படவுரு மாணவர்களை நடவடிக்கைகளில் மேலும் திடப்படுத்த வழங்கப்பட்டுள்ள பகுதியைக் காட்டுகின்றது.




இப்படவுரு நெறியை எளிமையாக உய்த்துணர வழி செய்யும் குறைநீக்கல் நடவடிக்கையைக் குறிக்கிறது.





மாணவர்களைச் சுயமாகச் செய்யத் தூண்டும் வளப்படுத்துதல் நடவடிக்கையை இப்படவுரு குறிக்கின்றது.




மாணவர்களுக்காகப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட பயிற்சிகள் அழகிய வண்ணப் படவுருவின் மூலம் குறிக்கப்பட்டுள்ளன.



இப்படவுரு மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட உயர்நிலைச் சிந்தனைத் திறன் கேள்விகளைக் குறிக்கின்றது.




ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் மேலும் சிறப்புடன் நடைபெற வழங்கப்பட்டுள்ள 'ஆசிரியர் குறிப்பு' பகுதியைக் காட்டுகின்றது.

**அறிந்து கொள்க**

'அறிந்து கொள்க' எனும் பகுதி மாணவர்கள் புதிய தகவல்களை அறிந்து செயல்பட வித்திடுகிறது.

**தகவல் துளி**

'தகவல் துளி' எனும் பகுதி மாணவர்களின் பொது அறிவு வளர்ச்சிக்கு மேலும் வித்திடுகிறது.



இப்படவுரு நடவடிக்கைகளைக் குறிக்கிறது.

## QR நோக்குக் குறியீடு

Download on the App Store | GET IT ON Google play

ஒரு தலைப்பின் உள்ளடக்கத்திற்குத் தொடர்புடைய தகவல்களைத் தேடி அறிந்திட மாணவர்களைத் தூண்டுதல்.

தொடர்புடைய தேடுபொருளை மாணவர்கள் விரைவில் தேடிட (QR) நோக்குக் குறியீடு துணைபுரிகிறது.

நெறி அறிமுகம்

# தொகுதி 1

## இறை நம்பிக்கை

பாட அறிமுகம்

### பாடம் 1 தேசியக் கோட்பாட்டில் இறை நம்பிக்கை






## பாடம் 2 இறைவனைப் போற்றுவோம்

நாட்டின் வளப்பத்திற்கு இறை நம்பிக்கை அவசியம் என ஆசிரியர் கூறிய கருத்தை மேலும் அறிய ஆறாம் ஆண்டில் பயிலும் நகுலன் திரட்டேடு ஒன்றைத் தயாரிக்க எண்ணினான். அவன் தன்னுடன் பயிலும் பல்வேறு மதத்தைச் சார்ந்த நண்பர்களின் உதவியை நாடினான்.





ஒரு நாளில் 5 முறை நாங்கள் இறைவனைத் தொழுவோம். திருக்குர்ஆன் போதனை நாட்டின் குடிமகனைக் கட்டொழுங்கு மிக்கவனாக உருவாக்குகிறது. திருக்குர்ஆன் வாசகங்கள் நாட்டின் வளப்பத்திற்குப் பெரிதும் உதவுகின்றன.

**சலீம்**



வணக்கம் நண்பர்களே, இப்பிரபஞ்சத்தை இறைவன் எனும் பரம்பொருள் இயக்குகின்றான் என்று நாங்கள் நம்புகிறோம். நாட்டின் வளப்பத்திற்கு பிரார்த்தனைவழி நாங்கள் இறைவனை வழிபடுவோம். அனைவரும் நேர்மறையான எண்ணங்களைக் கொண்டிருக்க பிரார்த்தனை வழிவகுக்கிறது.

**நகுலன்**



நாட்டின் வளப்பத்திற்கு அனைவரிடமும் அன்பு செலுத்த வேண்டும் என்ற கொள்கையை நாங்கள் பின்பற்றுகிறோம். நாங்கள் பிராணிகளின் மீதும் இயற்கை மீதும் அன்பு செலுத்துவோம்.



**டேவிட்**





புத்தர் பெருமான் கூறிய 'மிதமான வழிகள்' இன்னல்களைத் தவிர்த்து நாட்டின் வளப்பத்தைப் பெருக்குகிறது என்பதே எங்களின் குறிக்கோளாகும். நாங்கள் நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுத்து வாழ்வோம்.

மெங் லீ





நாட்டின் வளப்பத்தை மேம்படுத்த தீய சக்திகளைத் துரத்தி பயிர்கள் செழிப்பாக வளர இயற்கையை வழிபடுவோம். நாட்டின் வளப்பத்திற்காக இறைவனின் அனைத்துப் படைப்புகளிடத்திலும் மரியாதையுடனும் அன்பாகவும் நடந்து கொள்வோம்.



குனுல்



நம் நாட்டில் பின்பற்றப்படும் 'இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்' எனும் கோட்பாட்டிற்கு ஏற்ப நீ பிற மதத்தினரின் வழிப்பாட்டுத் தலத்திற்குச் சென்ற அனுபவத்தைப் பகிர்ந்து கொள்க.



1.1, 1.2

**ஆசிரியர் குறிப்பு**

- ருக்குன் நெகாரா கோட்பாட்டுடன் இறை நம்பிக்கையைத் தொடர்புபடுத்தி வகுப்பின் முன் விளக்கிக் கூறச் செய்தல்.
- நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைப் போலித்தம் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ.:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்




# பாடம் 3 நம்பிக்கையில் இறைமை

ஆனந்தி மலேசிய மக்களின் இறை நம்பிக்கைகளை அறிவதில் மிகவும் ஆர்வம் கொண்டவள். எனவே, அவள் நம் நாட்டின் வளப்பத்திற்குப் பல்வேறு மதத்தினரின் இறை நம்பிக்கைகளையும் அவர்கள் கடைப்பிடிக்கும் நெறிமுறைகளையும் காணொலி பதிவு செய்து தொலைவரியில் சக நண்பர்களுடன் பகிர எண்ணினாள்.





நாட்டின் வளப்பத்திற்காகத் தியாகம் செய்தல்.
'கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே!'

(பகவத் கீதை - தொகுதி 2 வாக்கியம் 47)





- வழிபாட்டுத் தலங்களில் அன்னதானம் வழங்குதல்.
- இயலாதவர்களுக்கு உதவ வேண்டும்.







- நாட்டின் வளப்பத்திற்காக மசூதியில் 'யாசீன்' ஓதுதல்.
- மக்களை நல்வழிபடுத்த சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுதல்.



நாட்டின் வளப்பத்திற்கு நேர்மையான முறையில் வருமானத்தை ஈட்டி மனிதநேயத்தைப் போற்றுதல்.

(மூலம்: ஸ்ரீ குரு கிரந்த் சாகிப் பக்கம் 1245)








பலனை எதிர்பார்க்காமல் அனைத்து சமூகத்தினருக்கும் உதவி செய்யத் தயாராக இருத்தல்.

1. நாட்டின் வளப்பத்திற்கு வழிப்பாட்டுத் தலங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதனை இருவராகக் கலந்துரையாடி உயர்ந்த கோபுரம் உருவாக்குக.
2. இறை நம்பிக்கைகள் நாட்டின் வளப்பத்திற்கு எவ்வாறு துணைபுரிகின்றன என்பதைப் பட்டியலிடுக.

1.3
1.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளப்பத்திற்கு இறை நம்பிக்கையைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை விவரிக்கப் பணித்தல்.
- நாட்டின் வளப்பத்திற்கு இறை நம்பிக்கையை அமல்படுத்தும்போது ஏற்படும் மனவுணர்வைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

வளப்படுத்துதல்

## பாடம் 4 நாட்டின் வளப்பத்தைக் காப்பதில் சமயத்தின் பங்கு



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தேசிய நூலகம் ஆறாம் ஆண்டு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்தது. தேசிய அளவிலான இப்போட்டியில் பங்கேற்குமாறு ஆண்டு 6 மல்லிகையின் வகுப்பாசிரியர் தம் மாணவர்களைக் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க 6 மல்லிகை மாணவர்கள் நாட்டின் வளப்பத்தில் சமயத்தின் பங்கினைக் குறிக்கும் பின்வரும் தகவல்களைத் தேடினர்.

சமய நம்பிக்கைகள் வாழ்க்கையின் வழிகாட்டியாக விளங்குகின்றன.
- சமய நம்பிக்கைக்குப் புறம்பாகச் செயல்படக் கூடாது.
- தவறாது இறை வழிபாட்டை மேற்கொள்ளுதல்.

சமூக சீர்கேடுகளைக் குறைக்கலாம்.
- எந்தச் சமயமும் தமது மதத்தினர் தவறான செயல்களில் ஈடுபட வலியுறுத்தவில்லை.
- நேர்மையான முறையில் பணம் ஈட்டுதல்.

பல்லின மக்களிடையே விட்டுக்கொடுக்கும் பண்பினை வளர்க்கிறது.
- ஒவ்வோர் இனத்தவரின் சமய நிகழ்ச்சிகளிலும் கொண்டாட்டங்களிலும் மதிக்கும் பண்பினை வளர்க்கிறது.
- இரத ஊர்வலத்தின்போது வாகனமோட்டிகள் விட்டுக்கொடுத்துச் செல்லுதல்.

நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்குகிறது.
- அனைவரும் ஒன்றிணைந்து பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர்.
- எ.கா: திறந்த இல்ல உபசரிப்பு.

1. வேகமாய் எழுதுவோம் (Rocket Writing) நடவடிக்கை வாயிலாக நாட்டில் கொண்டாடப்படும் சமய நிகழ்வுகளை எழுதுக.
2. நாட்டின் வளப்பத்திற்காகப் பிற இன சமய நம்பிக்கைகளை மதித்து நடக்கும்போது ஏற்படும் மனவுணர்வை விவரிக்கவும்.

1.2
1.3
1.4

**ஆசிரியர் குறிப்பு**
- மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கை செயல்களை இணையம் வாயிலாகச் சேகரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர் / பரிவுமிக்கவர்

திடப்படுத்துதல்

# பாடம் 5 நாட்டின் வளப்பத்தில் இறைமை

வெள்ளிக்கிழமை அன்று, கோயிலில் நடைபெற்ற சிறப்புப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட வானதி கோயில் தலைவருடன் உரையாடுகிறாள்.

> கருணையும் அன்பும் நிறைந்த இறைவா. எல்லா உயிர்களிலும் ஊடுருவி எங்கும் நிறைந்து சர்வ வல்லமையும் பொருந்திய பரம்பொருளாம் உம்மை வணங்கி பணிகின்றோம். எங்கள் நாடு கோவிட்-19 பெருந்தொற்று நோயிலிருந்து விடுபட அருள்வீராக. நாட்டு மக்கள் நலமாக வாழ ஆசி வழங்குவீராக. நாடு வளம் பெற கருணை பொழிவீராக. உம் அருளுக்கும் கருணைக்கும் கோடான கோடி நன்றிகள்.

1 வணக்கம், ஐயா! இன்று சிறப்புப் பிரார்த்தனையில் நான் கலந்து கொண்டேன்.

2 மிக்க மகிழ்ச்சி வானதி.

3 ஐயா, இப்பிரார்த்தனை நடைபெறுவதன் நோக்கம் என்ன?

4 இது நம் நாட்டின் வளப்பத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்புப் பிரார்த்தனையாகும்.

5 அப்படியா? இதைப் பற்றி மேலும் விவரமாகக் கூறுங்கள், ஐயா.

6 நம் நாட்டு மக்கள் கோவிட்-19 என்ற உயிர்க்கொல்லி நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால், அதிலிருந்து விடுபட இறைவனிடம் பிரார்த்தனை செய்யப்படுகிறது.

7 இப்பிரார்த்தனையில் கலந்து கொண்டதால் நாட்டின் வளப்பத்திற்கு நான் ஆற்றிய பங்களிப்பை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன், ஐயா.

8 இந்துக்கள் மட்டுமின்றி நம் நாட்டில் உள்ள மற்ற இனத்தவர்களும் நாட்டின் வளப்பத்திற்காக இவ்வாறான வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். இதைத்தான் நம் நாட்டின் 'ருக்குன் நெகாரா'வின் முதல் கோட்பாடு குறிக்கின்றது.

9 மிக்க நன்றி, ஐயா.





மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைக் கருத்தூற்று முறைமையில் மேற்கொள்க.

1.4
1.5

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கை மேற்கொள்ளும்போது ஏற்படும் மனவுணர்வைப் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

## பாடம் 6 பொம்மை உருவக நாடகம்

குறைநீக்கல்

தேவையான பொருள்கள்: பனிக்கூழ் குச்சி, பசை, கத்தரிக்கோல், கருப்பு, சிவப்பு நிற மைத்தூவல், திரவ வண்ணம், வண்ணத்தாள்கள்.





பனிக்கூழ் குச்சிகளை வடிவத்திற்கு ஏற்ப தயார்ப்படுத்துதவும்.



தேவையான குச்சிகளுக்கு வண்ணம் தீட்டவும்.



வண்ணம் பூசியவுடன் குச்சிகளால் பொம்மை உருவாக்கவும்.



பொம்மையை உருவாக்கிய பின்னர், பல்லின மக்களின் முகத்தைத் தேர்ந்தெடுத்து ஒட்டவும். (எ.கா: சீனர், மலாய்க்காரர், இந்தியர்)



இறுதியாக, மாணவர்கள் பொம்மையுடன் பாகமேற்று கருத்துகளைப் பரிமாறவும்.



முழுமையான பொம்மை

அறிந்திடுக

நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்தும் வழிமுறைகளைக் குழு முறையில் பொம்மை உருவக நாடகம் படைத்திடுக.

1.2
1.4
1.5

ஆசிரியர் குறிப்பு

- மாணவர்கள் நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கைகளை அமல்படுத்தும் வழிமுறைகளின் முக்கியத்துவத்தை வட்ட வரைபடத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தகவல் நிறைந்தவர்

வளப்படுத்துதல்

# பாடம் 7 இறையாண்மையின் முக்கியத்துவம்

ஆறாம் ஆண்டில் பயிலும் மாணவர்கள் ஓய்வு நேரத்தின்போது மலேசிய நாட்டின் வளப்பத்திற்குத் தங்களின் மதம் சார்ந்த உதவிகளைப் பற்றி கலந்துரையாடிக் கொண்டிருந்தனர்.

## நாட்டின் வளப்பத்தில் நமது கடமை

| | |
|---|---|
| இறைவன் ஒருவரே என்ற எண்ணத்துடன் எல்லா இனத்தவரின் மத நம்பிக்கைகளை மதித்தல் | ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற எண்ணத்துடன் பிற இனத்தவரின் நம்பிக்கைகளை மதித்தல் |
| இறைவனே உயர்ந்தவர் என்பதால் மனிதர்களிடம் உயர்வு தாழ்வு பாராமல் உறவாடுதல் | கடவுளே மிகப்பெரியவர் என்றுணர்ந்து அனைவரிடமும் பேதமின்றிப் பழகுதல் |
| யாசின் படித்தல் | கூட்டுப் பிரார்த்தனை செய்தல் |
| பிறருக்கு உதவி செய்யும் வகையில் ‘சாகாட்’ வழங்குதல் | பிறருக்கு உதவி செய்யும் வகையில் ஆலயங்களில் அட்சய பாத்திரத் திட்டத்தை மேற்கொள்ளுதல் |
| எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டுதல் | எல்லா உயிரினங்களிலும் இறைவன் இருப்பதாய் நம்புதல் |
| திருக்குர்ஆன் போதனை வகுப்புகளில் கலந்து கொள்ளுதல் | திருமுறை, திருக்குறள், செய்யுள் போன்ற சமய நன்னெறி வகுப்புகளில் கலந்து கொள்ளுதல் |
| எல்லா இனத்தவர், மதத்தவர்களையும் மதித்து அன்பு காட்டுதல் | மனிதர்கள் அனைவரும் உறவினர் என்று எண்ணி அன்பு காட்டுதல் |


அசீம்


முல்லை

நாட்டின் வளப்பத்திற்குத் துணைபுரியும் வகையில் இதர மதத்தினர் செய்யும் உதவிகளைப் பல்நிலை நிரலொழுங்கு வரைபடம் வாயிலாக எழுதி படைத்திடுக.

1.4, 1.5

ஆசிரியர் குறிப்பு
- நாட்டின் வளப்பத்திற்காக இறை நம்பிக்கையை உய்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்தும் முறையைக் கூறச் செய்தல்.
- நாட்டின் வளப்பத்திற்கு இறை நம்பிக்கையைச் செயல்படுத்தப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

## மதிப்பீடு

செய்துபார்

1. நாட்டின் குடிமகனாகிய நீ இறை நம்பிக்கையைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குக.


நான் ஒரு மலேசியன்

முக்கியத்துவம்:

_______________

_______________

_______________

2. நாட்டு மக்களிடையே இறை நம்பிக்கை இல்லாவிட்டால் நம் நாட்டு வளப்பத்திற்கு ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுக.




நாட்டு வளப்பத்திற்கு ஏற்படும் விளைவுகள்:

_______________

_______________

_______________

3. 
5. No. Sijil Lahir
7. Agama
9. Warganegara

நவின் முதலாம் படிவம் நுழைவுப் பாரம் ஒன்றைப் பூர்த்தி செய்தான். அப்பாரத்தில் அவன் மதம் என்ற பகுதியைப் பூர்த்தி செய்வதன் அவசியத்தை எழுதுக.

_______________

_______________

4. கீழ்க்காணும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| சமயம் / நம்பிக்கை | மக்கள் பின்பற்றுபவை | நாட்டிற்கு ஏற்படும் நன்மைகள் |
|---|---|---|
| பௌத்த சமயம் | புத்தரின் உயரிய எட்டுப் படிநிலைகள் | நாட்டிற்கு நற்பெயர் ஏற்படும் |
| | | |
| | | |
| | | |


நெறி அறிமுகம்

# தொகுதி 2

# நன்மனம்

பாட அறிமுகம்

## பாடம் 1 நன்மனம் அறிவோம்




நல்ல மனம் வாழ்க; நாடு போற்ற வாழ்க;
தேன் தமிழ்போல் வான் மழைபோல்
சிறந்து என்றும் வாழ்க;
நல்ல மனம் வாழ்க; நாடு போற்ற வாழ்க!
(கவியரசு கண்ணதாசன்)



கேட்டு மகிழ்க

கருத்துப்படிவம்

# பாடம் 2 தொடரும் நன்மனச் சேவைகள்

ஆசிரியர் நன்னெறிக் கல்வி பாடவேளையின் போது நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்குபவர்களைப் பற்றிய செய்திப் படம் ஒன்றை ஒளியேற்றினார்.












மேற்கண்ட சூழலைப் போன்று வேறு எவ்வாறு நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்க இயலும் என எடுத்துக்காட்டுகளுடன் கூறவும்.

2.1
2.2

**ஆசிரியர் குறிப்பு**

- ஆபத்து அவசர வேளைகளிலும் இயற்கைப் பேரிடர் சமயங்களிலும் நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்குவதையொட்டிய காணொலியைக் கண்டு மீட்டுணரப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** பரிவுள்ளவர்

# பாடம் 3 நாட்டிற்காக நன்மனம் துளிரட்டும்

கருத்துப்படிவம்

இரவு வேளையில் கனியனும் அமுதனும் தன் தந்தையுடன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் செய்தியைப் பார்க்கின்றனர்.




கனியன் : அப்பா, நம் நாட்டுப் பிரதமர் எதனை நமக்கு வலியுறுத்துகிறார்?

அப்பா : நம் நாட்டு மக்கள் உதவியும் தார்மீக ஆதரவும் வழங்கும் பண்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

அமுதன் : நாட்டிற்கான உதவியும் தார்மீக ஆதரவையும் பற்றி மேலும் கூறுங்கள் அப்பா.

அப்பா : மக்களின் நல்வாழ்விற்கு அரசாங்கம் பல புதிய உத்திகளைக் கையாளுகிறது. இப்புதிய உத்திகளுக்கு நாம் ஆதரவு வழங்க வேண்டும்.

கனியன் : அப்படியென்றால், நம் நாட்டு மக்களுக்கு உதவி செய்யும் வகையில் உணவு வங்கியில் உணவுப் பொருள்கள் வைத்தோமே. அது சரிதானே அப்பா?

அப்பா : ஆம், கனியன். நம்மால் இயன்ற உதவிகளை மக்களுக்குச் செய்ய வேண்டும். மேலும், அரசாங்கம் சிறு தொழில் வணிகர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தையும் நாம் ஆதரிக்க வேண்டும்.

கனியன் : உங்களின் விளக்கத்திற்கு நன்றி அப்பா. மக்களுக்குப் பல வழிகளில் உதவி செய்வதால் மலேசிய நாட்டில் பிறந்ததற்கு நான் பெருமை கொள்கிறேன்.

1. நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்கும் பண்பாட்டினைச் சக நண்பர்களிடையே விளக்கிக் கூறவும்.
2. மேற்கண்ட நடவடிக்கையில் கலந்துரையாடப்பட்ட கருத்துகளை மனவோட்ட வரையில் எழுதவும்.

2.1
2.2
2.3

ஆசிரியர் குறிப்பு

- நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் தரும் சிற்றறிக்கையைத் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்



கருத்துப்படிவம்

# பாடம் 4 உதவுவோம் வாரீர்

நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்குவதன் முக்கியத்துவம் தொடர்பான ஆசிரியர் கொடுத்த இடுபணிக்கு மாணவர்கள் தகவல்களைச் சேகரித்து பால வரைபடத்தின்வழி வகுப்பில் படைத்தனர்.

**நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் தார்மீக ஆதரவு**

| | | | |
|---|---|---|---|
| நாட்டின் வெற்றிக்குப் போராடுதல் | இராணுவ வீரர்கள் பங்களிப்பு | தரமான பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தல் | சட்ட விரோதமான பேரணியில் கலந்து கொள்வதைப் புறக்கணித்தல் |
| உலக நாடுகளில் நற்பெயரை ஏற்படுத்துதல் | பாதுகாப்பான சூழ்நிலையில் மக்கள் வாழ்கின்றனர் | உள்நாட்டு உற்பத்தி பொருள்கள் அதிகரிப்பு | சுபிட்சமான வாழ்க்கை முறை |

அதுபோல அதுபோல அதுபோல



நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்குவதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிட்டுக் கூறவும்.

**தகவல் துளி**

பெரும்பொருளாற் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு (குறள் 732)

**பொருள்**: மிக்க பொருள் வளம் உடையதாய், எல்லோரும் விரும்பத்தக்கதாய்க் கேடு இல்லாததாய் மிகுதியாக விளைபொருள் தருவதே நாடாகும்.



2.3
2.4


ஆசிரியர் குறிப்பு

- நம் நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்குவதன் முக்கியத்துவத்தைச் சுழல் முறையில் (Rotating Review) கலந்துரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்

# பாடம் 5 தேசத்தில் நன்மனம்

வானதியின் தந்தை திரு.திலக், இயற்கைப் பேரிடர் நிர்வகிப்புத் துறையில் மேலதிகாரி ஆவார். அவ்வப்போது நாட்டில் நிகழும் இயற்கைப் பேரிடரின்போது நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்கும் தன் தந்தையின் சேவையைப் பற்றி ஆசிரியருடன் பகிர்ந்து கொண்டாள்.




எதிர்காலத்தில் நீ ஓர் உயர் அதிகாரியாக இருந்தால் நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவையும் எவ்வாறு மக்களுக்கு வழங்குவாய் என்பதைக் கலந்துரையாடுக.

2.2
2.4
2.5

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் நாட்டிற்காக உதவும்போது ஏற்படும் மனவுணர்வை மனவோட்டவரையில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## பாடம் 6 நாட்டிற்காக உதவுவோம்

கருத்துப்படிவம்

நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்கும் திட்டங்களை மாணவர்கள் இணையத்தில் தேடினர். அவற்றை சக நண்பர்களுடன் கலந்துரையாடிப் பட்டியலிட்டனர்.

**நாட்டிற்காக தார்மீக ஆதரவு வழங்குதல்**




வரிப்பணத்தை முறையாகச் செலுத்துதல்



நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறையைப் (SOP) பின்பற்றுதல்



ஆதரவற்றோர் இல்லங்களைத் தூய்மைப் படுத்துதல்



மிருகக்காட்சி சாலையைத் தூய்மைப் படுத்துதல்




உடல் உறுப்பு தானம் செய்தல்

1. நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்கும் வேறு செயல்களை மாணவர் தகவல் ஊடகங்களில் தேடி சுவரொட்டி தயாரித்திடுக.
2. தயாரித்த சுவரொட்டியை வகுப்பில் ஒட்டி கலந்துரையாடுக.

2.3
2.5

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்கும் பண்பை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் செயல்படுத்தும் முறையைக் கலந்துரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

திடப்படுத்துதல்

# பாடம் 7 சாதனையில் நன்மனம்

நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்கும் பண்பை உய்த்துணர்ந்து, பின்வரும் சூழல்களை மாணவர்கள் வகுப்பில் நடித்துக் காட்டினர்.

**சூழல் 1**

உடல் உறுப்பு சிக்கல்கள் உள்ள நாட்டு மக்களைக் காப்பாற்ற உடல் உறுப்பு தானத்திற்குப் பதிந்து கொள்ளுதல்.






**சூழல் 2**

இயற்கைப் பேரிடரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு சாரா இயக்கம் (NGO) ஒன்று உதவிக்கரம் நீட்டியது.

**சூழல் 3**

தடுப்பூசி செலுத்திக்கொள்ள வந்த மக்கள் கூடல் இடைவெளியைப் பின்பற்றுவதைத் தன்னார்வப் படையினர்கள் (RELA) உறுதி செய்வதன்வழி நாட்டிற்கு ஆதரவு வழங்கினர்.



1. மேற்கண்ட சூழல்களின் பண்பை உய்த்துணரவும்.
2. இச்சூழல்களை நடித்து தங்களின் மனவுணர்வை வெளிப்படுத்தவும்.

2.1 2.2 2.3 2.4

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் நாளிதழில் நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் நல்கும் செய்திகளைச் சேகரித்து திரட்டேடு தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுத்தல்


# பாடம் 8 பூச்செடி உருவாக்குவோம் வாரீர்


குறைநீக்கல்

மாணவர்கள் குழுவாரியாக நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்குவதால் ஏற்படும் மனவுணர்வுகளையும் முக்கியத்துவத்தையும் எழுதி பூச்செடியில் நிறைவு செய்தனர்.

தேவையான பொருள்கள்:

ஓவியத்தாள் | திரவ வண்ணம் | தூரிகை | மைத்தூவல்







நடவடிக்கை:

1. ஓவியத்தாளில் கிளைகள் வரைதல்.
2. கிளைகளுக்குக் கருப்பு நிறத்தில் வண்ணம் பூசுதல்.
3. விரல்களில் வண்ணம் பூசி பூக்களை அச்சிடுதல்.
4. வண்ணம் காய்ந்தவுடன் அதன் மீது செயல்முறை, முக்கியத்துவம், மனவுணர்வுகளை எழுதுதல்.
5. முழுமையான அழகுப் பூச்செடியை வகுப்பில் படைத்தல்.







பூர்த்தி செய்த பூச்செடியைக் களரி உலா (Gallery Walk) நடவடிக்கை வாயிலாகக் கலந்துரையாடவும்.

2.3
2.4
2.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்குவதால் ஏற்படும் மனவுணர்வுகளையும் முக்கியத்துவத்தையும் தொகுத்து வெண்தாளில் எழுதிக் குழுவாரியாகக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## பாடம் 9 நான் ஏன் பிறந்தேன்?

வளப்படுத்துதல்

ஆசிரியர் பாடவேளையில் நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் நல்கும் தலைப்பை ஒட்டிய பாடலை வகுப்பில் ஒலியேற்றினார்.

கேட்டு மகிழ்க

நான் ஏன் பிறந்தேன்
நாட்டுக்கு நலம் என்ன புரிந்தேன்
என்று நாளும் பொழுதும் வாழும் வரையில்
நினைத்திடு என் தோழா
நினைத்து செயல்படு என் தோழா
உடனே செயல்படு என் தோழா (x2)

நாடென்ன செய்தது நமக்கு
என கேள்விகள் கேட்பது எதற்கு
நீயென்ன செய்தாய் அதற்கு
என நினைத்தால் நன்மை உனக்கு (x2)
(நான் ஏன் பிறந்தேன்..)

மலையில் பிறந்த நதியால்
மக்கள் தாகம் தீர்ந்தது
மரத்தில் பிறந்த கனியால்
அவர் பசியும் தணிந்தது (x2)

கொடியில் பிறந்த மலரால்
எங்கும் வாசம் தவழ்ந்தது
அன்னை மடியில் பிறந்த உன்னால்
என்ன பயன் தான் விளைந்தது
(நான் ஏன் பிறந்தேன்..)

பத்துத் திங்கள் சுமந்தாளே
அவள் பெருமைப்பட வேண்டும்
உன்னைப் பெற்றதனால் அவள்
மற்றவராலே போற்றப்பட வேண்டும்
கற்றவர் சபையில் உனக்காக
தனி இடமும் தர வேண்டும்
உன் கண்ணில் ஒரு துளி நீர் வந்தாலும்
உலகம் அழ வேண்டும்
**(நான் ஏன் பிறந்தேன்..)**

**(கவிஞர் வாலி, நான் ஏன் பிறந்தேன்,** 1972)



நாட்டிற்காக நீ ஆதரவு வழங்கிய செயல்களில் ஒன்றை வகுப்பில் போலித்தம் செய்து காட்டுக.

2.4
2.5

ஆசிரியர் குறிப்பு

- பாடலை இசையுடன் பாடி அதிலுள்ள கருத்துகளைப் பட்டியலிடுக.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## பாடம் 10 நாட்டிற்காக நிவாரண நிதி

வளப்படுத்துதல்

நன்னெறிக் கல்வி இயங்கலை வகுப்பின்போது ஆசிரியர் தேசிய நிவாரண இயக்கத் திட்டம் தொடர்பாக விளக்கமளித்தார்.




நாட்டிற்காக உதவியும் தார்மீக ஆதரவும் வழங்கும்போது ஏற்படும் மனவுணர்வைக் கூறுக.

2.1 2.2 2.3 2.4 2.5

**ஆசிரியர் குறிப்பு**

- தேசிய நிவாரண இயக்கத்திற்கு மாணவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளைப் பட்டியலிட்டுக் கூறப் பணித்தல்.
- மாணவர்களை நிவாரண நிதி திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## மதிப்பீடு

செய்துபார்

1. அரசாங்கம் எடுக்கும் முயற்சி அல்லது திட்டத்திற்குத் தார்மீக ஆதரவு வழங்கும் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.

உதவியும் தார்மீக ஆதரவும் வழங்குவதன் முக்கியத்துவங்கள்

2. படத்தையொட்டி கேள்விகளுக்கு விடையளித்திடுக.



இச்சூழலில் பாதிக்கப்பட்டோருக்கு எவ்வாறு நன்மனத்துடன் தார்மீக ஆதரவு வழங்குவாய் என்பதைப் பட்டியலிடுக.

அ. ______________________________

ஆ. ______________________________

இ. ______________________________

3. கேள்வி 2இல் சூழலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதால் ஏற்படும் மனவுணர்வை வட்ட வரிப்படத்தில் எழுதுக.

# தொகுதி 3

நெறி அறிமுகம்

# கடமையுணர்வு

பாட அறிமுகம்

## பாடம் 1 சிறந்த குடிமகன்














கடமை புரிவார் இன்புறுவார் என்னும்
பண்டைக் கதை பேணோம்;
கடமை அறியோம் தொழில் அறியோம்;
கட்டென்பதனை வெட்டென்போம்;
மடமை சிறுமை துன்பம் பொய் வருத்தம்
நோவு மற்றவை போல்
கடமை நினைவும் தொலைத்திங்கு
களியுற்று என்றும் வாழ்குவமே.


(மகாகவி பாரதியார்)

கேட்டு மகிழ்க

# பாடம் 2 தேசியத்தில் கடமையுணர்வு

கருத்துப்படிவம்

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெறவிருக்கும் புதிர்ப்போட்டிக்காக மாணவர்கள், நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் கடமையுணர்வை வெளிப்படுத்தும் வழிமுறைகளைக் கலந்துரையாடுகின்றனர்.




1. ஒரு சிறந்த குடிமகனாகிய நீ கொண்டாடிய சுதந்திர தினத்தையொட்டிய அனுபவத்தை வகுப்பில் பகிர்ந்து கொள்க.
2. அக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட உன் மனவுணர்வைக் கூறுக.

3.1 3.2 3.3 3.4 3.5

**ஆசிரியர் குறிப்பு**

- குடிமகனின் கடமைகளையொட்டிய மனவோட்டவரை உருவாக்கப் பணித்தல்.
- குடிமகனின் கடமைகளைப் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## பாடம் 3 பசுமைத் திட்டத்தில் கடமையுணர்வு

கருத்துப்படிவம்








நாளுக்கு நாள் நாட்டிலுள்ள கனிம வளங்களும் இயற்கை வளங்களும் குன்றி வருவதாக ஊடகங்களில் செய்தி பரவி வருகின்றது. நாட்டிலுள்ள கனிம வளங்கள் ஒரு நாட்டின் முன்னேற்றத்தின் படிக்கல்லாகும். அத்தகைய கனிம வளங்களைப் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். அந்த வகையில் குறிஞ்சிக் கூடம் இளையோர் அணி 'மரம் நடுவோம்' என்று பரப்புரை முகாமை முன்னெடுத்துள்ளனர். நாடு தழுவிய நிலையில் நடைபெறவுள்ள இம்முகாமில் ஆறாம் ஆண்டு மாணவர்களாகிய நாம் இப்போட்டியில் கலந்து கொள்வது நமது கடமையாகும்.

**தகவல் துளி**

உலகக் காடுகள் தினம், மார்ச் 21, 2019.https://malaysiaindru.my/174035

மேற்கண்ட நிகழ்ச்சி திட்டமிட்டப்படி சிறப்பாக நடைபெற நாட்டின் குடிமகனாகிய நீ மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் குமிழி வரிப்படத்தில் எழுதுக.

3.2
3.3

**ஆசிரியர் குறிப்பு**

- இதுபோன்ற நிகழ்ச்சிகளை நாட்டு குடிமகன் புறக்கணித்தால் ஏற்படும் விளைவுகளைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் பராமரித்தல் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

திடப்படுத்துதல்

# பாடம் 4 நாட்டின் திட்டத்தில் கடமையுணர்வு

கோவிட்-19 பெருந்தொற்று நோயிலிருந்து விடுபடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாடு நடைமுறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தையும் அவற்றைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளையும் நாட்டு மக்களுக்குப் பரப்புரைவழி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.




கீழ்க்காணும் நடவடிக்கையைச் செய்து உன் நண்பர்களுடன் வகுப்பில் கலந்துரையாடுக.

| காரணம் | | விளைவு |
|---|---|---|
| அலட்சியப் போக்கு | குடிமகனாகத் தன் கடமையுணர்வைப் புறக்கணித்தால் ஏற்படும் விளைவுகள் | தொற்று அதிகரிப்பு |
| | | |
| | | |

3.2
3.3
3.4

ஆசிரியர் குறிப்பு

- குடிமகனாகத் தன் கடமையுணர்வைச் செயல்படுத்தும்போது ஏற்படும் மனவுணர்வைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** அமல்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்





# பாடம் 5 என் நாடு; என் கடமை

நமது நாட்டின் குடிமகனாக, பின்வரும் சூழல்களில் கடமையாற்றுவது நாட்டின் வளப்பத்தை மேம்படுத்தும்.




இணைய மோசடி தொடர்பான விழிப்புணர்வைப் பெறுதல்



நாட்டின் இரகசியத்தைப் பாதுகாத்தல்




போலிச் செய்திகள் பரப்புவதைத் தவிர்த்தல்



நாட்டின் அடையாளங்களைப் பாதுகாத்தல்

கேட்டு மகிழ்க



பல்வேறு சூழல்களில் கடமையுணர்வைச் செயல்படுத்தும்போது ஏற்படும் மனவுணர்வைக் காகிதச் சங்கிலியில் (Chain Link) எழுதி விளக்குக.



3.3
3.4

ஆசிரியர் குறிப்பு

- குடிமகனாகத் தன் கடமையுணர்வைச் செயல்படுத்தக்கூடிய வழிமுறைகளை நாடாளுமன்ற உறுப்பினராகப் பாகமேற்று நடிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** உலகலாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்



குறைநீக்கல்




1 உன் தங்கையின் கையைப் பிடித்துக் கொண்டு சாலையைக் கடத்தல்



2

3 சாலையின் நடுவே கிடந்த பந்தை எடுக்க ஓடுதல்



4

5 ஒரு பள்ளி பாதுகாவலர் துணையுடன் சாலையைக் கடத்தல்



6 தலைக்கவசம் அணிந்து மிதிவண்டி ஓட்டுதல்



15 மிகப் பெரிய சாலையைக் கடப்பதற்கு மேம்பாலத்தைப் பயன்படுத்தவில்லை



16 நடைபாதையில் மிதிவண்டி ஓட்டுதல்

17 இரவில் வெளிச்சமான உடை அணிந்து உந்துருளி ஓட்டுதல்



18



7 மகிழுந்தில் அனைவரும் பாதுகாப்புப் பட்டை அணிந்திருப்பதை உறுதி செய்தல்



8

9 தலைக்கவசம் இல்லாமல் உந்துருளி ஓட்டுதல்



10

11 சாலையைக் கடக்கும் முன் வலது, இடது, வலது பார்த்துத் தாண்டுதல்

12 சாலையில் குறிப்பிட்டிருக்கும் வேகக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தல்




13

14

சாலை விதிமுறைகளைப் பின்பற்றுவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

**விளையாடும் முறை:**

1. பகடையை உருட்டி கிடைக்கப்பெறும் எண்ணுக்கேற்ற சூழலை வாசித்து அதன் நன்மையை விளக்குதல்.
2. பச்சை அம்புக்குறி 3 அடி முன் செல்லவும்.
3. மஞ்சள் அம்புக்குறி 2 அடி முன் செல்லவும்.
4. சிவப்பு அம்புக்குறி 4 அடி பின் செல்லவும்.
5. உனக்குக் கிடைக்கப்பெறும் எண்ணுக்கேற்ற கட்டத்தில் சூழல் ஏதுமில்லையென்றால் நீ கடமையுணர்வுடன் கடைப்பிடித்த சாலை விதிமுறைகளைக் கூறவும்.
6. ஊதா நிறக் கட்டம் வந்தால் 2 ஆட்டங்கள் இழக்க நேரும்.



3.2
3.3

ஆசிரியர் குறிப்பு

- குடிமகனாகத் தன் கடமையுணர்வைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளை விவரிக்கப் பணித்தல்.

## பாடம் 7 கடமை கொண்ட நெஞ்சம்

வளப்படுத்துதல்

அறிந்திடுக

### நல்ல குடிமகனின் கடமைகள்

இத்திட்டங்களை மேம்படுத்துவதில் குடிமகனாகிய உன் கடமைகள் யாவை?

BUATAN MALAYSIA
MADE IN MALAYSIA

உள்நாட்டுப் பொருள்களை வாங்குதல்

வழிகள்

உள்நாட்டில் தயாரிக்கப்படும் வாகனங்களை வாங்குதல்

மனவுணர்வு

நாட்டின் பொருளாதார மேன்மைக்குப் பங்காற்றியதில் மனநிறைவு




உடல் உறுப்பு தானம் செய்தல்

வழிகள்

மனவுணர்வு



இயற்கைப் பேரிடர் நிதியுதவி வழங்குதல்

வழிகள்

மனவுணர்வு

ECO CHAMPION AWARDS

விலங்குகளை முற்றழிவிலிருந்து பாதுகாத்தல்

வழிகள்

மனவுணர்வு

3.2
3.4
3.5

ஆசிரியர் குறிப்பு

- மேற்கண்ட திட்டங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து சுவரொட்டி தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

## பாடம் 8 குடிமகனின் கடமையுணர்வு



வளப்படுத்துதல்

நாட்டின் குடிமகனாக மாணவர்கள் ஆற்றும் கடமைகளால் ஏற்படும் மனவுணர்வுகளைக் குறிப்பிடுக.

**சூழல் 1**

நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் எழிலனுக்குப் பூச்செடிகள் நடும் பொறுப்பு வழங்கப்பட்டது. அவன் அப்பணியினைப் பொறுப்புடன் செய்தான்.

**மனவுணர்வு:**

**சூழல் 2**

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்கத்தில் உதவி செய்ய தன்னார்வலராக திருமதி திலகாவும் திருமதி கலைவாணியும் கலந்து கொள்ள முன் வந்தனர்.

**மனவுணர்வு:**

**சூழல் 3**

நம் நாட்டில் உள்ள பிரதான சாலையில் குழிகள் ஏற்பட்டுள்ளன. அதனைப் பற்றி பொதுப்பணி இலாகாவிற்குப் புகார் செய்தல்.

**மனவுணர்வு:**

**சூழல் 4**

மலேசிய தினக் கொண்டாட்டத்தின்போது ‘மலேசிய நாட்டின் திறன்மிகு தலைவர்கள்’ என்ற தலைப்பில் சபா, சரவாக் மாநில மக்கள் இயங்கலையில் வலையரங்கம் ஒன்றைச் செய்தனர்.

**மனவுணர்வு:**



3.2
3.4

ஆசிரியர் குறிப்பு

- ‘நாட்டின் குடிமகனின் கடமை’ என்னும் தலைப்பில் மாணவர்கள் உரைவீச்சு ஒன்றைத் தயாரித்துப் படைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்




## மதிப்பீடு

செய்துபார்

நாட்டின் குடிமகனின் கடமையுணர்வை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் சிந்தனை வரிப்படத்தைப் பூர்த்தி செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| தேசிய தினக் கொண்டாட்டத்தில் பங்கேற்றல் | ஆற்றிய கடமைகள் | ஏற்பட்ட நன்மைகள் | ஏற்பட்ட மனவுணர்வு |
| 'கோவிட்-19' தடுப்பூசித் திட்டத்தில் பங்கேற்றல் | ஆற்றிய கடமைகள் | ஏற்பட்ட நன்மைகள் | ஏற்பட்ட மனவுணர்வு |
| தேசிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுத் திட்டத்தில் கலந்து கொள்ளுதல் | ஆற்றிய கடமைகள் | ஏற்பட்ட நன்மைகள் | ஏற்பட்ட மனவுணர்வு |
| பசுமையான நாட்டை உருவாக்கும் திட்டத்தில் பங்கேற்றல் | ஆற்றிய கடமைகள் | ஏற்பட்ட நன்மைகள் | ஏற்பட்ட மனவுணர்வு |

நெறி அறிமுகம்

# தொகுதி 4

# நன்றி நவில்தல்

பாட அறிமுகம்

## பாடம் 1 மலேசிய திருநாடு







நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கோல் என வேண்டா- நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருதலால்
(ஔவையார்- மூதுரை 01)



கேட்டு மகிழ்க



கருத்துப்படிவம்

# பாடம் 2 என் தேசம் மலேசியா

தேசிய அளவிலான காவாய் தினக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. அதில் டாயாக் சமூகத்தினர் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர்.




கேட்டு மகிழ்க



பல்வேறு இனம், சமயம், பண்பாடு, மொழி ஆகியவற்றைக் கொண்டிருக்கும் நம் நாட்டை எனக்கு மிகவும் பிடிக்கும். இவ்வாறான தனித்தன்மைகள் கொண்ட இந்நாட்டில் வாழ்வதில் பெருமிதம் கொள்கிறேன்.

**தகவல் துளி**

டாயாக் சமூகமானது, ஈபான் மற்றும் பிடாயு என்ற இரண்டு பெரிய இனத்தினையும் மூருட், கேலபிட், கென்யா என்ற சிறிய அளவிலான பழங்குடி இனங்களையும் உள்ளடக்கியுள்ளது.



4.1
4.2
4.4

**ஆசிரியர் குறிப்பு**

- பிற இனத்தவர்களின் தனித்தன்மையைக் குறித்துக் கையடக்க திரட்டேடு தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தகவல் நிறைந்தவர்

**கருத்துப்படிவம்**

# பாடம் 3 நாட்டின் தனித்தன்மை அறிவோம்

பல்லின மக்கள் வாழும் மலேசியத் திருநாட்டில் பல்வேறு பண்பாட்டு விழுமியங்கள் பின்பற்றப்படுகின்றன. மலேசிய மக்கள் அனைவரும் ஒருமித்த மனத்துடன் மலேசியர் என்ற சிந்தனையில் அனைத்துப் பண்பாடுகளையும் மதித்து வாழ்கின்றனர்.

இந்தியர்கள், சீனர்கள், மலாய்க்காரர்கள் ஆகிய அனைத்து இனத்தவராலும் பின்பற்றப்படுகின்ற பண்பாடுகளில் சில ஒற்றுமைகளும் உள்ளன. இந்தியர்கள் திருக்கார்த்திகை நாளில் இல்லங்களில் விளக்கேற்றி அலங்காரம் செய்கின்றனர். சீனர்கள் முழுமதி அணிச்சல் விழாவன்று (Mooncake Festival) 'தங்லோங்' கொண்டு அலங்காரம் செய்கின்றனர். அந்த 'தங்லோங்' உள்ளே விளக்கு ஏற்றி வைப்பர். தங்லோங்கின் நிறத்திற்கு ஏற்ப ஒளியின் பிரதிபலிப்பில் மாறுதல் காணப்படும். அதே போல், மலாய்க்காரர்கள் புனித மாதமாகக் கருதும் ரமலான் மாதத்தின் இறுதி இரண்டு வாரங்கள் தங்கள் இல்லங்களில் 'பெலித்தா' என்ற விளக்கு ஏற்றி அலங்காரம் செய்வர்.

ஆகவே, இம்மூவினத்தவரும் கொண்டாடுகின்ற பண்டிகை நாள்கள் வெவ்வேறாக இருந்தாலும், கொண்டாடுகின்ற முறையில் சில ஒற்றுமைகள் இருப்பதைக் காண முடிகிறது. வேற்றுமையில் ஒற்றுமை! இதுவே மலேசியத் திருநாட்டின் பெருமை!







1. பல்வேறு இனத்தவர்களின் உணவுகளைக் கண்காட்சியாக வைத்து கலந்துரையாடுக.
2. நாட்டு மக்கள் பிற இனத்தவர்களின் தனித்தன்மைகளை மதிக்காவிட்டால் என்ன நேரிடும்?

4.1
4.2
4.4

**ஆசிரியர் குறிப்பு**

- பல்வேறு இனத்தவரின் உணவு வகைகளின் படங்களைத் திரட்டி படவில்லை தயாரிக்கப் பணித்தல்.
- நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் பண்பைச் செயல்படுத்துவதால் விளையும் மனவுணர்வைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

கருத்துப்படிவம்

# பாடம் 4 மதித்து வாழ்வோம்

நாட்டின் குடிமகனாகிய நாம் தேசிய அளவில் கொண்டாடப்படும் திறந்த இல்ல உபசரிப்புகளில் கலந்து கொள்வதன் மூலம் பிற இனத்தவரின் பண்பாட்டு சிறப்புகளை அறிந்து கொள்ள முடிகிறது.










நாட்டின் வளப்பத்திற்காகப் பல்லினத்தவரின் தனித்தன்மையைப் போற்றி இணையராகக் கவிதை உருவாக்கிப் படைத்திடுக.

4.1 4.2 4.3 4.4 4.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் பல்லினத்தவரின் தனித்தன்மையைக் குறிக்கும் அவரவர் விழாக்களைப் பற்றி கலந்துரையாடப் பணித்தல்.
- பல்லின மக்களின் விழாக்களில் கலந்து கொள்வதால் ஏற்படும் மனவுணர்வைப் பகிர்ந்து கொள்ளப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** சீர்த்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

# பாடம் 5 நடனத்தில் தனித்தன்மை

நாட்டில் வாழும் பல்லின மக்களின் பண்பாட்டு நடனம் பற்றி படவில்லை காட்சி ஒன்றை ஆசிரியர் மாணவர்களிடம் பகிர்ந்தார்.




**விசிறி நடனம்**
தீய சக்தியை அழித்து நல்ல சக்தியை வரவேற்க ஆடப்படும் நடனமாகும்.

**மாக்யோங் நடனம்**
அறுவடைக்குப் பிறகு மகிழ்ச்சியை வெளிப்படுத்த மலாய்க்காரர்கள் ஆடும் நடனமாகும்.

**ஈபானியர் நடனம்**
அறுவடை திருநாளில் வெற்றியைக் கொண்டாட ஆடப்படும் நடனமாகும்.

**சாப்பின் நடனம்**
சுபகாரியங்கள் சுமூகமாக நடைபெற ஆடப்படும் நடனமாகும்.

**நாக நடனம்**
சீனப் புத்தாண்டின் போது எல்லையற்ற பலத்தைக் கொடுத்து குற்றச் செயல்களைத் தவிர்க்க ஆடப்படும் நடனமாகும்.

**சுமாசாவ் நடனம்**
நோயிலிருந்து பூரண குணமடைய ஆடப்படும் நடனமாகும்.

1. காணொலித் துணையுடன் பல்லின மக்களின் பண்பாட்டு நடனங்களை வகுப்பில் ஆடிக் காட்டுக.
2. நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் வகையில் பண்பாட்டு நடனங்களில் ஆடிய அனுபவத்தைக் கலந்துரையாடுக.

**தகவல் துளி**

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன் (குறள் 996)

4.4, 4.5

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் வகையில் மேலும் சில கலாச்சார நடனங்களின் படங்களைத் திரட்டி ஆக்கச் சிந்தனையோடு தகவல் படச்செருக்கேடு (Album Bermaklumat) தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** ஆக்கச் சிந்தனை

# பாடம் 6 நாமும் அறிவோம்

கருத்துப்படிவம்

ஆ சோங், ரம்லி மற்றும் நாதன் ஒரே வகுப்பில் பயிலும் ஆறாம் ஆண்டு மாணவர்கள் அவர்கள் புறப்பாட நடவடிக்கையின்போது தங்களின் பாரம்பரிய உடைகளையும் உணவுகளையும் பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர்.



நாங்கள் எங்கள் பாரம்பரியத்தைக் காக்க முயல்கிறோம்.

நாட்டின் தனித்தன்மையில் ஒன்றாக விளங்கும் பல்லினத்தவரின் உணவு பழக்கவழக்கங்களைப் பற்றி கலந்துரையாடவும்.

4.1
4.2
4.3

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் பல்லின மக்களின் தனித்தன்மையை மதிப்பதன் முக்கியத்துவத்தைப் போற்றும் வகையில் கண்காட்சி ஒன்றை ஆக்கச் சிந்தனையோடு குழுவாகத் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்



# எங்கள் நாடு! இல்லை ஈடு!

எங்கள் நாடு! எங்கள் நாடு!
எழில் மலேசியா - இன்பப்
பொழில் மலேசியா!
எங்கும் தேடு! இல்லை ஈடு!
இது மலேசியா - என்றும்
புது மலேசியா!

பொழியும் விண்ணும் விளையும் மண்ணும்
பொய்ப்ப தில்லையே - வாட
வைப்ப தில்லையே!
தொழில்க ளென்ன துறைக ளென்ன
தோற்ப தில்லையே - நாங்கள்
ஏற்ப தில்லையே!

மூன்று தமிழைப் போன்றிணங்கும்
மூன்றினங்களில் - நேயம்
முந்தும் நெஞ்சினில்
மூன்று மொழிகள் நான்கு நெறிகள்
தோன்றும் வண்ணவில் - வாழ்வில்
தொடரும் வானவில்!

**(கவிஞர் செ. சீனி நைனா முகம்மது)**

மாணவர்கள் நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் பண்பினைச் செயல்படுத்தும் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுக.

4.2
4.5

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் தனித்தன்மையை அன்றாட வாழ்வில் செயல்படுத்தும் முறையினைப் பற்றி சுயமாகக் கவிதை எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

# பாடம் 8 நம் நாட்டின் அரசமைப்பு

அரசமைப்பானது நம் நாட்டின் தனித்தன்மையில் ஒன்றாகும். சுதந்திரத்திற்குப் பின்பும் நம் நாட்டு மக்கள் அரசமைப்பைப் பின்பற்றி வருகின்றனர்.



மலாய் ஆட்சியாளர் மன்றம் பேரரசரைத் தெரிவு செய்கிறது.



பேரரசர் நாட்டின் ஒற்றுமையின் அடையாளமாக விளங்குகின்றார்.




**தகவல் துளி**

மலாய் ஆட்சியாளர் மன்றம் 1948ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்த மன்றம் ஒன்பது மலாய் அரசர்களையும் நான்கு மாநில ஆளுநர்களையும் கொண்ட ஓர் அமைப்பாகும்.



ஒன்பது சுல்தான்களில் ஒருவரைப் பேரரசராக நியமிக்க முடிவு செய்கிறது.



ஒவ்வொரு மலாய் ஆட்சியாளர்களும் சுழல் முறையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பேரரசராகப் பதவி ஏற்பர்.

நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் வகையில் மலேசிய பேரரசர்களின் படங்களைத் திரட்டி மரவடிவிலான படத்தொகுப்பை (Pohon Bergambar) உருவாக்குக.

4.4
4.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் பண்பைச் செயல்படுத்தும் வகையில் மாணவர்கள் ‘Daulat Tuanku’ என்ற தலைப்பில் சுவரொட்டி தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்



# பாடம் 9 நாட்டின் தனித்தன்மை! நாட்டின் மேன்மை!

திடப்படுத்துதல்

ஆண்டு 6 கதிரவன் வகுப்பு மாணவர்கள் தாங்கள் சேகரித்த நாட்டின் தனித்தன்மை தொடர்பான தபால் தலைகளை வகுப்பில் பகிர்ந்து கொண்டனர்.




தேசிய அஞ்சலகம் நம் நாட்டின் தனித்தன்மையைப் போற்றி அவ்வப்போது புதிய தபால் தலைகளை வெளியிடுகிறது. தபால் தலைகளில் நாட்டின் தனித்தன்மைகளை அச்சிட்டு வெளியிடுவதன்வழி நமது நாட்டு அடையாளங்கள் பாதுகாக்கப்படுகின்றன.



1. மாணவர்கள் தங்களின் இல்லங்களில் சேகரித்த தபால் தலைகளைத் திரட்டேடாகத் தயாரித்திடுக.
2. இம்மாதிரியான தனித்தன்மைகள் கொண்ட நீ வாங்கிய வேறு பொருள்களை விவரித்துக் கூறுக.



4.3
4.5

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் தனித்தன்மைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து கவரும் வண்ணத்தில் ஒரு தபால் தலையை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்

குறைநீக்கல்

## பாடம் 10 தொங்காடி உருவாக்குவோம்

தொங்காடி செய்து நாட்டின் தனித்தன்மையை அறிந்து மகிழ்வோம்.


### தேவையான பொருள்கள்:

வண்ணத்தாள் | கத்தரிக்கோல் | படங்கள் | தடித்த அட்டை | நூல் | பசை



### செய்யும் முறை:

1. வண்ணத்தாளில் தலைப்பினை எழுதி தடித்த அட்டையில் ஒட்டவும்.
2. பிடித்த வடிவங்களை வண்ணத்தாளில் வரைந்து வெட்டவும்.
3. நூலை அளந்து வெட்டிக் கொள்ளவும்.
4. தலைப்பு ஒட்டிய அட்டையின் பின் புறத்தில் நூல்களை ஒட்டிக் கொள்ளவும்.
5. நாட்டின் தனித்தன்மைகளைக் குறிக்கும் படங்களை ஒட்டவும். அவற்றை போற்றும் முக்கியத்துவத்தையும் மனவுணர்வையும் எழுதி ஒட்டவும்.
6. தயாரான தொங்காடியை வகுப்பில் மாட்டி அழகுப்படுத்தி மகிழுங்கள்.




4.1
4.2
4.3
4.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் தனித்தன்மையைப் போற்றும் வகையில் பல்வேறு இனத்தவரின் நடனங்களை ஆடப் பணித்தல்.

**வி.வ.கூ.:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

## பாடம் 11 நீ என்ன செய்வாய்?

வளப்படுத்துதல்

ஆசிரியர் 'நாட்டின் தனித்தன்மை' எனும் தலைப்பினை வழங்கி மாணவர்களைக் குழுவாரியாக விளையாடப் பணித்தார்.

விளையாடும் முறை:

1. மாணவர்கள் இரண்டு அணிகளாகப் பிரிதல்.
2. குழுத் தலைவர் ஒரு பந்தை எடுத்து அதிலுள்ள சூழலை வாசித்தல்.
3. குழு உறுப்பினர்கள் சூழலுக்குச் சரியான பதில் கூறினால் இரண்டு புள்ளிகள் வழங்கப்படும்.
4. தவறாகப் பதிலளித்தால் வேறு அணி மாணவர்கள் பதிலளிக்கலாம். அவர்களுக்கு ஒரு புள்ளி வழங்கப்படும்.
5. அனைத்து மாணவர்களும் இதே போன்று பந்தை எடுத்து விளையாட வேண்டும். அதிக புள்ளிகள் எடுக்கும் அணியே வெற்றியாளர்கள் எனக் கருதப்படும்.




எடுத்துக்காட்டு:

சூழல் 1:
நம் நாட்டைப் பற்றி முகநூல் நண்பர் ஒருவர் இழிவான செய்தியைப் பதிவேற்றம் செய்கிறார். நீ என்ன செய்வாய்?

சூழல் 2:
நாட்டை நேசிக்கும் நடவடிக்கையில் இணையும்போது உன் மனவுணர்வு என்ன?

ஆசிரியர் இதே போன்று வெவ்வேறு சூழலை மாணவர்களுக்கு வழங்கி நாட்டின் தனித்தன்மையைக் குறிக்கும் தகவலைத் திரட்டப் பணித்தல்.

4.4 ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் தனித்தன்மையைப் போற்றுவதால் ஏற்படும் மனவுணர்வைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்

## மதிப்பீடு

செய்துபார்

1.



சீனர்கள், பாரம்பரியச் சின்னமாகத் திகழும் ‘தங்லோங்’ தொங்க விடுவதன் காரணம் என்ன?

3. நாட்டை நேசிக்கும் நற்குடிமகனான நீ, நாட்டின் தனித்தன்மையைத் தற்காக்க என்ன செய்வாய்?

2. புதிரை வாசித்து விளங்கி கொண்டு நாட்டின் தனித்தன்மையைக் குறிக்கும் அடையாளங்களின் பெயரைக் குறிப்பிடுக.

**கேள்வி 1**

கோலாலம்பூரில் அமைந்துள்ள இக்கட்டடம் 1897இல் பிரிட்டிஷாரால் நிறுவப்பட்டது. இக்கட்டடம் மெர்டேக்கா சதுக்கத்தின் முன்புறம் அமைந்துள்ளது.

**கேள்வி 2**

‘பெரான்யோ’, ‘பிரபெய்ரா’ ஆகிய நடனங்கள் பின்வரும் சமூகத்தினரிடையே பிரசித்தி பெற்ற நடனங்களாகும். இந்நடனம் மலாக்கா மாநிலத்தில் போர்த்துகீசியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நடனமாகும்.

**கேள்வி 3**

முதலாம், இரண்டாம் உலகப் போரில் மடிந்த வீரர்களுக்காகக் கட்டப்பட்ட ஒரு நினைவாலயம். ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 11ஆம் திகதி இந்நினைவாலயத்தின் முன் மரியாதை நிமிர்த்த அணிவகுப்பு நடைபெறும்.


நெறி அறிமுகம்

# தொகுதி 5

# உயர்வெண்ணம்

பாட அறிமுகம்

## பாடம் 1 பண்பில் உயர்வெண்ணம்




நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை
நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும்
உன் உழைப்பால், நீ எண்ணியது
உன்னை வந்து சேரும்
நீ நீயாக இரு!

(டாக்டர் அப்துல் கலாம்)

## பாடம் 2 விமான நிலையத்தில் உயர்வெண்ணம்

கருத்துப்படிவம்

செந்தமிழன் வெளிநாட்டிற்குச் செல்ல விமான நிலையத்தில் தன் பெற்றோருடன் காத்திருந்தான்.




பொது இடங்களில் உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவம் எனும் தலைப்பில் நண்பர்களுடன் பேச்சுப் போட்டி நடவடிக்கையை மேற்கொள்க.

5.1
5.3
5.4
5.5

**ஆசிரியர் குறிப்பு**

- பொது இடங்களில் நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் பிற உயர்வெண்ணச் செயல்களை வெளிப்படுத்தும் எழுச்சிப் பாடல்களைப் பாடிக் காட்டப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

கருத்துப்படிவம்

# பாடம் 3 உயர்வெண்ணத்தால் உயர்வோம்

கலையமுதன் தேசிய அளவிலான உயர்வெண்ண மாணவர் போட்டியில் முதல் நிலையில் வெற்றியடைந்த விவரங்களை அயல்நாட்டிலுள்ள தனது தோழி கேத்ரினாவிடம் புலனம் வாயிலாகப் பகிர்ந்து கொண்டான்.




வாழ்த்துகள் கலையமுதன். மலேசியக் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்த தேசிய அளவிலான ‘உயர்வெண்ண மாணவர்’ போட்டியில் முதல் நிலை தலைமை மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாய்! மிக்க மகிழ்ச்சி.
10:05

நீ எப்படி இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டாய் என்று கூற முடியுமா?
10:05

மிக்க நன்றி கேத்ரினா. இப்போட்டிக்கு என்னை முன்மொழிந்தவர் ஆஸ்திரேலியா நாட்டுச் சுற்றுப்பயணி ஒருவராவார். அவருடன் நான் பேசும்போது பணிவாக நடந்து கொண்டதில் அவருக்கு என் மீது நல்ல எண்ணம் உருவாகியது. மேலும், நான் அவரிடம் வெளிப்படுத்திய உயர்வெண்ணச் செயலையும் அவர் பாராட்டினார்.
10:20

ஈராண்டுகளுக்கு முன் நான் மலேசியாவிற்கு வருகை புரிந்தபோது பெரும்பாலான மக்களிடம் உயர்வெண்ணச் செயல்களைக் கண்டு பிரமித்துப் போனேன். இதுவே உலக அரங்கில் மலேசியாவின் பெயர் நிலைத்து நிற்பதற்குக் காரணமாகத் திகழ்கிறது கலை.
10:40

நாட்டின் நற்பெயரைக் காக்கும் உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வைக் கருத்தூற்று முறையில் விளக்குதல்.

5.2
5.4
5.5

ஆசிரியர் குறிப்பு


- மாணவர்கள் வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளை வரவேற்கும் முறை குறித்து காணொலித் துணுக்கு ஒன்றை உருவாக்குதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: பயன்படுத்துதல் 21ஆம் நூ.தி: கொள்கையுள்ளவர்

# பாடம் 4 சேவைகள் பெறுவதில் உயர்வெண்ணம்

கருத்துப்படிவம்

மலேசியக் கல்வி அமைச்சு, நாடு தழுவிய அளவில் B40 பிரிவைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவச கைப்பேசியை வழங்கியது.




1. ஏன் குறிப்பிட்ட சில மாணவர்களுக்கு மட்டும் உதவிகள் கிடைக்கின்றன? கலந்துரையாடுக.
2. இதைப் போன்ற அனுபவம் உனக்கு உண்டா? இதனால் ஏற்பட்ட மனவுணர்வைக் குறிப்பிடுக.


5.2
5.4
5.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தை வளர்க்கும் வழிமுறைகளை ‘டீ கடை’ (Cafe) நடவடிக்கை வாயிலாக மேற்கொள்ளப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** பரிவுள்ளவர்

# பாடம் 5 பண்பில் உயர்வெண்ணம்




1. அனைத்துலக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட அனுபவம் உண்டா? உன் அனுபவத்தைக் கூறுக.
2. உலகலாவிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது நாட்டின் நற்பெயரை மேலோங்கச் செய்யும் வகையில் நீ எவ்வாறு நடந்து கொள்வாய்?

5.4
5.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்




# பாடம் 6 உயர்வெண்ணத்தில் மனவுணர்வு

பின்வரும் விளையாட்டு முறையில் நாட்டின் வளப்பத்தில் உயர்வெண்ணத்தை வெளிப்படுத்தும் மனவுணர்வுகளைக் கூறி மாணவர்கள் விளையாடினர்.


விளையாடும் முறை:

1. ஆசிரியர் சூழல்களை எழுதி கடித உறையில் போட்டு தயார் செய்தல்.
2. அவற்றை மூன்று நிலையங்களில் கீழ்க்காணும் முறையில் பிரித்து ஒட்டுதல்.





3. மாணவர்களைக் குழுவாகப் பிரித்தல்.
4. ஒவ்வொரு குழுவிலும் ஆசிரியர் ஒரு சிறிய பந்தைக் கொடுத்தல். (காகிதத்தைப் பந்தாகக் கசக்கிக் கொள்ளலாம்)
5. மாணவர்கள் பந்தை ஒவ்வொருவராகச் சூழலை நோக்கி எறிதல்.
6. பந்து படும் சூழலை வாசித்து அதற்கேற்ற மனவுணர்வைச் சக நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளுதல்.

எடுத்துக்காட்டு சூழல்:






உயர்வெண்ணத்தை வெளிப்படுத்தும் போது ஏற்படும் மனவுணர்வுகள் ஒரு குடிமகனுக்கு எவ்வாறான விளைவுகளைக் கொடுக்கின்றன என்பதை விவரிக்கவும்.



5.1
5.4
5.5

ஆசிரியர் குறிப்பு

- மாணவர்களுக்குக் கிடைத்த சூழலை நாடகமாக நடித்துக் காட்டப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** ஆக்கமும் புத்தாக்கமும் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 7 உரையாடலில் உயர்வெண்ணம்

வளப்படுத்துதல்

நாட்டிலுள்ள பொது இடங்களில் நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணப் பண்புநலன்களைச் செயல்படுத்த வேண்டும். பின்வரும் சூழல்களில் இடம்பெற வேண்டிய உயர்வெண்ணம் நிறைந்த உரையாடலை எழுதுக. அச்சூழலை வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

சூழல் 1 : இரயில் நிலையம்




சூழல் 2 : பொது இடம்




**தகவல் துளி**

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்த தற்று
(குறள் 100)

நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணச் செயல்முறைகளைக் கறுப்பு-வெள்ளை அட்டை (Indicator) மூலம் அடையாளம் காண்க.

5.2
5.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் நற்பெயரை வலியுறுத்தும் உறுதிமொழி ஒன்றைத் தயாரிக்க துணைபுரிதல்; அதனைப் பின்பற்ற ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 8 உயர்வெண்ணத்தில் விடாமுயற்சி

வளப்படுத்துதல்




நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணச் செயல்களைச் செயல்படுத்தும் முறைகளையும் முக்கியத்துவத்தையும் விளக்குக.

5.2
5.4

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணச் செயல்கள் செயல்படுத்தப் பணித்தல்.
- நம் நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுப்பயணிகளை வரவேற்கும் முறையை ஒட்டி படவில்லை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 9 விவாதத்தில் உயர்வெண்ணம்

ஆதவன் தன் பள்ளிக்குச் செல்லும் வழியில் தேசிய பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் பேச்சுப் போட்டிக்கான அறிவிப்புப் பதாகையைப் பார்க்கிறான். அதன் தொடர்பான தகவல்களைத் திரட்ட அவன் ஆயத்தமாகிறான்.




மேற்கண்ட போட்டியில் நீ பங்கேற்க விரும்புகிறாய். அதற்கான கருத்துகளைத் தொகுத்து வகுப்பில் விவாதிக்கவும்.

5.1
5.4
5.5

**ஆசிரியர் குறிப்பு**

- தேசிய பண்பாட்டுக் கழகம் ஒவ்வோர் ஆண்டும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை சமூக ஊடகங்களில் தேடி சேர்ப்பு ஒட்டுப்படம் ஒன்றை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்


## மதிப்பீடு

செய்துபார்

1. மலேசிய மக்களின் உயர்வெண்ணத்தைச் சித்தரிக்கும் படங்களைத் தேடி ஒட்டுக.

| படம் தேடி ஒட்டுக | படம் தேடி ஒட்டுக | படம் தேடி ஒட்டுக |
| --- | --- | --- |

2. நாட்டின் நற்பெயரை மேம்படுத்தும் உயர்வெண்ணத்தின் முக்கியத்துவத்தை எழுதுக.




3. நம் நாட்டு மக்களிடையே உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிப்போம்

நன்மை

4. நாட்டின் நற்பெயரை மேலோங்கச் செய்யும் உயர்வெண்ணத்தை வளர்க்கும் வழிமுறைகளை எழுதுக.

வழிமுறைகள்

# மரியாதை

பாட அறிமுகம்

## பாடம் 1 மரியாதை துளிரட்டும்

நாடு அதை நாடு
அதை நாடாவிட்டால் ஏது வீடு
பாலைவனம் என்ற போதும்
நம் நாடு
பாறை மலைகூட
நம் எல்லைக்கோடு
(கவிஞர் வாலி)

### நம் நாட்டின் அடையாளங்கள்



**தேசியக் கோட்பாடு**

- இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்
- பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்
- அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைபிடித்தல்
- சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்
- நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்









**நாட்டுப்பண்**

நெகாராக்கூ
தானா தும்பாஹெ டாராக்கூ
ராக்யாட் ஹிடுப் பெர்சத்து டான் மாஜூ
ரஹ்மாட் பாஹாகிய துஹான் குர்னியக்கான்
ராஜா கீத்தா செலாமாட் பெர்தாக்தா
ரஹ்மாட் பாஹாகிய
துஹான் குர்னியக்கான்
ராஜா கீத்தா
செலாமாட் பெர்தாக்தா

கருத்துப்படிவம்

# பாடம் 2 நாட்டின் அடையாளங்களை மதிப்போம்





மாணவர்களே, இதுதான் நம் நாட்டின் அடையாளச் சின்னமாக விளங்கும் பேரரசரின் புதிய அரண்மனை.



இந்த அரண்மனை மிகவும் அழகாக உள்ளது, ஐயா.



ஐயா, இந்த அரண்மனை எப்போது திறக்கப்பட்டது?



புதிய அரண்மனை நவம்பர் மாதம் 2011ஆம் ஆண்டில் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது. பழைய அரண்மனை 1928 முதல் 2011ஆம் ஆண்டு வரை அரச அரண்மனையாக விளங்கியது.



மேலும் தகவலை அறிய ஆவலாக இருக்கிறது, ஐயா.



இந்த அரண்மனையில் 3 நுழைவாயில்கள் உள்ளன. இங்கு நம் பேரரசர் சிறப்பு பிரமுகர்கள், வெளிநாட்டு தூதர்கள் போன்றவர்களுடன் முக்கியச் சந்திப்பு நிகழ்த்துவார். ஆகையால், நாம் அரண்மனையின் விதிமுறைகளை மதித்து நடந்துகொள்ள வேண்டும்.

அரண்மனையில் நடைபெறும் சில சிறப்பு சடங்கு நிகழ்ச்சிகள் பற்றி மாணவர்கள் தகவல் திரட்டினர்.



புதிய பேரரசர் அரியணை ஏறுதல்



பிரதமர் மற்றும் அமைச்சர்கள் நியமனம்



வெளிநாட்டு தூதர்கள் நியமனம்



பேரரசர் பிறந்தநாளில் பட்டமளிப்பு விழா

திரட்டிய தகவல்களின்வழி மாணவர்கள் அரண்மனை சடங்குகளைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டனர்.



மாணவர்கள் நம் நாட்டின் அடையாளங்களை மதிப்பதால் ஏற்படும் மனவுணர்வை வட்ட மேசையில் கலந்துரையாடுதல்.



6.1
6.2
6.4


ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் அடையாளங்களை எடுத்துக்காட்டுகளுடன் கூறப் பணித்தல்.
- நாட்டின் அடையாளமாகத் திகழும் சுற்றுலாத் தலங்களுக்கு மாணவர்கள் செல்ல ஊக்குவித்தல்.

**வி.வ.கூ.:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

# பாடம் 3 இனம் வேறு ஆனாலும் கொடி ஒன்றுதான்

தேசியக் கொடி நம் நாட்டின் அடையாளங்களில் ஒன்று. தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்துவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.




பொது இடங்களில் காணப்படும் கம்பத்தில் சுற்றி இருக்கும் கொடிகளைச் சரிப்படுத்த வேண்டும்.



சுதந்திரத் தினத்தையொட்டி மாணவர்கள் தேசியக் கொடியை வீட்டின் முன் பறக்க விடுதல் வேண்டும்.




மாற்றுத்திறனாளி தேசியக் கொடியைத் தனது சக்கர வண்டியில் பறக்க விடுதல் சிறப்பு.



கீழே விழுந்த தேசியக் கொடியை மரியாதையோடு எடுக்க வேண்டும்.

மேலே வழங்கப்பட்ட சூழல்களைக் கலந்துரையாடி உனது மனவுணர்வையும் முக்கியத்துவத்தையும் பகிர்ந்து கொள்க.

6.2
6.4
6.5

**ஆசிரியர் குறிப்பு**

- மறுபயனீடு பொருள்களைப் பயன்படுத்தி தேசியக் கொடியை உருவாக்கி, வகுப்பில் கண்காட்சி வைக்கப் பணித்தல்.
- மாணவர்கள் தங்களின் இல்லத்தில் நாட்டின் அடையாளச் சின்னமான தேசியக் கொடியைப் பறக்க விட்ட அனுபவத்தைக் கலந்துரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## பாடம் 4 நாட்டின் அடையாளங்களில் பசுமை

**கருத்துப்படிவம்**

மாணவர்கள் மலேசிய தற்காப்பு அமைச்சு ஏற்பாடு செய்திருந்த வீரர்களைப் போற்றுவோம் எனும் 'டிக் டாக்' உருவாக்கும் போட்டிக்கு நாட்டின் அடையாளமாகத் திகழும் தேசிய சின்னத்தைப் பற்றிய தகவல்களைத் திரட்டினர்.




- இந்நினைவாலயம் தலைநகரில் ஜாலான் பார்லிமன் தாசேக் பெர்டானாவில் அமைந்துள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் வீரர்கள் தினமான 31 ஜூலையன்று இவ்விடத்தில் பேரரசரால் மலர் வளையம் வைத்து மரியாதை அனுசரிக்கப்படுகிறது.
- இச்சின்னம் நாட்டிற்குச் சேவை செய்து உயிர் தியாகம் செய்த வீரர்களுக்காக எழுப்பப்பட்ட நினைவாலயம்.

நாட்டுப் பாதுகாப்பிற்காக உயிர் தியாகம் செய்த வீரர்களுக்கு வேறு எவ்வாறு மரியாதை செலுத்தலாம் என்பதனை வட்ட வரிப்படத்தில் குறிப்பிடுக.

6.3
6.4

**ஆசிரியர் குறிப்பு**

- பாடப்பகுதியின்வழி நாட்டின் அடையாளங்களை மதிப்பதன் முக்கியத்துவத்தையும் மனவுணர்வையும் சூழல் முறையில் கலந்துரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 5 நன்றி மலேசியா

கருத்துப்படிவம்

வள்ளுவர் தமிழ்ப்பள்ளி தேசிய மொழிக் கழகம், தேசிய அளவில் வெற்றி பெற்ற சுவரொட்டிகளைக் காட்சிக்கு வைத்தது.




1. நாட்டின் அடையாளமான தேசிய மொழியை மதிக்கும் முறைகளை இணையராகப் பட்டியலிட்டுக் கூறுக.
2. தேசிய மொழியை அதிகாரப்பூர்வ அலுவல்களில் நீ பயன்படுத்திய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்க.

6.1
6.5

ஆசிரியர் குறிப்பு

- 'Bahasa Jiwa Bangsa' எனும் பாடலைச் சரியான மெட்டுடன் பாடப் பணித்தல்.


**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

## பாடம் 6 உணர்வோம் வாரீர்

திடப்படுத்துதல்

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஒற்றுமை மேம்பாட்டு இலாகா ஏற்பாடு செய்த மாறுவேடப் போட்டியில் கலந்து கொண்ட கபிலன் முதல் நிலையில் வெற்றி பெற்றான். அவனது வெற்றியை நகுலன் அறிந்து கொள்ள எண்ணினான்.




அறிந்திடுக

‘ஒரிகாமி’ (Origami) என்ற நுட்பத்தைப் பயன்படுத்தி புலி வடிவில் கோணப் புத்தகக் குறியீடு ஒன்றைத் தயாரித்திடுக.

6.1
6.2
6.4

**ஆசிரியர் குறிப்பு**

- நம் நாட்டில் மலாயா புலி முற்றழிவை எதிர்நோக்கி வருவதையொட்டி மாணவர்களின் மனவுணர்வுகளைக் கலந்துரையாடப் பணித்தல்.


**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** சீர்த்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

குறைநீக்கல்

# பாடம் 7 வீரத்தின் அடையாளம் புலி

தேசிய தினத்தை முன்னிட்டு ஆறாம் ஆண்டு மாணவர்கள் நாட்டின் அடையாளத்தைப் போற்றும் வகையில் முகமூடி ஒன்றைத் தயாரித்தனர்.

தேவையான பொருள்கள்: வெள்ளை நிற மணிலா அட்டை, கத்தரிக்கோல், மைத்தூவல், எழுதுகோல், திரவ வண்ணம், நொய்வ வளையம்.



மணிலா அட்டையில் புலியின் முகத்தை வரைதல்



மைத்தூவல் கொண்டு புலியின் கோடுகளை வரைதல்



புலியின் முகத்தைக் கத்தரித்தல்



வரைந்த முகமூடிக்கு வண்ணம் பூசுதல்



முகமூடி கண்களுக்குத் துளையிடுதல்



முகமூடிக்கு நொய்வ வளையம் மாட்டுதல்



முழுமையான படைப்பு

மாணவர்கள் முகமூடி அணிந்து தேசிய விலங்கான மலாயா புலி தன்னைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைக் கூறுவது போல் பாகமேற்று நடித்துக் காட்டுக.

6.1
6.2
6.3
6.5

ஆசிரியர் குறிப்பு

- தேசிய விலங்கான புலியைத் தவிர்த்து இருவாட்சி (Hornbill) பறவை பற்றி மாணவர்கள் இணையத்தில் தகவல் திரட்டப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

வளப்படுத்துதல்

# பாடம் 8 தேசியப் பண் நாட்டின் அடையாளம்

மகேந்திரன் தன் அப்பாவுடன் அனைத்துலகப் பூப்பந்து விளையாட்டுப் போட்டியைக் கண்டு களிக்க பூப்பந்து அரங்கிற்குச் சென்றிருந்தான்.




அனைத்துலக ரீதியில் நம் நாட்டு வீரர்கள் வெற்றி பெற்ற பிறகு தேசிய பண் இசைக்கும்போது மலேசிய குடிமகனாய் பெருமிதம் அடைகிறோம்.

1. அனைத்துலக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பதக்கம் பெறும் பொழுது தேசியப் பண் ஒலிக்கப்படும். அச்சூழலைத் தொலைக்காட்சியில் பார்க்கிறாய். உன் மனவுணர்வைக் குறிப்பிடுக.
2. தேசியப் பண் பாடும்போது கடைப்பிடிக்க வேண்டிய மரியாதையான செயல்களைக் கலந்துரையாடுக.

6.3
6.4
6.5


**ஆசிரியர் குறிப்பு**

- தேசியப் பண்ணின் ஒவ்வொரு வரிகளின் பொருளையும் சரியாகக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** சிந்தனையாற்றல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்

வளப்படுத்துதல்

## பாடம் 9 அடையாளத்தின் கடிகாரம்




குறிப்பு :
i : அடையாளம் : இரட்டைக் கோபுரம்
ii : மாணவர் பெயர் : கவிநயன்

**விளையாட்டின் விதிமுறைகள்:**

1. வெண்தாளில் மேலே உள்ளதுபோல் வட்ட வடிவில் ஒரு சுவர் கடிகாரத்தை வரைந்து எண் இட வேண்டும்.
2. மாணவர்கள் வகுப்பில் உள்ள மற்ற மாணவர்களைச் சந்தித்து, நாட்டின் முக்கிய அடையாளங்களின் பெயர்களையும் பதில் கூறிய மாணவரின் பெயரையும் எழுதச் சொல்ல வேண்டும்.
3. மாணவர்கள் முன்னதாகக் குறிப்பிட்ட இடங்களை மீண்டும் எழுதக்கூடாது.
4. முதலில் கடிகாரத்தை முழுமையாகப் பூர்த்தி செய்பவரே வெற்றியாளர் ஆவார்.
5. அடையாளங்களை எழுதி முடித்த மாணவர்கள் வகுப்பில் படைத்து தங்களின் மனவுணர்வைக் கூறுவர்.


6.1, 6.4

ஆசிரியர் குறிப்பு
- ஆசிரியர் தம் தேவைக்கேற்ப விளையாட்டை அமைத்துக் கொள்ளல்.
- விளையாட்டின் நேரத்தை அதிகரிக்கலாம்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்

# பாடம் 10 தேசிய சின்னத்தில் தனித்தன்மை

தேசிய தினத்தை முன்னிட்டு மாணவர்கள் தேசிய சின்னத்தைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடினர்.




### தேசிய சின்னம்

- மலாய் அரசர்களால் அங்கீகரிக்கப்பட்டது.
- மாநிலங்களைக் குறிக்கிறது.
- மக்களின் ஒருமைப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.
- தேசிய சின்னத்தை மதிப்பது அவசியமாகும்.

செய்துபார்

விடுபட்ட இடங்களில் தேசிய சின்னத்தில் குறிக்கும் விவரங்களை எழுதுக.

6.1
6.5

ஆசிரியர் குறிப்பு

- தேசிய சின்னத்தின் தனித்தன்மையைக் கலந்துரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

## மதிப்பீடு

செய்துபார்

1. கீழ்க்காணும் நாட்டின் அடையாளங்களை மதிக்கும் முறைகளை விவரித்திடுக.







2. சமூக ஊடகத்தில் ஓர் ஆடவர் நம் நாட்டின் அடையாளமான தேசியக் கொடியைப் பற்றி தவறான தகவல்களைப் பதிவேற்றம் செய்துள்ளார். நீ என்ன செய்வாய்?

_______________________________________________

3. நாட்டின் அடையாளங்களை மதிப்பதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிடுக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள வலைத்தளங்களின் துணையுடன் நாட்டின் அடையாளங்கள் தொடர்பான தகவலைத் திரட்டி திரட்டேடு தயாரித்திடுக.

https://ta.m.wikipedia.org

https://www.penerangan.gov.my

https://eniraimathi.blogspot.com

## தொகுதி 7


நெறி அறிமுகம்

# அன்புடைமை

பாட அறிமுகம்

## பாடம் 1 நாட்டின் இயற்கை வளங்களை நேசிப்போம்

இறைவன் படைப்பில் இயற்கை ஓர் அதிசயமே!
அதிசயத்தைக் காப்பது நம் அவசியமே!
ஆதலால் இயற்கையை நேசிப்போம்!
இறைவனைக் காண்போம்!



கருத்துப்படிவம்

## பாடம் 2 அன்பு உள்ளம்

சமய வகுப்பின்போது ‘அன்பு’ என்ற தலைப்பில் கயலினியாள் சிற்றுரை ஆற்றினாள்.

அன்பிற்கினிய சபையோரே,

அனைவருக்கும் என் இனிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று வடலூர் இராமலிங்க சுவாமிகளின் அன்புடைமை பற்றிப் பேசவுள்ளேன்.

அன்புசால் மக்களே!

தூய உள்ளத்திலிருந்து அக்கறை உணர்வும் மனித நேயமும் தோன்றுவது இயல்பாகும். அதுபோல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து உலக மக்களையும் உயிர்களையும் தம் உயிருக்கு மேலாய் நேசித்தவர் அருட்பேரொளி வள்ளல் பெருமானார் ஆவார்.

‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்!’ என்று உயிர் இரக்கத்தைக் கற்பித்தவர். நாமும் அவர் கற்பித்த மாந்த நேயத்தை நம் நாட்டின் மீது வெளிப்படுத்த வேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் நாட்டின் வளப்பத்திற்காகப் பாடுபட வேண்டும்.

இதுவரை என் சிற்றுரையைச் செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். மீண்டும் சந்திப்போம். நன்றி. அன்பே சிவம்!





அறிந்திடுக

**தகவல் துளி**

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 72)

1. நாட்டின் மீது அன்பு செலுத்தும் செயல்களை எடுத்துக்காட்டுகளுடன் பட்டியலிடுக.
2. நாட்டின் மீது அன்பை வளர்க்கும் வழிமுறைகளை விவரித்துக் கூறுக.

7.1
7.2

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் மீது அன்பை வளர்க்கும் செயலின் உதாரணமாகப் பள்ளி வளாகத்தில் பூச்செடி நடப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மை பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/பரிவுள்ளவர்

## பாடம் 3 நாட்டை அன்பால் நிரப்புவோம்

கருத்துப்படிவம்

நாட்டின் மீது அன்பு செலுத்தும் சில வழிமுறைகளை ஆசிரியர் வகுப்பில் கலந்துரையாடினார்.



பேரரசர் மற்றும் நாட்டுத் தலைவர்களின் ஓவியத்தைப் பொது இடங்களில் வரைந்து அன்பை வெளிபடுத்துதல்.



பேரரசர் வாகனத்தில் செல்லும்போது கையசைத்து விசுவாசத்தை வெளிபடுத்துதல்.



தேசிய பண் இசைக்கும்போது எழுந்து நேராக நிற்றல்.



சாலை அறிவிப்புப் பலகை உடைந்திருப்பதைக் கண்டு சாலை நிர்மாணிப்புத் துறையிடம் புகார் அளித்தல்.

**தகவல் துளி**

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை (குறள் 76)

1. ஒரு குடிமகனாய் நீ நாட்டின் மீது அன்பு செலுத்திய செயல்கள் குறித்து வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.
2. நாட்டின் மீது அன்பு செலுத்தும்போது உனக்கு ஏற்பட்ட மனவுணர்வினை உன் நண்பர்களுக்குக் கூறுக.

7.1
7.2
7.4
7.5

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் நாட்டின் மீது அன்பு செலுத்தும் வழிமுறைகள் கொண்ட சுவரொட்டியைத் தயாரித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** ஆக்கச்சிந்தனை **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

# பாடம் 4 பொது இடங்களை நேசிப்போம்

கருத்துப்படிவம்

செய்தி துணுக்கை வாசித்து மகிழ்க!

கோலாலம்பூர், 21 ஜனவரி- நாட்டின் வளப்பத்தையும் தூய்மையையும் பேணும் வகையில் தேசிய அளவிலான கூட்டுப்பணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நடவடிக்கையில் மலேசியா முழுவதும் உள்ள அனைத்து இடங்களிலிருந்து பெரியவர்களும் மாணவர்களும் பங்கேற்றனர். பொது மண்டபம், திடல், விளையாட்டுப் பூங்கா போன்ற இடங்களைத் தூய்மைப்படுத்தியதோடு அருகே அமைந்திருந்த ஆறு, குளம், ஏரிகளிலும் இந்தத் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டது. மலேசியாவிற்கு வருகை புரியும் அந்நிய நாட்டினரின் பார்வையில் நமது நாட்டின் மேன்மையைக் காக்கும் செயலாகவும் இந்நடவடிக்கை அமைந்தது. நாட்டின் குடிமக்களாகிய அனைவரும் இந்நடவடிக்கையில் பங்கேற்று நாட்டின் மீதுள்ள அன்பை வெளிபடுத்தியது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாக அமைந்தது.


நெகிரி செம்பிலான் குழு


சிலாங்கூர் குழு


ஜொகூர் குழு


பினாங்கு குழு


பேராக் குழு

1. இந்நடவடிக்கையின்வழி நீ அறிந்தது என்ன?
2. நாட்டின் மீதான அன்பைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளை ‘Hot Seat’ முறையில் வகுப்பில் கலந்துரையாடுக.

7.3

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் மீது அன்பை வெளிப்படுத்தும் விதமாகப் பள்ளிச் சுவரில் இயற்கை தொடர்பான சுவர் ஓவியம் ஒன்றை வரையப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத்தன்மை **உ.சி.தி:** சீர்த்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/பரிவுள்ளவர் பராமரித்தல்

திடப்படுத்துதல்

# பாடம் 5 என் எதிர்கால ஆசை

இராணுவ வீரர் தினத்தை முன்னிட்டு தேசியப் பாதுகாப்பு அமைச்சு கட்டுரை எழுதும் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. அப்போட்டியில் நீயும் உன் நண்பர்களும் கலந்து கொள்ள ஆர்வம் கொண்டுள்ளீர்கள்.

## என் எதிர்கால ஆசை

**வான்படை வீரர்**
- எதிரிகளின் வான்வழித் தாக்குதலை முறியடித்தல்
- நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல்
- நாட்டுப்பற்றை வெளிபடுத்துதல்

**இராணுவ வீரர்**
- நாட்டின் எல்லைகளைப் பாதுகாத்தல்
- எதிரிகளின் ஊடுருவலைத் தடுத்தல்
- நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல்

**கடற்படை வீரர்**
- சட்டவிரோதமாக நாட்டில் நுழைபவர்களைத் தடுத்தல்
- சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணித்தல்
- கடற்கொள்ளையை முறியடித்தல்









கேட்டு மகிழ்க

1. நாட்டுப்பற்றை மேலோங்கச் செய்யும் வகையில் உன் எதிர்கால ஆசைகளைத் தகுந்த சான்றுகளோடு கூறுக.
2. நாட்டுப்பற்று மேலோங்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் ஏற்படும் மனவுணர்வைக் குறிப்பிடுக.

7.1
7.2
7.4
7.5

**ஆசிரியர் குறிப்பு**
- மாணவர்கள் எதிர்கால ஆசைவழி நாட்டின் மீது அன்பு செலுத்தும் முறைகளைக் கட்டுரையாக எழுதுதல்.
- நாட்டுப்பற்றை உணர்த்தும் பாடலைக் குழுவாகப் பாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** சிந்தனை வியூகம் **21ஆம் நூ.தி:** பரிவுள்ளவர்

## பாடம் 6 அஞ்சல் அட்டையில் நாட்டின் மீது அன்பு

கவியரசன் வெளிநாட்டிலுள்ள தன் நண்பன் நன்முகிலனுக்குப் பின்வரும் அஞ்சல் அட்டைகளை அனுப்புகிறான்.




நாட்டின் மீது அன்பு செலுத்தும் வகையில் சுயமாக ஓர் அஞ்சல் அட்டை எழுதி வகுப்பில் விளக்குக.

7.2
7.4
7.5

**ஆசிரியர் குறிப்பு**

- மேற்கண்ட அஞ்சல் அட்டைவழி நாட்டின் மீது அன்பு செலுத்துவதால் ஏற்படும் மனவுணர்வை விளக்கப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

வளப்படுத்துதல்

# பாடம் 7 சுற்றுச்சூழலில் அன்பு

நாட்டின் மீது அன்பு கொண்டவர்கள் இயற்கையைப் பாதுகாப்பர். இயற்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கை நாட்டின் மீதான அன்புடைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

**நம் நாட்டின் இயற்கை வளங்களின் சீர்குலைவு**



ரந்தாவ் அபாங் கடலோரப் பகுதியில் ஆமைகளின் முட்டைகள் களவாடப்படுகின்றன. ஆமை முட்டைகளுக்காக ஆமைகளை அழிக்கின்றனர். நாட்டின் மீது அன்புள்ளவர்கள் விலங்குகளை அழிவில் இருந்து பாதுகாப்பர்.



சட்டவிரோதமாக மரங்களை வெட்டி விற்பதால் நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்படும். நாட்டின் மீது அன்புள்ளவர்கள் நாட்டின் வளர்ச்சியின் மீது அக்கறை கொள்ள வேண்டும்.







1. நாட்டின் மீது அளவற்ற அன்பு கொண்டிருக்கும் நீ எவ்வாறு நாட்டின் வளங்களைப் பாதுகாப்பாய்?
2. நாட்டின் சுற்றுச்சூழலைப் பேணுவதில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் மனவுணர்வையும் பகிர்ந்திடுக.

7.1 7.2 7.3 7.4 7.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் மீது அன்பு செலுத்துதலைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைக் கலந்துரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழலை நேசித்தல், நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர் / பரிவுள்ளவர்

## பாடம் 8 நாட்டின் சுற்றுச்சூழல் மேன்மை

நாட்டின் மீது அன்பு செலுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றுதான் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கை. அத்தகைய செயல்திட்டங்களைப் பற்றி அறிந்து கொள்வது நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும்.




அறிந்திடுக

விரயப்பொருள்களைத் திட்டமிட்டு நிர்வகித்தால் நமது நாட்டைப் பசுமை பூமியாக மாற்றலாம்.

1. மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் இயற்கைச் சூழலைப் பேணும் நடவடிக்கைகளைச் சிறு குறிப்பாக எழுதுக.
2. இம்மாதிரியான 5R செயல்திட்டங்களைச் செய்த அனுபவம் உனக்கு உண்டா? உன் மனவுணர்வைக் கூறுக.

7.1
7.2
7.4
7.5

**ஆசிரியர் குறிப்பு**

- மறுபயனீட்டுப் பொருள்கள் அல்லது நெகிழிப்புட்டி அல்லது பழைய நாளிதழ்களைப் பயன்படுத்தி கைவினைப் பொருள்களைத் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** அறிவியலும் தொழில்நுட்பமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/பரிவுள்ளவர்

# பாடம் 9 நாட்டின் தலைவர்கள் மீது அன்பு

வளப்படுத்துதல்

ஆனந்தி தேசிய அருங்காட்சியகத்தில் நாட்டின் தலைவர்களைப் பற்றிய விவரங்களைப் படித்துக் குறிப்புகளை எழுதினாள்.




நாட்டின் தலைவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்குக.

7.2
7.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளப்பத்திற்காக அரும்பாடுபட்ட நாட்டுத் தலைவர்களின் விவரங்களை அகப்பக்கங்களில் தேடி சிற்றறிக்கை ஒன்றை உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/பரிவுள்ளவர்




## மதிப்பீடு

செய்துபார்

1. சுற்றுச்சூழலை நேசிக்கும் பண்பு இல்லாததால், மக்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். அது குறித்த விவரங்களைப் பின்வரும் அட்டவணையில் பூர்த்தி செய்க.

| | எதிர்நோக்கும் சிக்கல்கள் | தவிர்க்கும் வழிகள் | ஏற்படும் நன்மைகள் |
|---|---|---|---|
| | **எ.கா:** காற்றுத் தூய்மைக்கேடு | திறந்த வெளியில் குப்பைகள் எரிப்பதைத் தவிர்த்தல். | தூய்மையான காற்றைச் சுவாசிக்கலாம். |
| அ. | | | |
| ஆ. | | | |
| இ. | | | |

2. கீழ்க்காணும் சூழல்களில் நீ என்ன செய்வாய் என்பதைக் குறிப்பிடுக.

| | |
|---|---|
| ரந்தாவ் அபாங் கடற்கரையில் கடலாமைகளின் முட்டைகளைச் சுற்றுப்பயணி ஒருவர் களவாடுவதைப் பார்க்கிறாய். | |
| தேசிய விலங்கியல் பூங்காவில் பாதுகாவலர் ஒருவர் விலங்குகளைத் துன்புறுத்துவதைக் காண்கிறாய். | |
| பொது நூலகத்தில் மாட்டப்பட்டிருந்த பேரரசரின் படம் சற்று சாய்வாக இருப்பதை நீ காண்கிறாய். | |

# தொகுதி 8

# நடுவுநிலைமை

நெறி அறிமுகம்

பாட அறிமுகம்

## பாடம் 1 நீதியை நிலைநாட்டுவோம்




செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து


(குறள் 112)

பொருள்: நடுவுநிலைமை உடையவனின் செல்வ வளம் அழிவில்லாமல் அவனுடைய வழியிலுள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்.

கருத்துப்படிவம்

## பாடம் 2 நம் நாட்டில் நீதியுடைமை

ஆறாம் ஆண்டில் பயிலும் வாசுதேவன், நீதி தினத்தை முன்னிட்டு மலேசியக் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ள தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொள்ள ஆர்வம் கொண்டுள்ளான். அதற்காக நீதியை நிலைநாட்டும் அமைப்புகளின் சின்னங்களைச் சேகரித்துக் காணொலி ஒன்றைத் தயார் செய்து கொண்டிருந்தான்.




நாட்டில் நீதியுடைமையை வளப்படுத்தும் அமைப்புகளைப் பட்டியலிடுக.

8.1
8.2

**ஆசிரியர் குறிப்பு**


- நீதியுடைமையை நிலைநிறுத்தும் தகவல்களையும் அதன் விதிமுறைகளையும் பல்வேறு ஊடகங்கள்வழி படைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

கருத்துப்படிவம்

# பாடம் 3 நீதியுடைமை காப்போம்

லியோங்கும் அவனது அண்ணனும் தலைக்கவசம் அணியாமல் உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்தனர். அதனைக் கண்ட சாலை காவல்துறை அதிகாரி அவர்களைத் தடுத்து நிறுத்தி வாகனம் ஓட்டும் உரிமம், சாலை வரி ஆகியவற்றைப் பரிசோதித்து தலைக்கவசம் அணியாததால் அபராதம் விதித்தார்.




1. மேற்கண்ட சூழலைப் பாகமேற்று வகுப்பில் நடித்துக் காட்டுக.
2. நீங்கள் அந்தக் காவல்துறை அதிகாரியாக இருந்தால் நாட்டின் வளப்பத்திற்கு எவ்வாறு நீதியுடைமையைக் கடைப்பிடிப்பீர்கள் எனக் கூறுக.

8.1
8.2
8.3

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமையைச் செயல்படுத்தும் வழிமுறையை விவரிக்கச் செய்தல்.
- நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமைப் பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை விளக்கும் அட்டைகளைச் செய்து அதனை அலங்காரச் செடியில் மாட்டப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பன்பு **உ.சி.தி:** ஆய்வுச்சிந்தனை **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

# பாடம் 4 நாட்டில் நீதியுடைமை மேலோங்கட்டும்

ஓய்வு நேரத்தின்போது பரதன் நூல்நிலையத்தில் கையேடு ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தான். அக்கையேட்டில் ஊழல் தடுப்பு ஆணையம் தொடர்பான தகவல்களைக் கண்டான்.




**தகவல் துளி**

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி (குறள் 118)

நீங்கள் ஓர் ஊழல் தடுப்பு ஆணை அதிகாரியாக இருந்தால்:

1. நாட்டில் கையூட்டுப் பிரச்சனைகளைக் களைய என்ன செய்வீர்கள்?
2. உங்கள் மனவுணர்வைக் குறிப்பிடுக.

8.1
8.2
8.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டில் நீதியுடைமையை நிலைநாட்டும் பல்வேறு செய்தி துணுக்குகளை நாளிதழிலிருந்து சேகரித்துக் கையேடு தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** நாட்டுப்பற்று

# பாடம் 5 சார்பின்றிச் செயல்படுவோம்

கருத்துப்படிவம்

ஆசிரியர், மலேசிய நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணை ஒன்றைப் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடிக் கொண்டிருந்தார்.




நீதியுடைமையுடன் நீதிபதி தீர்ப்பை வழங்கியுள்ளார். அவரது நேர்மையான தீர்ப்பால் நாட்டின் வளமை பாதுகாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமையைப் பின்பற்றுவதன் அவசியத்தைக் கலந்துரையாடுக.

8.2
8.3

**ஆசிரியர் குறிப்பு**

- சட்டவிரோதமாகக் காடுகளை அழிப்பதால் நாட்டின் வளப்பத்திற்கு ஏற்படும் விளைவுகளை வட்டமேசையில் கலந்துரையாடுக.

**வி.வ.கூ.:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## பாடம் 6 நீதியுடைமையில் நிர்வாகம்

கருத்துப்படிவம்

பாலன் தன் 12ஆவது வயது பிறந்தநாளைக் கொண்டாடிய பின் அடையாள அட்டை எடுக்க தன் அப்பாவுடன் தேசிய பதிவு இலாகா அலுவலகத்திற்குச் சென்றான்.




பாலன் : அப்பா, இந்த அலுவலகத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஊழியர்கள் தங்கள் பணிகளைத் தொடங்கி விட்டனரே..!

அப்பா : ஆம் பாலா... இங்கு மட்டும் இல்லாமல் அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றும் அனைவரும் குறித்த நேரத்தில் பணியைத் தொடங்கி விடுவார்கள்.

பாலன் : அப்பா, இவர்கள் ஏன் குறித்த நேரத்தில் தங்கள் பணியைத் தொடங்க வேண்டும்?

அப்பா : குறித்த நேரத்தில் பணியைத் தொடர்ந்தால் மக்கள் தங்கள் அலுவல்களை விரைவாகச் செய்து முடிக்க ஏதுவாக இருக்கும்.

பாலன் : மேலும் விளக்கம் தாருங்கள் அப்பா.

அப்பா : இவ்வாறு அரசு ஊழியர்கள் நீதியுடைமையுடன் கடமையாற்றுவதால் நாட்டின் வளப்பம் மேலோங்குகிறது. இதனால் மக்கள் நாட்டில் சுபிட்சமாக வாழ்கின்றனர்.

1. தேசிய பதிவு இலாகாவில் சேவை பெற வரும் வருகையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைக் குமிழி வரைபடத்தில் பட்டியலிடுக.
2. இதுபோன்ற அரசாங்க அலுவலகத்திற்குச் சென்ற அனுபவம் உண்டா? உன் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்க.

8.1
8.2
8.3
8.4

ஆசிரியர் குறிப்பு


- நாட்டின் வளப்பத்திற்காக நீதியை நிலைநாட்டும் காவல்துறை தொடர்பான விவரங்களைத் திரட்டப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

# பாடம் 7 ஜீவகாருணியம்

தினகரன், முகநூலில் தற்பொழுது பரவலாகி கொண்டிருக்கும் கால்நடை இலாகா வெளியிட்ட பிராணிகளிடத்தில் வன்முறை செயல்கள் பற்றிய செய்தியை வாசித்துக் கொண்டிருந்தான்.

**தினகரன்**
8 அக்டோபர், முற்பகல் 8:43க்கு.



கால்நடை சேவை இலாகா, பிராணிகளிடத்து வன்முறை செய்பவர்களுக்கும் அவற்றைத் துன்புறுத்துபவருக்கும் சட்டரீதியில் தண்டனை வழங்கப்படும்.

578 50 கருத்து

விரும்பு கருத்துத் தெரிவி பகிர்

பிராணிகள் மீது அன்பு செலுத்துவோம்!

**தகவல் துளி**

பிராணிகள் நலச்சட்டம் 2015
செக்ஷன் 29 (பிராணிகளிடத்தில் வன்முறையைக் கையாள்வது)

பள்ளி முடிந்து வீடு திரும்புகிறாய்; கைவிடப்பட்ட நாய்க்குட்டி ஒன்றைக் காண்கிறாய். நீ என்ன செய்வாய்?

8.3
8.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளப்பத்திற்காக அரசு இலாகாக்கள் செயல்படுவதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

திடப்படுத்துதல்

# பாடம் 8 தேர்தல் செயல்முறைகள்

நம் நாட்டின் தேர்தல் ஆணையம் தேர்தல் செயல்முறையை நிலைநாட்டுவதில் முக்கியப் பங்காற்றுகிறது. நாட்டின் மக்களாட்சி முறையைக் காக்கவும் மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கவும் இவ்வாணையம் துணைபுரிகிறது.




அறிந்திடுக

நாடாளுமன்றம் களைப்பு → வேட்பு மனு தாக்கல் → தேர்தல் பரப்புரை → வாக்களிப்பு → வாக்குகளை எண்ணுதல் → வெற்றியாளர்கள் அறிவிப்பு → புதிய அரசாங்கம் அமைத்தல்

i-THINK

ஒரு மாணவர் தலைவனைத் தேர்ந்தெடுக்க தேர்தல் உத்தியைப் பயன்படுத்தி வகுப்பில் தேர்தல் நடத்துக.

8.1
8.2
8.5

ஆசிரியர் குறிப்பு

- ‘ரெல்லி ரோபின்’ விளையாட்டு முறையில் நாட்டின் வளப்பத்திற்காக ஒரு சிறந்த தலைவரின் நீதியுடைமைப் பண்புகளைப் பகிர்ந்து கொள்ளப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்




# பாடம் 9 வாருங்கள் உருவாக்குவோம்

இப்பொருள்களைப் பயன்படுத்தி அலங்காரச் செடியை உருவாக்குவோம்.

## தேவையான பொருள்கள்

1. நெகிழிப் புட்டி
2. துளையிடும் கருவி
3. தூரிகை
4. மணிலா அட்டை
5. கத்தரிக்கோல்
6. கயிறு
7. திரவ வண்ணம்
8. மணல்
9. பசை
10. கிளைகள்

1


2


3


4


## செய்முறை

1. நெகிழிப் புட்டியை அரைப்பகுதியாக வெட்டிக் கொள்க.
2. நெகிழிப் புட்டி மேல் வண்ணம் பூசி அதன் உள்ளே மணலை நிரப்புக.
3. கிளைகளுக்கு வண்ணம் பூசி நெகிழிப்புட்டியின் உள்ளே நடவும்.
4. நீதியுடைமைப் பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தையும் மனவுணர்வுகளையும் விளக்கும் கூற்றுகளை அச்சிட்டு, துண்டு துண்டாக வெட்டி மணிலா அட்டையில் ஒட்டுக.
5. பின், மணிலா அட்டையில் துளையிடுக.
6. மணிலா அட்டையில் கயிற்றைக் கட்டி கிளைகளில் தொங்கவிடவும்.
7. அலங்காரச் செடி தயார்.

5


6





8.3

ஆசிரியர் குறிப்பு

- மாணவர்கள் அலங்காரச் செடியைத் தயார் செய்வதன் வாயிலாக நாட்டின் வளப்பத்திற்காக நீதியுடைமையின் முக்கியத்துவத்தையும் மனவுணர்வையும் விளக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

வளப்படுத்துதல்

# பாடம் 10 பொருள்களை வாங்குவதில் நீதியுடைமை

கனிமொழி தன் அம்மாவுடன் மளிகைப் பொருள்கள் வாங்க இரு வெவ்வேறான பேரங்காடிகளுக்குச் சென்றாள். அங்கு அவள் விலை மாற்றத்தைக் கண்டாள்.




ஏன் இந்த விலைமாற்றம்? இதனால் மக்களுக்கு ஏற்படும் விளைவுகள் யாவை?

1. பொருள்களின் விலை வேறுபாட்டைக் கண்ட அனுபவம் உண்டா?
2. இச்சிக்கலைத் தவிர்க்க நீ மேற்கொள்ளும் நடவடிக்கையைக் கூறுக.

8.3
8.4
8.5

**ஆசிரியர் குறிப்பு**

- வழங்கப்பட்டுள்ள QR குறியீட்டை வருடி KPDNHEP நிர்ணயிக்கப்பட்ட விலை பட்டியல் தொடர்பான தகவல்களைத் திரட்டப் பணித்தல்.
- இத்தகவலை வைத்து பொருள்களின் விலை பட்டியல் அட்டை ஒன்றைத் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 11 சேவையில் நடுவுநிலைமை

வளப்படுத்துதல்

மாணவர்கள், அரசாங்க சார்புடைய அமைப்புகள் தங்களின் சேவைகளில் நீதியுடைமையை நிலைநாட்டும் செயல்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் வகுப்பில் கலந்துரையாடினர்.

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

## மலேசியக் கல்வி அமைச்சு

- தரமான கல்விச் சேவை
- அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்பு
- சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அங்கீகாரம்
- மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குதல்

PERKESO

## ஊழியர் சேமநிதி வாரியம்

- வேலையிடத்தில் பாதுகாப்பு வழங்குதல்
- பணியாளர்களுக்குக் காப்புறுதி சேவை வழங்குதல்
- பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்
- சந்தாதாரர்களின் பிள்ளைகளுக்குப் பண உதவி வழங்குதல்

POLIS DIRAJA MALAYSIA

## காவல் துறை

- நீதியுடைமையைக் கடைப்பிடித்தல்
- சட்டத்தை முறையாக அமல்படுத்துதல்
- குற்றச் செயல்களைத் தடுத்தல்
- குற்றவாளிகள் தண்டனை பெறுவதை உறுதிப்படுத்துதல்

INTEGRITI
INSTITUT INTEGRITI MALAYSIA
*The Malaysian Institute of Integrity*

## மலேசிய உயர்நெறிக் கழகம்

- நிர்வகிப்பு ஆற்றலை வளர்த்தல்
- அரசாங்கம், தனியார் துறைகளில் ஊழலைத் தடுத்தல்
- மலேசியாவை ஊழல் அற்ற நாடாக மாற்றுதல்

மலேசிய உயர்நெறிக் கழகத்தின் (IIM) பொறுப்புகளைக் குழுவில் கலந்துரையாடுக.

8.1
8.2
8.3

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் வளப்பத்திற்காக நீதியை நிலைநாட்டும் அமைப்புகளுக்குப் பயணம் மேற்கொள்ள ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

## மதிப்பீடு

செய்துபார்

I. நீதிபதி சார்பின்றி நீதி வழங்குவதால் ஏற்படும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.



அ. ______________________

ஆ. ______________________

2. நீதியை நிலைநாட்டும் அமைப்புகள் நீதியுடன் நடந்து கொள்வதால் நாட்டின் வளப்பம் எவ்வாறு காக்கப்படுகின்றது?

______________________

______________________

3. ஊழல் தடுப்பு ஆணையம் தனது கடமையைச் செவ்வனே செய்வதால் மக்கள் அடையும் நன்மைகளைக் குறிப்பிடுக.

1. கையூட்டு கொடுப்பதைத் தவிர்க்க முடியும்

______________________

______________________

______________________

5. நேர்மையான சமுதாயமாக வாழ முடியும்

4.



தற்போது அதிகரித்து வரும் பிராணிகளிடத்து வன்கொடுமையை எவ்வாறு களையலாம் என்பதை விவரித்து எழுதுக.

______________________

______________________

தொகுதி 9

நெறி அறிமுகம்

# துணிவு

பாட அறிமுகம்

## பாடம் 1 துணிவுடன் செயல்படு

துணிந்து நில் தொடர்ந்து செல்
தோல்வி கிடையாது தம்பி
உள்ளதைச் சொல் நல்லதைச் செய்
தெய்வம் இருப்பதை நம்பி
(கவிஞர் வாலி)



# பாடம் 2 நாட்டின் அமைதியில் துணிவு


**சூழல் 1** உதயன் பள்ளி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். வழியில் ஒரு பாழடைந்த வீட்டில் ஆடவர் ஒருவர் சிறு சிறு பொட்டலங்களை விநியோகித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறான்.




**சூழல் 2** சட்டமன்ற உறுப்பினரிடம் புகார் செய்தல்.



## சூழல் 3 போதைப்பொருள் ஒழிப்பு இலாகா அதிகாரியிடம் புகார் செய்தல்.




**தகவல் துளி**

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. (குறள் 669)

பொருள் : இன்பம் தரக்கூடிய செயல் என்பது, துன்பம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் துணிவுடன் நிறைவேற்றி முடிக்கக் கூடியதேயாகும்.

1. மேற்கண்ட உரையாடல்களின்வழி நாட்டின் தன்மானத்தைக் காக்கும் வேறு ஐந்து துணிவான செயல்களைக் கூறவும்.
2. உதயனின் துணிவான செயல் எத்தகைய சவால்களைக் கொண்டுள்ளது என்று ‘வட்டமேசை’ நடவடிக்கைவழி கலந்துரையாடுக.
3. இத்தகைய துணிவான செயல்களால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுக.

9.1
9.2
9.3
9.4

**ஆசிரியர் குறிப்பு**


- நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களில் ஈடுபடும்போது ஏற்படும் மனவுணர்வைக் குறிப்பிடப் பணித்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** ஆய்வுச்சிந்தனை


## பாடம் 3 நாட்டின் தன்மானத்தைக் காப்பதில் துணிவு


**கருத்துப்படிவம்**

தியாகசீலன், நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களைப் பல்லூடகம் வாயிலாகச் சக நண்பர்களோடு பகிர்ந்து கொண்டான்.




1. நம் நாட்டில் ஏற்பட்டுள்ள பகடிவதையை ஒழிப்பதில் ஒரு குடிமகனாக நீ எவ்வாறு உன் பங்கினை ஆற்றுவாய் என்று விளக்குக.
2. ஏன் அவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைக் கலந்துரையாடுக.

9.1
9.2
9.4
9.5

**ஆசிரியர் குறிப்பு**

- நம் நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களில் ஈடுபடும்போது ஏற்படும் மனவுணர்வைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** ஆய்வுச்சிந்தனை **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

கருத்துப்படிவம்

# பாடம் 4 நாட்டின் நற்பெயரைப் பாதுகாத்தல்

அரவிந்தன் தன் குடும்பத்துடன் மலாக்காவில் உள்ள ஆ பாமோசா கோட்டைக்குச் (A famosa) சுற்றுலா சென்றான். அங்கு ஓர் ஆடவர் காலிப் புட்டியைக் கீழே எறிவதைக் காண்கிறான்.




மேற்கண்ட சூழலில் அரவிந்தன் துணிவுடன் நடந்திருக்காவிட்டால் என்ன நேர்ந்திருக்கும்?

9.1
9.3
9.4

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களைக் கூறப் பணித்தல்.
- நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளை 'வல்லுநர் இருக்கை' (Hot Seat) நடவடிக்கை வாயிலாக வகுப்பில் படைக்கக் கூறுதல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** நாட்டுப்பற்று

குறைநீக்கல்

# பாடம் 5 என்ன செய்வாய்?

பின்வரும் மொழி விளையாட்டில் மாணவர்கள் பங்கேற்கவும்.




**விளையாடும் முறை:**

1. மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவும்.
2. 'பூவா தலையா' முறையில் போட்டியைத் தொடங்கவும்.
3. மாணவர் மேற்கண்ட பலகையைச் சுழற்றவும்.
4. துணிவு, வீரம், தைரியம், பெருமிதம், மனநிறைவு, திருப்தி ஆகிய சொற்களில் முள் நின்றால் மட்டுமே மாணவன் பங்கேற்க முடியும். பிற சொற்களில் நின்றால் வெளியேற வேண்டும்.
5. மாணவன் நாட்டின் தன்மானத்தைக் காப்பதற்கு அவன் செய்த துணிகரமான செயலைப் பற்றி பேச வேண்டும். (எ.கா: பொது இடத்தில் புகைப்பிடித்தவரைத் தட்டிக் கேட்டல்)
6. பேசிய மாணவனுக்கு 2 புள்ளிகள் கிடைக்கும்.
7. இந்நடவடிக்கையைத் தொடர்ந்து வெற்றி பெற்ற குழுவினரைத் தேர்ந்தெடுக்கவும்.

9.1
9.4
9.5

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களைப் பட்டியலிட்டு வட்ட வரைபடத்தில் எழுதி விளக்கப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** நாட்டுப்பற்று



## பாடம் 6 மனதில் துணிவு வேண்டும்

வளப்படுத்துதல்

கீழ்க்காணும் மாவீரர்களின் துணிவான செயல்களையும் அவற்றால் நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகளையும் குறிப்பிடுக.

### தோக் ஜங்கூட், கிளந்தான்



துணிவான செயல்கள்

நன்மைகள்

### ரெந்தாப், சரவாக்



துணிவான செயல்கள்

நன்மைகள்

### டத்தோ மஹாராஜா லேலா, பேராக்



துணிவான செயல்கள்

நன்மைகள்

### யாம்துவான் அன்தா, நெகிரி செம்பிலான்



துணிவான செயல்கள்

நன்மைகள்

### டத்தோ பஹாமான், பகாங்



துணிவான செயல்கள்

நன்மைகள்

### டோல் சைட், மலாக்கா



துணிவான செயல்கள்

நன்மைகள்



9.1
9.3

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் தன்மானத்தைக் காக்கும் துணிவான செயல்களைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைக் கலந்துரையாடி, தொகுத்துக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்

## பாடம் 7 துணிந்து வாழக் கற்றுக்கொள்

வளப்படுத்துதல்

செய்து மகிழ்க.

| உனது துணிவான செயல் | சூழல் | புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவு |
| --- | --- | --- |
| | நெடுஞ்சாலையில் சட்டவிரோத மோட்டார் பந்தயம் நடைபெறுகிறது. | |
| | சாலையிலுள்ள முக்கிய அறிவிப்புப் பலகைகளைப் பொறுப்பற்ற சில இளைஞர்கள் சேதப்படுத்துகின்றனர். | |
| | நாட்டிலுள்ள பொதுக்கழிப்பறைச் சுவரில் சிலர் கிறுக்கிக் கொண்டிருக்கின்றனர். | |
| | மக்கள் திறந்த வெளியில் குப்பைகளை எரிக்கின்றனர். | |
| | அரசாங்க ஊழியர் ஒருவர் கையூட்டு வாங்குவதைக் காண்கிறாய். | |
| | தேசியக் கொடி தலைகீழாகப் பறக்கவிடப்பட்டுள்ளது. | |

9.1
9.3
9.4

ஆசிரியர் குறிப்பு


- நாட்டின் தன்மானத்தைக் காக்கத் துணிவாகச் செயல்படுகையில் ஏற்படும் மனவுணர்வை உள்வெளி வட்ட (Inside-Outside Circle) நடவடிக்கை வாயிலாகச் செயல்படுத்தப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

வளப்படுத்துதல்

## பாடம் 8 தட்டிக்கேட்பதில் துணிவு

எழிலரசி ‘தாமான் தித்திவங்சா’ விளையாட்டுப் பூங்காவில் பின்வரும் பொறுப்பற்ற செயலைக் கவனித்தாள்.




1. மேற்கண்ட சூழலில் நாட்டின் வளப்பத்தைப் பேணும் ஒரு குடிமகனாய் நீ மேற்கொள்ளும் துணிகரமான செயலையும் அதனால் ஏற்படும் மனவுணர்வையும் வரிப்படத்தில் குறிப்பிடுக.
2. அறிவிப்புப் பலகையில் உள்ள தகவல்களைக் கலந்துரையாடுக.

9.4
9.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் தன்மானத்தைக் காக்கும் வகையில் செயல்பட்ட சக நண்பர்களின் வீரச் செயலைப் பாராட்டி மின் வாழ்த்தட்டை ஒன்றைத் தயாரிக்கப் பணித்தல்.


**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்




## மதிப்பீடு

செய்துபார்

1. கீழ்க்காணும் சூழல்களில் நீ எவ்வாறு துணிவுடன் செயல்படுவாய்?

அ. 


துணிவான செயல்:

______________________________

ஆ. 


துணிவான செயல்:

______________________________

2. கீழ்க்காணும் சூழல்களில் நீங்கள் எவ்வாறு நாட்டின் தன்மானத்தைக் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் என்பதை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| அ. | மின்னியல் ஊடகங்களில் நம் நாட்டுத் தலைவர்களைப் பற்றிய அவதூறுகள் இடம்பெறுகின்றன. | மலேசிய குடிமகன் என்ற முறையில் உங்களின்.. | மனவுணர்வு: ______ <br> நடவடிக்கை: ______ |
| ஆ. | நம் நாட்டுக்குச் சுற்றுலா மேற்கொண்டுள்ள சுற்றுப்பயணி ஒருவர் நம் நாட்டைப் பற்றி குறை கூறுகிறார். | மலேசியர் என்ற முறையில் உங்களின்.. | மனவுணர்வு: ______ <br> நடவடிக்கை: ______ |
| இ. | கள்ளக் குடியேறிகள் நாட்டின் அமைதியைச் சீர்குலைக்கும் சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். | நாட்டின் குடிமகன் என்ற முறையில் உங்களின்.. | மனவுணர்வு: ______ <br> நடவடிக்கை: ______ |

தொகுதி 10

நெறி அறிமுகம்

# நேர்மை

பாட அறிமுகம்

## பாடம் 1 நேர்மையைப் போற்றுவோம்


உனது இதயத்தில் நேர்மை இருந்தால்
உனது நடத்தையில் அழகு இருக்கும்
உன் நடத்தையில் அழகு இருந்தால்
வீட்டில் அமைதி இருக்கும்
வீட்டில் அமைதி இருந்தால்
நாட்டில் அமைதி இருக்கும்
நாட்டில் அமைதி இருந்தால்
உலகில் சமாதானம் பிறக்கும்
(டாக்டர் அப்துல் கலாம்)



கருத்துப்படிவம்

## பாடம் 2 கடமையில் நேர்மை

நாடாளுமன்ற உறுப்பினர் தனக்குக் கிடைத்த கோவிட்-19 கோறணி நச்சில் நிவாரண நிதியை மக்களுக்கு முழுமையாகச் செலவிட்டார். நாட்டின் வளப்பத்திற்காகத் தனது கடமையைச் சரியாகச் செய்தார்.




1. நாட்டின் வளப்பத்திற்கு நீ எவ்வாறு நேர்மை மனப்பான்மையைப் பேணுவாய்?
2. நேர்மை பண்பின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடவும்.

10.1
10.2
10.3

**ஆசிரியர் குறிப்பு**

- நேர்மை பண்பைப் புறக்கணிப்பதால் ஏற்படும் தீமைகளை இணைப்பு வரைவரடம் வாயிலாகக் கலந்துரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நிதிக்கல்வி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 3 பல்லின மக்களிடையே நேர்மை

கருத்துப்படிவம்

பின்வரும் பாடப்பகுதிவழி பூர்வக் குடியினர் பற்றிய விவரங்களை அறிக.

புத்ராஜெயா, மே 14- நாட்டில் வாழ்கின்ற பூர்வக்குடி மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டறியவும் அவற்றைக் களையவும் உரிய வழிவகை பற்றி ஆராய்வதற்கான வட்ட மேசை மாநாடு நேர்மையாக நடைபெற்றது. பூர்வக்குடி மக்களின் சிக்கல்களைக் களைவதில் அரசாங்கம் முனைப்பு காட்டுவதை இது வெளிப்படுத்துகிறது என்று பிரதமர் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பூர்வக்குடி சமூகத்தின் பூர்வீக நிலம், கல்வி, தூய்மையான நீர் மற்றும் மின் விநியோகம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள், பொருளாதார வளர்ச்சி, அவர்களுக்கான தலைமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் குறித்தெல்லாம் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டன.

புத்ரா மலேசியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சர்ஜித் சிங் கில் வழிநடத்திய இந்தக் கூட்டத்தில் பங்கேற்பாளர்கள், பூர்வக்குடி மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பூர்வக்குடி மக்களின் வாழ்க்கை நிலை குறித்தெல்லாம் ஆலோசித்ததோடு பூர்வக்குடி மக்கள் மீதான மனித உரிமை ஆணைய அறிக்கை குறித்து அரசாங்கம் அதிகம் அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.



மலேசியப் பூர்வக்குடி மக்கள்



பூர்வக்குடி மக்களின் இருப்பிடம்

பூர்வக்குடி மக்கள் புறக்கணிக்கப்பட்டால் ஏற்படும் விளைவுகளை வட்ட மேசை வாயிலாகக் கலந்துரையாடுக.

10.1
10.2
10.3

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளப்பத்திற்காகப் பூர்வக் குடியினர் மேற்கொள்ளும் நேர்மையான செயல்களைப் பட்டியலிட்டு விளக்கப் பணித்தல்.
- நாட்டின் வளப்பத்திற்காக மேற்கொள்ளும் நேர்மை பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை எழுதி சங்கிலித் தொடர் நடவடிக்கைவழி வகுப்பில் படைக்கப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

கருத்துப்படிவம்

# பாடம் 4 மக்கள் நேர்மையானவர்களா?

## சூழல் 1

அப்பா அரசாங்கம் அறிவித்த உதவி தொகையைப் பெற விண்ணப்பப் பாரத்தைப் பூர்த்தி செய்கிறார்.




## சூழல் 2

முன்னதாக இயங்கலை வகுப்பில் கலந்து கொள்ள சிரமத்தை எதிர்நோக்கிய சீவகன் அன்று அரசாங்கத்தால் வழங்கப்பட்ட புதிய திறன்பேசி வாயிலாக இணைந்து தகவலை ஆசிரியரிடம் கூறினான். இதன் தொடர்பாக நிரஞ்சனா தன் அப்பாவிடம் வினவினாள்.




நாட்டின் வளப்பத்திற்காக நீங்கள் நேர்மையுடன் பெற்றுக் கொண்ட அரசாங்க உதவிகள் பெற்ற வேளையில் ஏற்பட்ட மனவுணர்வுகளைச் சைகை நடவடிக்கை வாயிலாக வெளிப்படுத்துக.

10.3
10.4
10.5

ஆசிரியர் குறிப்பு

- அரசாங்க உதவிகளைப் பெறும் போது நேர்மையான விவரம் பெறாவிட்டால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிய உரை நிகழ்த்த பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தகவல் நிறைந்தவர்

திடப்படுத்துதல்

# பாடம் 5 உதவி பெறுவதில் நேர்மை

அண்மையில் சமூக வலைத்தளங்களில் மிகவும் பரவலாகப் பகிரப்பட்ட ஒரு காணொலியைக் கமலினி தன் அப்பாவின் கைப்பேசியில் பார்க்கிறாள். அந்தக் காணொலியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உணவு வங்கியிலிருந்து நேர்மையின்றித் தேவைக்கு அதிகமாகப் பொருள்களை எடுத்துச் செல்வதைக் காண்கிறாள்.




1. நீங்கள் பார்த்த அல்லது அனுபவித்த நேர்மையான செயல்களைப் பற்றி வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.
2. நாட்டின் வளப்பத்திற்காக நேர்மை பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தையும் அதனைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளையும் கலந்துரையாடவும்.

10.1
10.2
10.3
10.4
10.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளப்பத்திற்காக நேர்மையாகச் செயல்படுகையில் ஏற்படும் மனவுணர்வைக் கூறச் செய்தல்.


## பாடம் 6 வருமானத்தில் நேர்மை

திடப்படுத்துதல்

பின்வரும் தகவலை அறிக.

வேலை செய்கின்ற நாட்டின் குடிமகன் ஒவ்வொரு ஆண்டும் தனது வருமானத்திற்கு ஏற்ப அரசாங்கத்திற்கு நேர்மையாக வருமான வரி செலுத்த வேண்டும். நாம் செலுத்துகின்ற வரிப்பணம் அரசாங்கத்தால் மீண்டும் மக்களின் நலனுக்குச் செலவிடப்படுகிறது. ரேவதியின் அப்பாவும் ஒவ்வொரு ஆண்டும் தனது வருமானத்திற்கு ஏற்ப தவறாமல் நாட்டின் வளப்பத்திற்காக நேர்மையுடன் வருமான வரியைச் செலுத்துகிறார்.






எதிர்காலத்தில் நீ நாட்டின் வளப்பத்திற்கு வருமான வரி செலுத்தும்போது நீ எவ்வாறு செயல்படுவாய்?

10.1
10.2
10.3
10.4
10.5

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் வளப்பத்திற்காக நேர்மைப் பண்பினைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து பாகமேற்று நடிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

# பாடம் 7 நேர்மையின் முக்கியத்துவம்

திடப்படுத்துதல்

கொடுக்கப்பட்ட சூழலில் உனக்கு ஏற்பட்ட மனவுணர்வினையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் குறிப்பிடுக.

**எடுத்துக்காட்டு** நம் நாடு வழங்கும் உதவித் தொகை பாரத்தில் நான் சரியான தகவல்களை எழுதினேன்.

**மனவுணர்வு :** நிம்மதி அடைவேன்.
**முக்கியத்துவம் :** அனைவருக்கும் நேர்மையான முறையில் உதவிகள் கிடைக்கும்.

**சூழல் 1** அரசாங்கத் தேர்வில் நான் நேர்மையான முறையில் விடை எழுதினேன்.

**மனவுணர்வு :**
**முக்கியத்துவம் :**

**சூழல் 2** தபால்தலை வாங்கிய பிறகு அதிகமான மீதப்பணத்தைக் கொடுத்த அதிகாரியிடம் மீண்டும் அப்பணத்தை ஒப்படைத்தேன்.

**மனவுணர்வு :**
**முக்கியத்துவம் :**

**சூழல் 3** அவசர வேளையிலும் சாலையில் சமிக்ஞை விளக்கைப் பின்பற்றி அப்பாவுடன் பொறுமையுடன் காத்திருந்தேன்.

**மனவுணர்வு :**
**முக்கியத்துவம் :**

**சூழல் 4** பேரங்காடியில் தவறுதலாக கைப்பட்டு கீழே விழுந்து உடைந்த பொருளுக்குத் தயங்காமல் பணம் செலுத்தினேன்.

**மனவுணர்வு :**
**முக்கியத்துவம் :**

**சூழல் 5** புலனத்தில் நாட்டு தலைவர்கள் பற்றிய தவறான கருத்துகளைப் பிறருக்குப் பகிரமாட்டேன்.


**மனவுணர்வு :**
**முக்கியத்துவம் :**

10.1
10.2
10.3
10.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளப்பத்திற்காக நேர்மையான செயல்களைப் போலித்தம் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்





# பாடம் 8 நேர்மை உண்டியல் செய்வோம் வாரீர்!

ஆசிரியை திருமதி ஜெயந்தி தனது வகுப்பறையில் நேர்மை கடையை ஓர் மூலையில் உருவாக்கினார். நேர்மை கடை மூலையில் வைப்பதற்கு உண்டியலைத் தயாரித்தனர்.

**தேவையான பொருள்கள்:**



வண்ணத்தாள்



பெட்டி



பசை நாடா





பசை






மைத்தூவல்



1 பெட்டியை வண்ணத்தாளால் ஒட்டுதல்



2 பெட்டியில் துளையிடுதல்





3 உண்டியலை அழகுபடுத்துதல்





4 நேர்மை கடையில் உண்டியலை வைத்தனர்

நேர்மை கடையில் எடுத்த பொருளுக்கான உரிய பணத்தைச் செலுத்த வேண்டும்.



நேர்மை கடையில் நேர்மை பண்பைக் கடைப்பிடிக்காவிடில் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.



10.3
10.4

ஆசிரியர் குறிப்பு


- நேர்மை கடையில் நேர்மை பண்பைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் மனவுணர்வைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** புத்தாக்கம் **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

# பாடம் 9 சிந்தித்து செயல்படுவோம்

வளப்படுத்துதல்

திரு.மஞ்சிட் சிங் தன் மகனைப் பிரத்தியேக வகுப்புக்கு அழைத்துச் செல்லும்போது திடீரென ஓர் உந்துருளியை மோதிவிட்டார்.




1. மேற்கண்ட சூழலில் அவ்விருவரும் உந்துருளி ஓட்டுநருக்கு உதவவில்லை என்றால் என்ன நிகழும்?
2. உன் வாழ்வில் இதுபோன்ற சூழல் நிகழ்ந்ததுண்டா? உன் அனுபவத்தையும் மனவுணர்வையும் பகிர்ந்து கொள்.

10.1
10.3
10.4
10.5

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் நாட்டின் வளப்பத்தைச் சீர்குலைக்கும் நேர்மையின்மை செயல்களையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் பல்நிரவோட்ட வரையில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

## பாடம் 10 கதைச் சங்கிலி

வளப்படுத்துதல்

கொடுக்கப்படும் சூழல் அட்டைக்கு ஏற்ப கதைச் சங்கிலி உருவாக்குக.

படி 1 : மாணவர்கள் 4 முதல் 6 வரையிலான எண்ணிக்கையில் வட்டத்தில் அமருதல்.

படி 2 : ஆசிரியர் ஒவ்வொரு குழுவிற்கும் சூழல் அட்டையைத் தருதல். (எடுத்துக்காட்டு: திரு.கவின் தேசிய வங்கியில் நேர்மையாகப் பணி புரிகிறார்.)

படி 3 : குழுவிலுள்ள முதல் மாணவன் கொடுக்கப்பட்ட சூழலினை வைத்து கதையின் தொடர்ச்சியை நாட்டின் வளப்பத்திற்காக நேர்மைப் பண்பினைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படும் மனவுணர்வையும் பேச வேண்டும்.

படி 4 : அக்கதையை ஒவ்வொருவராகத் தொடர வேண்டும்.

படி 5 : குழுவில் உள்ள இறுதி மாணவர், இதுவரை கேட்ட கதையைத் தொகுத்து முழுமையாகக் கூறுதல்.

படி 6 : இறுதியாக மாணவர்கள் அக்கதையை எழுதுதல்.



10.1
10.2
10.4

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்களின் கதை நகர்ச்சியை உருவாக்கி வகுப்பில் பாகமேற்று நடித்துக் காட்டப் பணித்தல்; ஆசிரியர் கண்காணித்தல்.
- ஆசிரியர் மேலும் சில எடுத்துக்காட்டுகளைத் தயார் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பீடு **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்




# பாடம் 11 நேர்மையைப் பாராட்டுவோம்

செய்துபார்

கீழ்க்காணும் சூழல்களை வாசித்து சுயமதிப்பு செய்க.

| சூழல்கள் | குறைவாகச் செய்வேன் | | | அதிகமாகச் செய்வேன் | |
|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 |
| எ.கா: எந்தச் சூழ்நிலையிலும் உண்மை பேசுவேன். | | | | ✓ | |
| 1) அரசாங்கப் பாரம் பூர்த்தி செய்யும்போது உண்மையான தகவலை எழுதுவேன். | | | | | |
| 2) நாட்டின் வளப்பத்திற்காக அரசாங்க உதவி பெறுவதில் நேர்மையைக் கடைப்பிடிப்பேன். | | | | | |
| 3) நாட்டின் வளப்பத்தில் அக்கறை கொள்வேன். | | | | | |
| 4) நாட்டின் நல்லிணக்கத்திற்காகப் பாடுபடுவேன். | | | | | |
| 5) மற்ற இனத்தவருடன் பழகும்போது போலித்தனமின்றிப் பழகுவேன். | | | | | |
| 6) நேர்மையுடன் பணியாற்றும் காவல்துறையினரை மதிப்பேன். | | | | | |
| 7) நாட்டின் விளையாட்டு வீரர்களை மனமுவந்து பாராட்டுவேன். | | | | | |
| 8) நாட்டில் ஒற்றுமையும் அமைதியும் நிலவ நேர்மையைக் கடைப்பிடிப்பேன். | | | | | |

| மொத்தப் புள்ளிகள் | விளக்கம் |
|---|---|
| 30-40 | நீங்கள் நேர்மை பண்புமிக்கவர். |
| 15-30 | உங்கள் நேர்மையை அதிகரிக்க வேண்டும். |
| 0-15 | நேர்மையான குடிமகனாக நீங்கள் மாற வேண்டும். |



10.1

ஆசிரியர் குறிப்பு

- இப்பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களுக்கு வழங்குதல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## மதிப்பீடு

வெளிநாட்டுத் தூதர் ஒருவர் அவசர அவசரமாகத் தங்கும் விடுதியை விட்டு வெளியேறும் வேளையில் அவரது கணினிப் பையையும் முக்கிய ஆவணங்களையும் தவற விட்டுச் செல்வதை அமுதவாணன் கவனிக்கிறான்.



1. அமுதவாணனின் நடவடிக்கை என்னவாக இருக்கும்?

2. அமுதவாணன் அவ்வாறு செய்வதால் என்ன விளைவு ஏற்படும்?

3. மேற்கண்ட சூழலில் நீ அமுதவாணனாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?

4. அமுதவாணனின் செயல் வெளிநாட்டுத் தூதருக்கு எம்மாதிரியான எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கும்?

5. அமுதவாணனின் செயல் நம் நாட்டின் நற்பெயருக்கு ஏற்படுத்தும் விளைவைக் கூறுக.

நெறி அறிமுகம்

# தொகுதி 11

# ஊக்கமுடைமை

பாட அறிமுகம்

## பாடம் 1 ஊக்கத்தின் வெகுமதி




ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா நுழை (குறள் 594)

பொருள்: சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

அறிந்திடுக




## பாடம் 2 ஊக்கத்தால் உயர்ந்தோர்

தமிழினியாள் மலேசிய நாளையொட்டி கல்வி அமைச்சு ஏற்பாடு செய்திருந்த 'மலேசிய சாதனையாளர்கள்' எனும் தலைப்பில் 'Anyflip' மூலம் திரட்டேடு தயாரிக்க எண்ணினாள். எனவே, நாட்டின் நற்பெயரைப் பல்வேறு துறைகளில் மேலோங்கச் செய்த முன்னுதாரண சாதனையாளர்கள் தொடர்பான விவரங்களைச் சேகரித்தாள்.



டான் ஸ்ரீ டோனி பெர்னாண்டஸ் என்பவர் மலேசியத் தொழில் முனைவர்களில் ஒருவராவார். இவர் 'ஏர் ஆசியா' எனும் மலிவு விலை விமானச் சேவையை உருவாக்கியவர். 'பார்முலா I கேத்தர்ஹாம்' கார் பந்தய குழுமத் தலைவராகவும் சேவையாற்றுகிறார்.

கோ.சா என்று அழைக்கப்படும் அமரர் தமிழவேள் கோ. சாரங்கபாணி மலேசியாவில் தமிழும் தமிழரும் நிலைபெற்று இருப்பதற்குத் தன்னையே தியாகம் செய்து கொண்ட வரலாற்று நாயகராவார். மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வியல் துறையில் தமிழ்க் கல்வி போதனைக்கு வித்திட்டவர். இவரின் ஊக்கத்தினால் இன்றைய மலேசியத் தமிழர்கள் பல்கலைக்கழகம் வரை தமிழ்க்கல்வி கற்க வாய்ப்பு கிடைத்துள்ளது.





இந்தியப் பெண்மணி கிசோனா செல்வதுரை மலேசியாவின் தலைசிறந்த பூப்பந்து வீரர்களில் ஒருவராவார். அண்மையில் ஸ்பெய்ன் நாட்டில் நடந்த பூப்பந்து போட்டியிலும் தங்கம் வென்றவர். மேலும், இவர் இந்தோனேசிய சர்வதேச தொடர் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் தனது முதல் மூத்த சர்வதேச பட்டத்தை வென்றவர் ஆவார்.

மலேசிய ராணுவத்தில் முதல் இந்தியப் பெண்மணி ‘மேஜர் ஜெனரல்’ என்ற உயரிய பதவி பெற்றவர் திருமதி சூரியகலா ஆவார். மலேசிய வரலாற்றில் முதல் பெண் மேஜர் ஜெனரல் என்ற பெருமையைச் சூரியகலா பெற்றுள்ளார். இரண்டு குழந்தைகளுக்குத் தாயான சூரியகலா தனது ஊக்கத்தினாலும் அர்ப்பணிப்பினாலும் இந்த வெற்றியை நிலைநாட்டியுள்ளார்.



மலேசிய மண்ணில் மருத்துவத் துறையில் தலைசிறந்த சாதனையைப் படைத்து வருபவர் டத்தோ டாக்டர் வைத்தியலிங்கம் பத்பநாதன் ஆவார். இவர் கை மற்றும் கை மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை, கை அதிர்ச்சி மற்றும் புற நரம்பு நுண்ணுயிர் அறுவை சிகிச்சை (மைக்ரோ சர்ஜரி) புணரமைப்பதில் கைத்தேர்ந்தவர். 1978இல் மலாயாப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் பட்டப்படிப்பை முடித்தார். முதுகலை மருத்துவப் பயிற்சியை 1983இல் (FRACS) ராயல் ஆஸ்திரேலிய அறுவை சிகிச்சை கல்லூரி, மெல்போர்னில் தொடர்ந்தார். மலேசியாவில் ‘பிளாஸ்டிக்’ அறுவை சிகிச்சை தேசிய நிபுணர் பதிவு வாரியச் சான்றிதழையும் பெற்றுள்ளார். 2002இல் உலகின் முதல் கை அறுவை சிகிச்சை செய்ததற்காகக் கின்னஸ் சாதனை விருதைப் பெற்றார். மலேசிய நாட்டின் பெருமை உலகெங்கும் பரப்பிய இவரது ஆக்கமும் ஊக்கமும் மலேசிய மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக இருக்கும் என்பது திண்ணம்.



1. மேற்குறிப்பிட்ட சாதனையாளர்களிடமிருந்து நீ கற்றுக் கொண்ட பண்பு யாது? அதனை மனவோட்ட வரிப்படத்தில் எழுதுக.
2. நமது நாட்டில் ஊக்கத்தாலும் அயராத உழைப்பாலும் உயர்ந்த ஒரு நபரைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துத் திரட்டேடு ஒன்றை உருவாக்குக.

11.1
11.2

**ஆசிரியர் குறிப்பு**

- மாணவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கான ஊக்கமுடைமை பண்பினை வெளிப்படுத்தும் செயல்களையொட்டி தகவல் உலா மேற்கொள்ளப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** தொடர்புகொள்ளும் திறன்

## பாடம் 3 பண்பில் ஊக்கமுடைமை

கருத்துப்படிவம்

உள்நாட்டு நாளிதழில் வெளிவந்த அறிவியல் புத்தாக்கக் கண்டுபிடிப்புக்கான சாதனை வீரர்களைப் பற்றி தமிழருவி தமது குறிப்பேட்டில் பின்வருமாறு குறித்து வைத்துள்ளார்.



1. இப்பள்ளி சிறிய தோட்டப்பள்ளிதான்: 280 மாணவர்களையும் 20 ஆசிரியர்களையும் உள்ளடக்கியது.
2. முதல் சாதனை 2015ஆம் ஆண்டில் மின் கொடியேற்றியை உருவாக்கியது.
3. ஜூலை 2016- கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச அளவிலான அறிவியல் விழாவில் முதல் நிலை.
4. மே 2017- மலேசிய அனைத்துலக அளவிலான புத்தாக்கக் கண்காட்சியில் (ITEX) தங்கம் வென்றது.
5. செப்டம்பர் 2017- ஜாகார்த்தா இந்தோனேசியா புத்தாக்கப் போட்டியில் தங்கம் வென்றது.
6. மே 2018- கோலாலம்பூர் மாநாட்டு மையம் புத்தாக்கக் கண்காட்சியில் WYIE (ITEX) தங்கம் வென்றது.
7. நவம்பர் 2019- மாக்காவ் மாநாட்டு மையம், ஹோல்டி மாக்காவ் அனைத்துலக புத்தாக்கப் போட்டியில் 1 தங்கம், 1 வெள்ளி பெற்றது.

1. நாட்டின் தன்மானத்தை அனைத்துலக அரங்கில் நிலைநாட்டுவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. நாட்டின் வளர்ச்சியில் ஊக்கமுடைமை பண்பினைச் செயல்படுத்தும் முறையை 'Hot Seat' நடவடிக்கைவழி விவாதிக்கவும்.

11.3
11.4
11.5


ஆசிரியர் குறிப்பு
- நாட்டின் நற்பெயரை மேலோங்கச் செய்த முன்னுதாரண நபர்களில் ஒருவரைப் பேட்டி எடுக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

கருத்துப்படிவம்

# பாடம் 4 பொருளாதாரத்தில் ஊக்கமுடைமை

கயல்விழியின் குடும்பத்தினர் காய்கறிகள் பயிரிட்டு விற்பனை செய்து குடும்ப வருமானத்தைப் பெருக்க எண்ணினர். ஆனால், அவர்கள் அடுக்குமாடி வீட்டில் வசிப்பதால் அதற்குச் சிரமத்தை எதிர்நோக்கினர். உடனே, கயல்விழி தேசிய விவசாயத் துறை அறிமுகப்படுத்தியுள்ள நீர்ப்பயிரியல் முறையைப் பற்றி தன் அப்பாவிடம் கூறினாள். அவர்கள் சமூக விவசாய மேம்பாட்டு அமைப்பு ஏற்பாடு செய்துள்ள நகர்புற விவசாய திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்தனர். தேசிய விவசாயத் துறை துணையுடன் அவர்கள் வீட்டு மாடி முகப்பில் நீர்ப்பயிரியல் முறையில் காய்கறிகளைப் பயிரிடத் தொடங்கினர்.




இதுபோன்று திட்டங்களைச் செயல்படுத்தும்போது ஏற்படும் சிக்கல்களையும் அவற்றை ஊக்கத்துடன் செயல்படுத்துகையில் ஏற்படும் மனவுணர்வையும் விவரித்திடுக.

11.2
11.3
11.4
11.5

**ஆசிரியர் குறிப்பு**

- ஆசிரியர் துணையுடன் ஊக்கமுடைமை பண்பினைக் கடைப்பிடித்து பள்ளியில் நீர்ப்பயிரியல் முறையில் காய்கறிகள் பயிரிடும் திட்டத்தைச் செயல்படுத்த பணித்தல்.

**வி.வ.கூ:** நிதிக்கல்வி **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** நாட்டுப்பற்று

திடப்படுத்துதல்


# பாடம் 5 ஊக்கத்தின் மேன்மை

நாட்டின் வளப்பத்திற்காக ஊக்கத்துடன் செயல்பட்ட சாதனையாளர்கள் பலர் நம் நாட்டில் உள்ளனர்.



**சுரேஸ் செல்வதம்பி**

இவர் நெதர்லாந்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான வில் வித்தை அனைத்துலக போட்டியில் ஆண்களுக்கான தனிநபர் ‘ரிக்கர்வ்’ பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.




**முகமட் ரிட்ஸுவான்**

இவரைப் பற்றிக் கூறுக.



**லீ தியம்**

99 ஸ்பிட் மார்ட் (99 Speedmart) மலிவு விலையில் அத்தியாவசியப் பொருள்களை விற்றுக் கொண்டிருக்கின்ற கடையின் தோற்றுநர். இவரது உழைப்பால் இன்று மலேசியா முழுவதும் பல கிளைக் கடைகள் இருக்கின்றன.

1. மேற்குறிப்பிடப்பட்டவர்கள் ஊக்கத்துடன் செயல்பட்டதால் நாட்டிற்கு என்ன நேர்ந்திருக்கும்?
2. நாட்டின் வளர்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் எவ்வாறு தங்களின் பங்கை ஆற்றுகின்றனர் என்று விவரித்து கூறுக.

11.1
11.2
11.3
11.4
11.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளர்ச்சிக்கான ஊக்கமுடைமை செயல்களின் முக்கியத்துவத்தை அடையாளங்கண்டு வட்ட வரைபடத்தில் குறிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

திடப்படுத்துதல்

# பாடம் 6 போட்டியில் ஊக்கமுடைமை

நாட்டின் வளர்ச்சியில் ஊக்கமுடைமைப் பண்பினைக் கடைப்பிடித்து சாதனை படைத்த இளம் சாதனையாளர்வழி அடையாளம் கண்டு நிறைவு செய்க.

**பெயர்**



**மேற்கொண்ட பயிற்சிகள்**

**சாதனைகள்**

**எப்பொழுது (நாள், நேரம்)**

**எங்கு (இடங்கள்)**

**தகவல் துளி**

எழுமின் விழிமின்!
நில்லாது செல்மின்!
(சுவாமி விவேகானந்தர்)

அறிந்திடுக







11.1
11.2
11.3
11.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளர்ச்சிக்கான ஊக்கமுடைமைப் பண்பின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு அறிவோட்ட வரையில் காட்டப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** ஆக்கச்சிந்தனை

# பாடம் 7 முயற்சி! பயிற்சி! வெற்றி

குறைநீக்கல்

போட்டியில் வெற்றிபெற முயற்சியும் பயிற்சியும் மிக அவசியம்.

எல்லாப் புகழும் இறைவன் ஒருவனுக்கே...
நீ நதிபோல ஓடிக் கொண்டிரு...
இந்த வேர்வைக்கும் வெற்றிகள் வேர் வைக்குமே...
உன்னை உள்ளத்தில் ஊர் வைக்குமே..!

கேட்டு மகிழ்க




**தகவல் துளி**

உளிதாங்கும் கற்கள்தானே
மண்மீது சிலையாகும்.
வலிதாங்கும் உள்ளம்தானே
நிலையான சுகம் காணும்!

1. பாடலில் வெளிப்படும் ஊக்கமுடைமை நடவடிக்கைகளைப் பட்டியலிடுக.
2. தன்முனைப்பு பாடல்களைக் கேட்கும்போது உனக்கு ஏற்படும் மனவுணர்வுகளைப் பட்டியலிடுக.

11.1
11.2
11.3
11.4

**ஆசிரியர் குறிப்பு**

- ஊக்கமுடைமையை வெளிப்படுத்தும் மற்ற பாடல்களை மாணவர்கள் பாடுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

வளப்படுத்துதல்

## பாடம் 8 முயற்சியில் ஊக்கம்

நாட்டின் வளப்பத்தைக் காக்க ஊக்கமுடைமையை வெளிப்படுத்தும் போது ஏற்படும் முக்கியத்துவத்தையும் மனவுணர்வையும் எழுதுக.

**சூழல் 1** தேசிய அளவிலான 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் நாட்டிற்குத் தங்கப் பதக்கம் பெற்றுத் தந்தபோது ஏற்பட்ட மனவுணர்வு...

மனவுணர்வு :
முக்கியத்துவம் :

**சூழல் 2** காற்பந்து விளையாட்டில் மலேசிய அணி முதல்நிலையில் வாகை சூடினர் என்று தொலைக்காட்சியில் செய்தி அறிந்ததும்...

மனவுணர்வு :
முக்கியத்துவம் :

**சூழல் 3** உலகளாவிய நிலையில் அறிவியல் புத்தாக்கக் கண்டுபிடிப்பில் உன் பள்ளி மாணவர்கள் சாதனை புரிந்ததும்...

மனவுணர்வு :
முக்கியத்துவம் :

**சூழல் 4** உலகரங்கில் சிறந்த ஊக்கமுடைய தொழிலதிபர் என்ற பட்டம் கிடைக்கையில்...

மனவுணர்வு :
முக்கியத்துவம் :

**சூழல் 5** நாட்டின் நற்பெயரை நிலை நாட்டுவதில் பசுமைத் திட்டத்தில் என் கடமையை ஆற்றுகையில்...

மனவுணர்வு :
முக்கியத்துவம் :

**சூழல் 6** நாட்டிலுள்ள நெடுஞ்சாலையைத் தூய்மையாக வைத்திருக்கும் ஊக்கமுடைய ஊழியர்களைப் பார்க்கையில்...

மனவுணர்வு :
முக்கியத்துவம் :

11.1
11.2
11.3
11.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளப்பத்திற்காக ஊக்கத்தால் உயர்ந்த முன்னுதாரண நபர்களைப் பற்றி சிறு குறிப்புகள் எழுதப் பணித்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# மதிப்பீடு

மதிப்பீடு

செய்துபார்

1. நாட்டின் நற்பெயரைக் காக்கும் ஒரு குடிமகனின் பண்புகள் எப்படி இருக்க வேண்டும்? குறிப்பிடுக.




2. ஊக்கமுடைமை பண்பின் மூன்று தன்மைகளைக் கண்டறிந்து எழுதுக.

அ. நம் நாட்டு ____________ உயர் வியாபாரிகள் ஊக்கத்துடன் செயல்படுவது மிகவும் அவசியமாகும்.

ஆ. ____________ செயல்பட்ட திரு. அப்துல் லத்தீஃப் அனைத்துலக பாராலிம்பிக் போட்டியில் நாட்டின் நற்பெயரைக் காக்க தங்கம் வென்றார்.

இ. இராணுவ வீரர்களின் ____________ நாட்டு மக்கள் சுபிட்சமாகவும் வளப்பத்துடனும் வாழ்கின்றனர்.

ஈ. தனது புதிய கண்டுபிடிப்பிற்காக ____________ செயல்பட்ட தமிழ்ப்பள்ளி ஆசிரியர் இன்று உலகளவில் பேசப்படுகிறார்.

உ. ஊக்கமுடைமை தொடர்பான திருக்குறளை ஒன்றை எழுதுக.

______________________________________

______________________________________

தொகுதி 12


நெறி அறிமுகம்

# ஒத்துழைப்பு

பாட அறிமுகம்

## பாடம் 1 ஒன்றிணைவோம் வாரீர்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
(மகாகவி பாரதியார்)



கருத்துப்படிவம்

# பாடம் 2 நாட்டில் ஒத்துழைப்பு துளிரட்டும்

பங்கோர் தமிழ்ப்பள்ளியின் சுற்றுச்சூழல் கழக மாணவர்கள் சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்தி அழகுபடுத்தும் திட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.




இவ்வாறான பொது இடங்களில் கூட்டுப்பணியில் ஈடுபட்ட உன் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்க.

12.1
12.2
12.3
12.4

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் சுபிட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பின் எடுத்துக்காட்டுகளைச் சிந்தனைவரையில் உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** நாட்டுப்பற்று

விமலன் தன் அண்ணனுடன் சாலையில் பயணிக்கும்போது அறிவிப்பு பலகை ஒன்றைக் கண்டான்.




1. இந்தச் சைக்கிளோட்டப் போட்டி தங்கு தடையின்றி நடைபெற நீ எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவாய்?
2. குழு நடவடிக்கைவழி கைகளைக் கொண்டு ஒத்துழைப்பைக் காட்டும் சின்னத்தை உருவாக்குக.

12.1
12.2
12.3
12.4

ஆசிரியர் குறிப்பு
- நாட்டின் சுபிட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பினை வளர்க்கும் முறைகளை விவரிக்கச் செய்தல்.
- நாட்டிற்காக ஒத்துழைப்பு வழங்குவதன் மனவுணர்வை இணையராகக் கலந்துரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

# பாடம் 4 பண்பாட்டில் ஒத்துழைப்பு

கருத்துப்படிவம்

சியாங் லீ, தம் குடும்பத்தாருடன் 'சுற்றுலா, கலை, பண்பாட்டுத் துறை அமைச்சு' ஏற்பாடு செய்திருந்த ஒற்றுமைப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டாள்.







சியாங் லீ : அம்மா, நாம் முதன் முறையாக இப்பொங்கல் விழாவில் கலந்து கொள்கிறோம் அல்லவா!

திருமதி மேங்: ஆமாம். ஆண்டுதோறும் சுற்றுலா, கலை, பண்பாட்டுத் துறை அமைச்சு இப்பொங்கல் விழாவை ஏற்பாடு செய்கிறது.

சியாங் லீ : இப்பொங்கல் விழாவில் அனைத்து இனத்தவரும் கலந்து கொள்ளலாமா அம்மா?

திருமதி மேங்: நிச்சயமாக. நம் நாட்டு மக்கள் பிறருடன் ஒத்துழைப்பு வழங்கி வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, இதனை வலுப்படுத்தவே இம்மாதிரியான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

சியாங் லீ : வாருங்கள் அம்மா. நாமும் அவர்களுடன் இணைந்து பொங்கல் வைப்போம்.

தேசிய அளவிலான நிகழ்ச்சிகளில் நீ கலந்து கொண்ட அனுபவத்தைப் பகிரவும்.

12.1
12.2
12.3
12.4
12.5

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் சுபிட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வைக் கலந்துரையாடச் செய்தல்.

விி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ.தி: குழுவாகச் செயல்படுதல்

கருத்துப்படிவம்

# பாடம் 5 ஒத்துழைப்பை அமல்படுத்துவோம்

மலேசியக் கல்வி அமைச்சு, ‘மாணவர்களும் ஒத்துழைப்பும்’ என்ற தலைப்பில் கையேடு ஒன்றை வெளியிட்டிருந்தது. ஆறாம் ஆண்டு மாணவர்கள் அதனை வாசித்து நீலாம் புத்தகத்தில் குறிப்பிட்டனர்.

## மாணவர்களும் ஒத்துழைப்பும்



ஒரு கல்லை எடுத்து பறவையைப் பார்த்து வீசினால், அது பயந்து ஓடிவிடும். அதே கல்லால் ஒரு தேன் கூட்டை நோக்கி வீசினால், அத்தேன் கூட்டில் வாழும் தேனீக்கள் கல் வீசியவரை நோக்கி கூட்டமாகப் பறந்து வரும்; கொட்டும். தேனீக்கள் ஒற்றுமையாக நம்மைத் துரத்துவதால்தான் நாம் தேனீக்களைக் கண்டு அஞ்சுகிறோம். எந்த இனமாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே எதையும் சாதிக்க முடியும்.

நாட்டின் சுபிட்சத்திற்காக ஒத்துழைப்புப் பண்பினைச் செயல்படுத்தும்போது நாட்டின் பொருளாதாரம், அரசியல், சமூக ஆகியவற்றில் மேன்மை அடையும். மேலும், பல்லின மக்கள் ஒன்றிணைந்து வாழும் மலேசிய திருநாட்டில் ஒத்துழைப்புப் பண்பினைச் செயல்படுத்துதல் என்பது மிக அவசியமாகும். மொழி, இனம், கலை, பண்பாடு, சமயம் ஆகிய வேறுபாடுகளைக் களைந்து ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஆகவே, மலேசிய குடிமக்களாகிய நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புப் பண்புடன் நடந்துகொள்வதை அவசியமாக்கிக் கொள்ள வேண்டும்.

கேட்டு மகிழ்க

1. நம் நாட்டில் ‘மக்கள் தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பு 2020’ நடைபெற்றது. இஃது அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். இத்திட்டம் சிறப்பாக நடைபெற நீ எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவாய்?
2. நம் நாட்டில் கோவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்த தேசிய தடுப்பூசி திட்டத்திற்குப் பள்ளி மாணவனாகிய நீ எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவாய்?

12.1
12.2
12.3
12.4
12.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் சுபிட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பின் செயல்களையொட்டி சிற்றறிக்கை ஒன்றை உருவாக்குதல்.
- நாட்டின் சுபிட்சத்திற்காக மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்கும்போது ஏற்படும் மனவுணர்வைப் பகிரத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தகவல் நிறைந்தவர்

கருத்துப்படிவம்

# பாடம் 6 ஒத்துழைப்புடன் திளைத்திருப்போம்

ரகுவரன் இந்து சங்கம் ஏற்பாடு செய்திருந்த தேசிய அளவிலான புராணக் கதை கூறும் போட்டியில் கலந்து கொண்டான்.





அனைவருக்கும் வணக்கம். இன்று உங்களுக்காக ஒத்துழைப்பு சார்ந்த புராணக்கதை ஒன்றைக் கூற வந்துள்ளேன். வீடோ நாடோ அனைத்திலும் ஒத்துழைப்பு என்பது வேண்டும். ஒத்துழைப்பு இல்லையெனில் வீடும் நாடும் சீரழிந்துவிடும். ஒன்றுபட்டுச் செயல்பட்டால் அனைவரும் வாழலாம். இல்லையெனில், அனைவருக்கும் அழிவு என்பது உறுதி. ஒருமுறை தேவர்களும் அசுரர்களும் ஒத்துழைப்புப் பண்புடன் பாற்கடலைக் கடைந்த பின்னர் விருந்து நடைபெற்றது. அப்போது கையினை மடக்காது விருந்துண்ண வேண்டும் என்று திருமால் நிபந்தனை விதித்தார்.

இதனை ஏற்காத அசுரர்கள், “கையை மடக்காது யாராலும் உண்ண முடியாது. இது வேண்டுமென்றே பழிவாங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிபந்தனை. இதனை நாங்கள் ஏற்கமாட்டோம்” என்று விருந்துண்ணாமல் சென்றுவிட்டனர். ஆனால், தேவர்கள் இதனை ஏற்றுக் கொண்டனர்.

தேவர்கள் எதிரெதிர் இலையில் அமர்ந்து உணவைப் பிசைந்து எடுத்துத் தங்களுக்கு எதிரில் உள்ளவர் வாயில் கையை மடக்காது ஒருவருக்கொருவர் ஊட்டிவிட்டனர். இதனால் மனநிறைவுடன் விருந்தினை ருசித்து உண்டனர். தேவர்கள் இதிலும் ஒற்றுமையுடன் சிந்தித்துச் செயல்பட்டதால் வெற்றி பெற்றனர். அசுரர்கள் புரிந்து கொள்ளாது ஒற்றுமையின்றிச் செயல்பட்டதால் விருந்துண்ண முடியாமலேயே சென்றனர். இக்கதை ஒத்துழைப்புடன் வாழ

வேண்டும் என்பதற்காகக் கூறப்பட்டுள்ள கதையாகும். குறையில்லா மனிதர்கள் யாருமில்லை. எல்லோரிடமும் ஏதேனும் குறைபாடு இருந்து கொண்டே இருக்கின்றது. வேற்றுமைகளைப் பெரிதுபடுத்திப் பார்த்தால் வாழ்வில் ஒன்று சேர்ந்து யாரோடும் வாழ முடியாது. வேற்றுமையில் ஒற்றுமை கண்டு ஒத்துழைத்து வாழ்வதுதான் வாழ்க்கையாகும். பிறர் உதவியின்றி இவ்வுலகில் யாரும் இயங்க இயலாது. ஆகையால், ஒருங்கிணைந்தே வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.



தனியாக உள்ள ஒரு மா மரத்தைப் பார்த்து மாந்தோப்பு என்று கூறமாட்டார்கள். அதுபோன்று தனியாள் ஒருவனைப் பார்த்து மக்கள் கூட்டம், சமுதாயம் என்று கூறமாட்டார்கள்.

கேட்டு மகிழ்க

நாட்டின் சுபிட்சத்திற்காக மக்கள் ஒத்துழைப்பு வழங்கி இணைந்து செயல்பட்டுத் தங்களையும் முன்னேற்றிக் கொண்டு, நாட்டினையும் முன்னேற்ற வேண்டும் என்ற சமுதாய வாழ்வியல் அறத்தை இந்த 'ஒற்றுமையே வலிமையாம்' என்ற முன்னோர் வாக்கு வலியுறுத்துகின்றது என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். நன்றி.

**தகவல் துளி**

ஒத்த தறவோன் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் (குறள் 214)

1. கதையில் காணும் ஒத்துழைப்பு பண்புகளை Round Robin முறையில் எழுதி படைத்திடுக.
2. நம் நாட்டின் சுபிட்சத்திற்காக நீ வழங்கிய ஒத்துழைப்பினை ஒரு சிறு குறிப்பாக எழுதி வகுப்பில் படைத்திடுக.

12.1
12.2
12.3
12.4
12.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் சுபிட்சத்திற்காக ஏற்பாடு செய்யப்படும் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதால் ஏற்படும் மனவுணர்வைப் பகிர்ந்து கொள்ளத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

திடப்படுத்துதல்

# பாடம் 7 ஒத்துழைப்பு நல்குவோம்

சாரணி தன் அப்பாவுடன் இலகு இரயிலில் கோலாலம்பூர் மாநகரத்திற்குச் சென்றாள். அவள் வாகன நெரிசலைக் குறைக்க வேண்டும் எனும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு மக்கள் ஒத்துழைப்பு நல்குவதைப் பார்த்து பெருமிதம் கொண்டாள்.




- அன்றாட பணிக்காகப் பொதுமக்கள் அனுதினமும் பொது போக்குவரத்தில் பயணிக்கின்றனர்.
- நெரிசல்களைத் தவிர்ப்பதற்காகப் பயணிகள் விதிமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.
- மக்கள் இவ்வாறு செய்வதால் நாட்டின் சுபிட்சம் காக்கப்படுகிறது.

ஒவ்வொருவரும் விதிமுறையை மதித்து ஒத்துழைத்து செயல்படுவதால் ஏற்படும் மனவுணர்வைக் குறிப்பிடுக.

- திருப்தி
- ✎
- ✎
- ✎

**தகவல் துளி**

பொது போக்குவரத்தைப் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.

1. நாட்டின் பொது உடைமைகளைப் பாதுகாப்பதில் நீ எவ்வாறு ஒத்துழைப்பு நல்குவாய் எனக் கூறுக.
2. நாட்டின் சுபிட்சத்திற்காக அரசாங்கத்தின் திட்டங்களுக்கு நீ எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவாய்?

12.2
12.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் சுபிட்சத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளை மதித்து ஒத்துழைப்பு வழங்குவதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** நாட்டுப்பற்று

திடப்படுத்துதல்

# பாடம் 8 ஒற்றுமையே வலிமையாம்

ரூபா வரவேற்பறையில் அமர்ந்து நாளிதழ் வாசித்துக் கொண்டிருந்தாள். அப்போது அவள் தங்கை நளினாவுடன் நிகழ்ந்த உரையாடல் கீழ்க்காணுமாறு:

நளினா : இன்று என்ன முக்கியச் செய்தி அக்கா?

ரூபா : இந்த நாளிதழில் அண்மையில் நடந்து முடிந்த 'ஒலிம்பிக்', 'பாராலிம்பிக்' விளையாட்டுப் போட்டியில் பங்கெடுத்த மலேசிய அணி குறித்த செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நளினா : ஓ.....அப்படியா, நம் நாட்டில் பல்லின மக்கள் தேசிய அணியில் உள்ளனரே.

ரூபா : ஆமாம் நளினா. நம் நாட்டின் வெற்றிக்கு மதம், இனம், பண்பாடு மற்றும் மொழி பாகுபாடின்றிப் போட்டியாளர்கள் இணைந்து, நற்பெயரைத் தேடித் தந்துள்ளனர்.

நளினா : மிகவும் பெருமையாக இருக்கிறது ரூபா. ஒத்துழைப்பும் ஒற்றுமையும் நம் நாட்டுச் சுபிட்சத்திற்கு வலிமை.


2021 ஒலிம்பிக் போட்டி
№123456789
28.03.2018 | Friday




'உள்நாட்டுப் பொருள்களை வாங்குவோம்' என்ற பிரச்சாரத்தில் நீ எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவாய்?

12.1
12.2
12.3
12.4
12.5

ஆசிரியர் குறிப்பு

- மாணவர்களை ஒத்துழைப்புத் தொடர்பான பாடலுக்கு அபிநயம் பிடித்து 'திக் தோக்' உருவாக்கப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்


குறைநீக்கல்

# பாடம் 9 கைக்கோர்ப்போம் வாரீர்!

நாட்டின் சுபிட்சத்திற்காக மாணவர்களிடையே ஒத்துழைப்புப் பண்பு மேலோங்க ஆசிரியர் திரு.நரேந்திரன் மாணவர்களுக்குக் குழு நடவடிக்கை ஒன்று நடத்தினார்.

நடவடிக்கை:

1. மாணவர்கள் குழு வாரியாகப் பிரிதல்.
2. மாணவர்கள் தங்களின் கையில் வண்ணம் பூசி வெண்தாளில் அச்சிடுதல்.
3. அச்சிட்ட ஒவ்வொரு கையிலும் நாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கும் முறைகளை எழுதுதல்.
4. செய்த ஒத்துழைப்புக் கையை வகுப்பில் படைத்துக் காட்சிக்கு வைத்தல்.




பல்வேறு சூழல்களில் ஒத்துழைப்பு பண்பினை வெளிப்படுத்தும்போது ஏற்படும் மனவுணர்வை மூவேந்தர் முறையில் அமர்ந்து வகுப்பில் கலந்துரையாடவும்.
மூவேந்தர்: தலைப்பையொட்டி A மாணவர் பேசும்போது B மாணவரும் C மாணவரும் செவிமடுப்பர்; கேள்வி கேட்பர். பிறகு B மாணவர் பேசுவார். தொடர்ந்து C மாணவர் பேசுவார்.

12.2
12.4
12.5

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் சுபிட்சத்திற்கான ஒத்துழைப்புப் பண்பினையொட்டிய தங்கள் அனுபவங்களைப் புத்தகத்தில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்

## பாடம் 10 ஒன்றிணைந்து செயல்படுவோம்

**வளப்படுத்துதல்**

நாட்டின் சுபிட்சத்திற்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்புப் பண்பினைச் செயல்படுத்த வேண்டும். ஒரு கை தட்டினால் ஓசை வராது; இரு கைகள் சேர்ந்து தட்டினால் ஓசை வரும் என்ற முதுமொழிக்கு ஏற்ப ஒத்துழைத்து வாழ்வதால் நாட்டின் சுபிட்சம் மேலோங்கும். நூற்றாண்டுக் காலம் கடந்தாலும் நாட்டின் அமைதி சீர்குலையாமல் இருக்க ஒத்துழைப்புப் பண்பைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

**சூழல்கள்**



கலை, பண்பாட்டு இயக்கம் (Kementerian Kesenian dan Warisan) ஏற்பாடு செய்த பாரம்பரிய நடனத்தில் பங்கு கொள்ளுதல்.




தேசிய அளவில் நெடுந்தூர ஓட்டம் நடைபெறவுள்ளது. அப்போட்டியில் உன் பெயரும் பதிவு செய்யப்பட்டுள்ளது.



வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி ஒருவர் உன் நாட்டைப் பற்றி அறிய உன்னை நாடுகிறார்.

**உன் ஒத்துழைப்பு**

**ஒத்துழைப்புப் பண்பு**

நாட்டின் சுபிட்சத்திற்காக ஒத்துழைப்புப் பண்பைச் செயல்படுத்தும் முக்கியத்துவத்தைச் சிந்தனை வரிப்படத்தில் எழுதுக.

12.1
12.2
12.3
12.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் சுபிட்சத்திற்காக ஒத்துழைப்பு வழங்கும்போது ஏற்படும் மனவுணர்வை விளக்கத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

## மதிப்பீடு

செய்துபார்

**1. பின்வரும் கூற்றுகளில் விடுபட்ட இடத்தைப் பூர்த்தி செய்யவும்.**

அ. நாட்டின் சுபிட்சத்திற்காகப் பல்லின மக்களுடன் ________________ புரிவேன்.

ஆ. ஆபத்து அவசர வேளைகளில் அனைவரிடமும் ________________ வழங்கி நாட்டின் நற்பெயரைக் காப்பாற்றுவேன்.

இ. அரசாங்கம் அறிவித்திடும் அனைத்து ________________ ஆதரவு வழங்கிச் செயல்படுவேன்.

ஈ. உள்நாட்டு ________________ பயன்படுத்துவதால் மலேசியாவின் பொருளாதாரம் வலுவடைகிறது.

உ. தேசிய அளவில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் ________________ மகிழ்ச்சி அடைவேன்.

**2. பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**



| | |
|---|---|
| அ. விழாக்காலங்களில் நமக்குப் பாதுகாப்பு வழங்கும் பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வழிகளைக் கூறுக. | |
| ஆ. இம்மாதிரியான விழாக்காலங்களில் பொது உடைமைகளைப் பாதுகாக்க நீ எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவாய்? | |
| இ. அரசாங்கம் நமக்கு இத்தகைய பண்டிகைகளுக்கு அனுமதி வழங்குவதால் உனக்கு ஏற்படும் மனவுணர்வைக் கூறுக. | |

நெறி அறிமுகம்

# தொகுதி 13

# மிதமான மனப்பான்மை

பாட அறிமுகம்

## பாடம் 1 சிக்கனம் சீரளிக்கும்

அளவுஅறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (குறள் 479)

பொருள்: பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை, இருப்பதுபோல் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டுவிடும்.



கருத்துப்படிவம்

## பாடம் 2 சேவையில் மிதம்

மிதமான செயல்களால் நாட்டின் வளப்பத்தை மேம்படுத்தலாம் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்பவும் மலேசிய விவசாயத் துறை அமைச்சின் ஏற்பாட்டிலான மிதமான செயல்திட்ட வாரத்தை முன்னிட்டும் ‘செம்பருத்தி’ கிராமத்தைச் சேர்ந்த திரு.அமுதினியன் அவர்களுக்குச் ‘சிறந்த மிதமான செயல்திட்ட சாதனையாளர்’ என்ற விருது கிடைத்தது. அவரைத் தொலைக்காட்சி அறிவிப்பாளர் நேர்காணல் செய்கிறார்.




2 வணக்கம், மதிப்புக்குரிய அறிவிப்பாளர் அவர்களே.

4 நிச்சயமாக, நான் எனது வசிப்பிடத்தில் விவசாயத் துறையில் பயன்படுத்தும் அதிக செலவில்லாத, சிக்கனமான இயந்திரத்தைக் கண்டுபிடித்தேன்.

6 நான் அறிவியல் புத்தாக்கக் கண்டுபிடிப்பில் ஆர்வம் உள்ளவன். விவசாயத் துறையில்தான் எனது முதுகலை பட்டப்படிப்பையும் முடித்தேன். அதனால் மின்சாரம், எரிவாயு போன்ற சக்திகளைப் பயன்படுத்தாமல் சூரிய சக்தியைப் பயன்படுத்தும் அறுவடை இயந்திரத்தைக் கண்டுபிடித்தேன். இதனால், விவசாயிகளின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடிகிறது. இந்நடவடிக்கை நாட்டின் வளப்பத்திற்குப் பெரிதும் துணைபுரிகிறது.

8 இக்கண்டுபிடிப்பால் என் வசிப்பிட மக்கள் யாவரும் மின்சாரத்தைப் பயன்படுத்தாமல் சூரிய சக்தியின் மூலம் மிதமான முறையில் விவசாயத்தை மேற்கொள்ள முடிகிறது. அதே வேளையில் மக்களும் மனநிம்மதியுடன் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இக்கண்டுபிடிப்பிற்கு நாட்டு மக்களிடையே அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. அதனால், இந்த இயந்திரத்தின் பயன்பாட்டை நாடு தழுவிய அளவில் கொண்டு செல்ல வேண்டும் என்பதே என் அவா. இம்முயற்சியானது நாட்டின் வளப்பத்திற்குப் பெரிதும் துணைபுரியும் என நான் நம்புகிறேன்.

10 இத்துறையில் ஈடுபட விரும்பினால் முதலில் அவர்களுக்கு இத்துறையில் ஆர்வம் இருக்க வேண்டும். விவசாயத் துறையைப் பற்றிய அனைத்து நுணுக்கங்களும் தெரிந்திருக்க வேண்டும். இவற்றைத் தவிர்த்து முயற்சியும் வேட்கையும் இருக்க வேண்டும். இத்தகைய பண்புகள் இருந்தால் அனைவரும் நிச்சயம் இத்துறையில் சாதிக்கலாம்.



12 எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கும் மிக்க நன்றி.

1. நீ அன்றாட வாழ்வில் அமல்படுத்திய மிதமான செயல்களை விவரித்துக் கூறவும்.
2. நாட்டின் வளப்பத்தில் மிதமான பண்பினைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தூற்று முறையில் வகுப்பில் விவாதித்திடுக.

13.1
13.2
13.4

**ஆசிரியர் குறிப்பு**


- நாட்டின் வளப்பத்திற்குத் தேவையான மிதமான செயல்களைப் பட்டியலிடப் பணித்தல்.
- நாட்டின் வளப்பத்திற்குத் தேவையான மிதமான பண்பினை அமல்படுத்துவதால் ஏற்படும் மனவுணர்வைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

கருத்துப்படிவம்


# பாடம் 3 பொது இடங்களில் மிதம்

நமது வசதிக்காக அரசாங்கம் பல பொது நல வசதிகளை ஏற்பாடு செய்துள்ளது. பொது இடங்களில் அவ்வசதிகளை மிதமான மனப்பான்மையுடன் பயன்படுத்த வேண்டும். கீழ்க்காணும் சூழல்களில் நாட்டின் வளப்பத்திற்கு எவ்வாறு மிதமான பண்பினை அமல்படுத்தலாம் என்பதை அறிக.



### பொது கழிப்பறை

- பொது கழிப்பறையை அதிக நேரம் பயன்படுத்தக்கூடாது.
- பொது கழிப்பறையின் தூய்மையைப் பேண வேண்டும்.
- நீரை விரயமாக்காமல் தேவையான அளவு மட்டும் பயன்படுத்த வேண்டும்.



### பொது நூலகம்

- பொது நூலகத்தில் அமைதியைக் கடைப்பிடிப்பது அவசியம்.
- புத்தகங்களை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.
- இரவல் பெற்ற புத்தகங்களைக் குறிப்பிட்ட திகதிக்குள் ஒப்படைத்து விட வேண்டும்.



### விமான நிலையம்

- விமான நிலையத்தில் பிறருக்கு இடையூறு ஏற்படாத வகையில் அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.
- தேவையற்ற இரைச்சல்களைத் தவிர்க்க வேண்டும்.




### இணைய சேவை மையம்

- வீட்டில் இணைய சேவை இல்லாதவர்கள் இணைய சேவை மையத்தைப் பயன்படுத்தும் போது அதிக நேரம் பயன்படுத்தக்கூடாது.
- பிறரும் பயன்படுத்தும் வகையில் கவனமாகக் கையாள வேண்டும்.

1. வேறு சில பொது வசதிகளைப் பயன்படுத்தும் சூழல்களைப் பட்டியலிடுக.
2. பொது இடங்களில் நீங்கள் எவ்வாறான மிதமான மனப்போக்கைக் கடைப்பிடிப்பீர்கள் என்று கூறுக.

13.1
13.2
13.3
13.5

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பினைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்




திடப்படுத்துதல்

# பாடம் 4 நவீன வாழ்க்கை முறையில் மிதமான பண்பு

தேன்மொழி தன் தந்தையுடன் வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்க பேரங்காடிக்குச் சென்றாள். ஆனால், அங்குப் பொதுமக்கள் பொருள்கள் முடிந்து விடுமோ என்ற பீதியில் அளவுக்கு அதிகமான பொருள்களை வாங்கி குவித்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தாள். இதனால், மற்ற பயனீட்டாளர்கள் அவர்களுக்குத் தேவையான பொருள்களை வாங்க முடியாமல் தவித்தனர். எனவே, பயனீட்டாளர்கள் பொதுமக்களின் நலனுக்காகவும் நாட்டின் வளப்பத்திற்காகவும் மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.










அவசரகாலங்களின்போது சந்தையில் பொருள்களின் கையிருப்பு தீர்ந்துவிட்டால் ஏற்படும் விளைவுகள் யாவை என்பதை மேலுள்ள சிந்தனை வரிப்படத்தின் துணையுடன் விவாதிக்கவும்.



13.1
13.2
13.3

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் வளப்பத்திற்காக மிதமான பண்பினைப் புறக்கணிப்பதன் விளைவுகளைத் தொகுத்துக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

## பாடம் 5 உணவகத்தில் மிதமான மனப்பான்மை

திடப்படுத்துதல்

சில நாடுகளில் மக்கள் ஒரு வேளை உணவிற்குக்கூட சிரமப்படுகின்றனர். ஆனால், நம் நாட்டில் 24 மணி நேரமும் உணவகங்கள் செயல்படுகின்றன. மலேசியர்கள் இந்த வசதியை மிதமான பண்புடன் செயலாற்றி மன நிறைவு கொள்ள வேண்டும். நாட்டின் வளப்பத்திற்காக உணவகங்களில் மிதமான பண்பினைக் கடைப்பிடிப்பது நாட்டின் சுபிட்சத்தை வலுப்படுத்தும்.




1. நீ உணவகத்திற்குச் சென்றால் எவ்வாறான மிதமான போக்கைக் கடைப்பிடிப்பாய்?
2. உங்கள் அன்றாட வாழ்க்கையில் நாட்டின் வளப்பத்திற்கு எவ்வாறு மிதமான பண்பைக் கடைப்பிடிப்பீர்கள்?
3. ‘உணவு விரயத்திற்கு அபராதம் உண்டு’ எனும் கூற்று சரியா?

13.2
13.3
13.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் வளப்பத்திற்காக மிதமான பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வைக் கூறுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## பாடம் 6 ஓடிச் சென்று அறிவோம்


குறைநீக்கல்

மாணவர்கள் ‘ஓடிச் சென்று அறிவோம்’ என்ற பின்வரும் விளையாட்டு முறையில் நாட்டின் வளப்பத்திற்காக மேற்கொள்ளும் மிதமான போக்கினை அறிதல்.

தேவையான பொருள்கள்: பந்துகள் (3 நிறங்கள்), காலி கூடைகள் 3, மின் அட்டைகள், ஊதல்

விளையாடும் முறை:

1. ஆசிரியர் 3 கூடைகளில் பந்துகளை நிரப்பி வைத்தல்.
2. ஆசிரியர் ஊதல் ஊதிய பிறகு மாணவர்கள் ஓடிச் சென்று அவர்களுக்குப் பிடித்த நிறத்திலான பந்தை எடுத்தல்.
3. ஆசிரியர் ஆங்காங்கே ஒட்டியிருக்கும் வண்ண மின்னட்டைக்கேற்ப குழு முறையில் நிற்றல்.
4. ஆசிரியர் மிதமான பண்பினைக் கடைப்பிடிக்கும் இடங்களைக் கூறுதல். எ.கா: பேரங்காடி, உணவகம்.
5. மாணவர்கள் குழுவில் சுழல் முறையில் தங்கள் கருத்துகளைக் கூறுதல்.
6. சிறப்பாகக் கருத்துகளைக் கூறிய குழுவிற்கு ஆசிரியர் வெகுமதி வழங்குதல்.



மேற்கண்ட நடவடிக்கைவழி மக்கள் மிதமான பண்பினைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைக் கூறவும்.

13.3
13.4

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் வளப்பத்திற்காக மிதமான செயல்கள் தொடர்பான பொன்மொழிகளைப் பல்வேறு ஊடகங்கள் கொண்டு தயாரித்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்புத்திறன் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

## பாடம் 7 மிதமான வாழ்வே சிறந்தது

வளப்படுத்துதல்

மிதமான பண்பினைக் குறிக்கும் பின்வரும் குழுமப் பேச்சின் சூழலைத் துணைகொண்டு மாணவர்கள் குழுமப் பேச்சு ஒன்றைத் தயாரித்து வகுப்பில் படைக்கவும்.



மிதமான வாழ்வே சிறந்தது

வணக்கம்..! வணக்கம்..!
அனைவருக்கும் மிதமான வணக்கங்கள்!
வேண்டும்..! வேண்டும்..! மிதம் வேண்டும்..!
எதில்..? எதில்..? எதில்..?
வாழ்க்கையில் வேண்டும்!
உணவில் வேண்டும்!
உடையில் வேண்டும்!
ஓ.......!

வேறு மிதம் இல்லையோ..!?
உண்டு..! உண்டு..!
பேச்சிலும் வேண்டும் மிதம்..!
இல்லையேல் துன்பமே நிதம்..!
ஆம்..! ஆம்..! ஆம்..!
நாட்டின் வளப்பத்தில் வேண்டும்..!
மிதமான பண்பு..!
மிதமான செயல்..!

நாட்டின் வளப்பத்திற்கான மிதமான செயல்களைப் புறக்கணிப்பதை ஒட்டி அறிவோட்டவரையைப் படைத்திடுக.

13.1
13.2
13.3

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் வளப்பத்திற்கான மிதமான பண்பைச் செயல்படுத்தும் நடவடிக்கைகளைப் பட்டியலிட்டுக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** படைத்தல் **21ஆம் நூ.தி:** ஆக்கச் சிந்தனை

வளப்படுத்துதல்

## பாடம் 8 மிதமான பயனீட்டாளர்

நாட்டின் வளப்பத்தில் பயனீட்டாளராகிய ஒரு குடிமகனின் பங்கு மிகவும் அளப்பரியது. ஒரு சிறந்த பயனீட்டாளர் பின்வரும் முறையில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கலாம்.

### அறிவார்ந்த பயனீட்டாளரின் பண்புகள்



**#01** விளம்பர அறிக்கைகளைப் பார்த்தல்




**#02** விலையை ஒப்பீடு செய்தல்



**#03** வாங்க வேண்டியதைத் திட்டமிடுதல்



**#04** ஒவ்வொரு பொருளின் விலையையும் கணக்கிடுதல்




**#05** கட்டணத்தைச் செலுத்திய பின் விலை சீட்டைச் சரிபார்த்தல்

**தகவல் துளி**

நெகிழிப் பயன்பாட்டைக் குறைப்பதால் விவசாய நிலம், மணல், நீர்நிலைகள், விலங்குகள், சுற்றுச்சூழல் ஆகியவை மேம்பாடு அடைகின்றன. தட்பவெப்ப நிலை சமன்நிலை அடைவதன் மூலம் நம் நாடு தூய்மையாகவும் பசுமையாகவும் உருமாறும்.

சிறந்த பயனீட்டாளர் என்ற முறையில் பொருள்கள் வாங்கும்போது மிதமான மனப்பான்மையை எவ்வாறு கடைப்பிடிப்பாய்?

13.4
13.5

**ஆசிரியர் குறிப்பு**


- நாட்டின் வளப்பத்தில் மிதமான செயல்களைக் குறிக்கும் படவில்லை காட்சித் தொகுப்பைத் தயாரிக்க ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** பயனீட்டாளர் கல்வி **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

## மதிப்பீடு

செய்துபார்

கீழ்க்காணும் சூழலுக்கு ஏற்ற பதில் எழுதுக.




அ. கூட்டுச்சவாரி என்றால் என்ன?

__________________________________

__________________________________

ஆ. மேற்கண்ட சூழலில் எவ்வாறு மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்கிறார்கள்?

__________________________________

__________________________________

இ. மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.

__________________________________

__________________________________

ஈ. நாட்டின் வளப்பத்திற்காக மிதமான மனப்பான்மையைக் கடைப்பிடிக்காவிடில் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுக.

__________________________________

__________________________________

நெறி அறிமுகம்

# தொகுதி 14

# விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை

பாட அறிமுகம்

## பாடம் 1 விட்டுக்கொடுத்து வாழ்வோம்

பொறுமை, விட்டுக்கொடுத்தல் ஆகிய இரண்டும் மனித வாழ்வில் மிகவும் முக்கியம்.



அப்பா, எதற்காகச் சாலை ஓரத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு வெளியே வந்து நிற்கிறீர்கள்?

அமாட், அங்கே பார். இரத ஊர்வலம் வருகிறது..! பல்லின மக்கள் வாழும் நம் நாட்டில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்க வேண்டியது நமது பண்பாகும்.

கருத்துப்படிவம்

## பாடம் 2 விட்டுக்கொடுக்கும் மக்கள்

தனசீலன் தன் குடும்பத்தாருடன் கோலாலம்பூர் மாநகரத்திற்குச் செல்லும் வழியில் 'நாட்டின் ஒற்றுமைக்காக மக்கள் விட்டுக்கொடுத்து வாழ்தல்' என்ற தலைப்பில் மின்னியல் திரையில் காணொலி ஒன்றைப் பார்த்தான். மின்னியல் திரையில் காட்டப்பட்ட கருத்துகளைத் தன் குடும்பத்தாருடன் கலந்துரையாடினான்.

பல்லின மக்கள் வாழும் மலேசிய நாட்டில் அமைதியும் சுபிட்சமும் நிலைத்து இருப்பதற்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையே முதன்மை காரணமாகும்.

மொழி, இனம், சமயம், பண்பாடு ஆகியவற்றில் வேறுபாடுகளைக் கொண்டுள்ள மலேசிய மக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்வதால் மலேசியாவில் இன்றளவும் நிம்மதி நிலவி வருகிறது.

நாம் ஒருவரிடம் விட்டுக்கொடுக்கும் பண்புடன் நடந்து கொள்ளும்போது அவர் எண்ணத்தில் நம்மைப் பற்றி நற்சிந்தனை உருவாகும்; மதிப்பு உயரும்.

ஆனால், சிலர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிக்காததால் பாதிப்புகள் நிகழ்ந்துள்ளன.

சான்றாக, மருத்துவச் சிகிச்சை வண்டி அபாய ஒலி எழுப்பிக் கொண்டு சாலையில் வரும்போது வழிவிடாமல் தடுப்பது ஆகும். இஃது ஓர் உயிரைக் கொலை செய்ததற்குச் சமமாகும்.

மேலும், பொது போக்குவரத்தில் முதியவர்களுக்கு இருக்கையில் அமர முன்னுரிமை கொடுக்க வேண்டும். முதியவர்கள் அதிக நேரம் நின்றவாறே பொது போக்குவரத்தில் பயணிக்க இயலாது. ஆகவே, இளைஞர்களாகிய நாம் சற்று விட்டுக்கொடுப்பதால் முதியோர்களிடம் நன்மதிப்பையும் ஆசியையும் பெறலாம். இதனால், நமக்கு மனநிறைவு ஏற்படும்.

1. நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் செயல்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
2. நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பின் முக்கியத்துவத்தை விவரித்திடுக.

14.1
14.2
14.3
14.4
14.5

ஆசிரியர் குறிப்பு


- ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் செயல்கள் குறித்து கவிதை இயற்றி வகுப்பில் படைத்திடப் பணித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** ஆக்கச் சிந்தனை **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

கருத்துப்படிவம்

# பாடம் 3 சாலையில் விட்டுக்கொடுப்போம்

ரஹிமா தன் குடும்பத்தாருடன் நோன்பு பெருநாளுக்குக் கிழக்குக்கரை நெடுஞ்சாலையில் பயணம் மேற்கொண்டிருந்தாள். அப்பொழுது காலை 10.00 மணிக்கு வானொலியில் செய்தி வாசிக்கப்பட்டது.




1. பண்டிகை நாள்களின்போது வாகன நெரிசலில் சிக்கிக் கொண்ட அனுபவம் உண்டா? உனது மனவுணர்வை வகுப்பில் கலந்துரையாடுக.
2. பண்டிகை நாள்களின்போது நெடுஞ்சாலைகளில் ஏற்படும் வாகன நெரிசலை எவ்வாறு தவிர்க்கலாம்? உனது கருத்தைக் கூறுக.
3. நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பினைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.

14.1
14.2
14.3
14.4
14.5

ஆசிரியர் குறிப்பு
- நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின் முக்கியத்துவத்தைக் கூறப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** சீர்த்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

கருத்துப்படிவம்

# பாடம் 4 விட்டுக்கொடுப்பதில் மேன்மை

நாட்டு மக்கள் நலன் கருதி அரசாங்கம் பல மேம்பாடுகளைச் செய்து வருகிறது. அப்பணிகளினால் அதிகமான சாலைகள் மூடப்படுகின்றது. அதுமட்டுமின்றி சாலைகள் மேடு பள்ளம், குண்டு குழி என்று இருப்பதால் மக்கள் சாலையில் பயணிக்க சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.




1. நாட்டின் ஒற்றுமைக்காக வேறு எம்மாதிரியான சூழல்களில் விட்டுக்கொடுக்கும் பண்பினைக் கடைப்பிடிப்பாய்?
2. நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பினைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகளைக் கூறச் செய்தல்.

14.1
14.2
14.3
14.4

**ஆசிரியர் குறிப்பு**

- விட்டுக்கொடுப்பதனால் ஏற்படும் மனவுணர்வுகளை மாணவர்கள் மனவோட்டவரைவில் எழுதப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** ஆய்வுச் சிந்தனை **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

கருத்துப்படிவம்

## பாடம் 5 விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஓங்கட்டும்

அனோம் தன் அண்ணனுடன் காற்பந்து அரங்கத்திற்குக் காற்பந்து விளையாட்டுப் போட்டியைக் காணச் சென்றான். பார்வையாளர்கள் தாங்கள் எதிர்பார்த்த குழு வெற்றி பெறாததால் தோல்வியடைந்த குழுவினரை ஏளனம் செய்தார்கள்.




1. நாட்டிற்காக ஒத்துழைப்பு வழங்க இவ்வாறான போட்டிகளை அரங்கத்தில் பார்த்த அனுபவம் உண்டா?
2. ஏளனம் செய்யும்போது ஆர்வலர்கள் அருகில் அமர்ந்திருந்தால் நீ என்ன செய்வாய்?

14.3
14.4

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் செயல்கள் தொடர்பான படத்துண்டுகளைப் பல்வேறு ஊடகங்கள்வழி சேகரித்துக் காண்காட்சி நிகழ்த்தப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** சீர்த்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

திடப்படுத்துதல்

# பாடம் 6 நடைமுறையில் விட்டுக்கொடுப்போம்

பல்லின மக்கள் ஒன்றிணைந்து வாழும் மலேசியத் திருநாட்டில் நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுத்து வாழும் மனப்போக்கைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம். ஒவ்வோர் இனத்தவரின் மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவை வேறுபட்டிருக்கும் நிலையில் நாட்டின் ஒற்றுமைக்காக நாட்டு மக்கள் அனைவரும் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும்.

**சூழல் 1** பள்ளி விடுமுறையின்போது குடும்பத்துடன் கடற்கரையில் முகாம் இட எண்ணியிருந்தாய். ஆனால், அங்குக் கடற்படை வீரர்கள் முகாம் இட்டு பயிற்சிகள் மேற்கொண்டிருந்தனர்.

- விட்டுக்கொடுக்கும் முறை
- முக்கியத்துவம்
- மனவுணர்வு

**சூழல் 2** தேசிய தினத்தை முன்னிட்டு புத்ரா ஜெயாவில் நடைபெறும் அணிவகுப்பைக் காண அப்பாவுடன் வாகனத்தில் சென்று கொண்டிருக்கிறாய். அவ்வேளையில் அவசர மருத்துவ வண்டி அவ்வழியில் வருகிறது.

- விட்டுக்கொடுக்கும் முறை
- முக்கியத்துவம்
- மனவுணர்வு

**சூழல் 3** நீ உன் தந்தையுடன் வாகன உரிமம் புதுப்பிக்க தபால் நிலையத்திற்குச் சென்றுள்ளாய். அவ்வேளையில் இணைய தடங்கல் ஏற்பட்டு விட்டது.

- விட்டுக்கொடுக்கும் முறை
- முக்கியத்துவம்
- மனவுணர்வு

மேற்கண்ட சூழல்களைப் போலித்தம் செய்து காட்டுக.

14.1
14.2
14.4

ஆசிரியர் குறிப்பு

- விட்டுக்கொடுக்கும் செயல்களைக் குறிக்கும் படங்களைப் பல்வகை ஊடகங்களில் தேடி படத்திரட்டு ஒன்றைத் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

# பாடம் 7 விட்டுக்கொடுப்பதில் பெருந்தன்மை

நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பினைக் கடைப்பிடிக்கையில் நம் நாட்டு மக்களிடையே அமைதி நிலவும் என்ற கூற்றுக்கு ஏற்ப மாணவர்கள் வகுப்பில் நாடகம் நடித்தனர்.

## சூழல் 1

திரு.ஜபாரும் திரு.கௌசிகனும் தேசிய பதிவு இலாகாவில் பணிபுரிகின்றனர். நோன்பு பெருநாளின்போது இருவரும் விடுமுறைக்கு விண்ணப்பம் செய்திருந்தனர். இச்சிக்கலை உணர்ந்த திரு.கௌசிகன் தனது விடுமுறையை ரத்து செய்து விட்டார்.

## சூழல் 2

தாமரை முன்னாள் பேரரசர் அரண்மனைக்குத் தன் குடும்பத்தினருடன் வலம் வர மெது ஊர்ந்து வண்டிக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். அப்போது சிறு குழந்தைகளுடன் வந்த முதியவருக்கு வழிவிடுகிறாள்.

## சூழல் 3

இரசாயனக் கழிவால் தூய்மைக்கேடு அடைந்த அணைக்கட்டிலிருந்து நீர் விநியோகத் தடை ஏற்பட்டது. அவ்வேளையில் நாட்டு மக்களுக்குப் பங்கீட்டு முறையில் நீர் விநியோகம் செய்யும்போது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைப் பின்பற்றி வேண்டிய நீரை மட்டும் சேமிப்பேன்.

நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுத்து வாழ்கின்ற வேறு சில சூழல்களைக் கண்டறியச் செய்து வகுப்பில் பாகமேற்று நடித்துக் காட்டுக.

14.1
14.2
14.3
14.4
14.5

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பினைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்தப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

குறைநீக்கல்

# பாடம் 8 ஒற்றுமை கோபுரம்

ருக்குன் நெகாரா கழகத்தைச் சேர்ந்த மணிவண்ணனும் அவனது சக நண்பர்களும் தங்கள் ஆசிரியருடன் இளைஞர், விளையாட்டுத்துறை அமைச்சு ஏற்பாடு செய்திருந்த ஒற்றுமை கேளிக்கை விளையாட்டில் கலந்து கொண்டனர்.

தேவையான பொருள்கள்: காலி கலன், சூழல் அட்டை, குடுவை

விளையாடும் முறை:



1. மாணவர்கள் குழுவாக விளையாடுதல்.
2. ஆசிரியர் சூழல் அட்டைகளைத் தயார் செய்து குடுவையில் போடுதல்.
3. மாணவர்கள் ஓடிச் சென்று அட்டையை எடுத்து வாசித்து அதன் பதிலைக் கூறுதல்.
4. சரியாக விடை கூறும் மாணவர்கள், முன்னே உள்ள மேசையில் காலி கலன் ஒன்றை எடுத்து அடுக்கி ஒற்றுமை கோபுரம் உருவாக்குதல்.
5. விடை கூற இயலாத மாணவர்கள் சூழல் அட்டையை வைத்து விட்டு மீண்டும் வரிசையில் நிற்றல்.
6. ஒற்றுமை கோபுரத்தை முதலில் பூர்த்தி செய்யும் குழுவே வெற்றியாளராகக் கருதப்படுவர்.

**மாதிரி சூழல் அட்டை 1**

நீ ஆதரவு வழங்கிய காற்பந்து அணி போட்டியில் தோல்வி கண்டது. அதை உன் நண்பன் கேலி செய்கிறான். நீ என்ன செய்வாய்?

**மாதிரி சூழல் அட்டை 2**

நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுத்து வாழ்வதால் உனக்கு ஏற்படும் மனவுணர்வு என்னவாக இருக்கும்?

1. நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பின் முக்கியத்துவத்தைக் கூறுக.
2. நாட்டின் ஒற்றுமைக்காக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழாவிட்டால் என்ன நேரிடும் என ஊகித்துக் கூறுக.

14.1
14.2
14.3
14.4

ஆசிரியர் குறிப்பு

- நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை மேலோங்க எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதனைக் கலந்துரையாடிப் பட்டியலிடப் பணித்தல்.
- அதிகமான சூழல் அட்டைகள் தயாரிக்கப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர் / பரிவுள்ளவர்

## பாடம் 9 துரிதமாக யோசிப்போம்

ஆசிரியர் மாணவர்களுக்குச் சூழல் அட்டையைக் கொடுத்து அதிலுள்ள சூழலுக்கு ஏற்ப நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் செயலை எழுதப் பணித்தார்.

கீழ்க்காணும் சூழ்நிலையின்போது நீ எவ்வாறு செயல்படுவாய்?








**விட்டுக்கொடுத்தல்**

காரணம்:
விட்டுக்கொடுத்துச் செல்வதால் மதம் சார்ந்த பிரச்சனைகள் குறையும்

விளைவு:

______________________________

______________________________

**விட்டுக்கொடுக்காமை**

காரணம்:

______________________________

______________________________

விளைவு:
ஆபத்து அவசர வேளைகளில் உயிர் சேதம் ஏற்பட வாய்ப்புண்டு

நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுத்து வாழும் முறைகளையும் அவற்றால் ஏற்படும் நன்மைகளையும் பேருந்து (Bus Stop) நடவடிக்கைவழி கலந்துரையாடுக.

14.1
14.2
14.3

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் செயல்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கச் செய்தல்.
- நாட்டின் ஒற்றுமை குறித்து கவிதை இயற்ற தூண்டுதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்

வளப்படுத்துதல்

# பாடம் 10 விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஓங்கட்டும்

தாரணி தன் அம்மாவுடன் இரவுச் சந்தைக்குச் சென்றிருந்தாள். அங்குப் பல்லின மக்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடித்துச் செயல்பட்டதைக் கவனித்தாள்.



மக்கள் மாற்று சாலையைப் பயன்படுத்துதல்

வாகனமோட்டிகள் வாகனங்களை முறையாக நிறுத்தி வைத்துச் செல்லுதல்

உணவு கூடாரங்களைப் பகிர்ந்து பயன்படுத்துதல்

மக்கள் விட்டுக்கொடுத்து உணவுகளை வாங்குதல்

குப்பைகளை முறையாக வீசி சுத்தத்தைப் பேணுதல்



இரவுச் சந்தைக்குச் சென்ற அனுபவம் உனக்கு உண்டா? அங்கு நீ கற்றுக் கொண்ட பண்புக்கூறுகளை உன் நண்பர்களோடு கலந்துரையாடுக.

14.1
14.2
14.3
14.4

**ஆசிரியர் குறிப்பு**

- நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பின் மனவுணர்வை வட்ட மேசையில் கலந்துரையாடப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** சீர்தூக்கிப் பார்த்தல் **21ஆம் நூ.தி:** தொழில் முனைப்பு திறன்




## மதிப்பீடு

செய்துபார்

அ. சவாலைச் சமாளித்துக் காட்டுக.

1. பிற இனத்தவர்களின் பண்பாட்டையும் வழக்கங்களையும் அறிந்து நாட்டின் ஒற்றுமைக்காக ______________ வாழ வேண்டும்.

2. நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் சிக்கல் ஏற்படும்போது ______________ காப்போம்.

3. எந்த நிலையிலும் நாட்டின் நன்மைக்காக ______________ அவசியம்.

4. நாட்டின் ______________க்காக நமக்குச் சகிப்புத் தன்மையும் பொறுமையும் மிகவும் முக்கியமாகும்.

5. மலேசியர்கள் எச்சூழலிலும் ஒற்றுமையாக வாழ ______________ அவசியம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | | | | |
| | | | | | | | | | |
| | | | | 2 | | | | | |
| | 4 | | | மை | | | | | |
| | | | | | | | | | |
| 3 | | | | | டு | | | | |
| | | | | | | | | | |
| | | 5 | | | து | | | | |
| | | | | | | | | | |

ஆ. நாட்டின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுக்கும் பண்பின் முக்கியத்துவத்தை எழுதுக.

______________________________________________

______________________________________________

Dengan ini **SAYA BERJANJI** akan menjaga buku ini
dengan baiknya dan bertanggungjawab atas kehilangannya
serta mengembalikannya kepada pihak sekolah
pada tarikh yang ditetapkan

**Skim Pinjaman Buku Teks**

**Sekolah** ______________________________

| Tahun | Darjah | Nama Penerima | Tarikh Terima |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

Nombor Perolehan : ______________________________

Tarikh Penerimaan : ______________________________

**BUKU INI TIDAK BOLEH DIJUAL**